இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

★★★★★

# இயல் 5

**பலவுள் தெரிக.**

1. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.**
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. விடை: ..............................

2. **அருந்துணை என்பதைப் பிரித்தால்**
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை விடை: ..............................

3. **''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ........................ வினா.**
**'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ........................ விடை.**
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை விடை: ..............................

4. **''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை''**
**- என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?**
அ) தமிழ் ஆ) அறிவியல்
இ) கல்வி ஈ) இலக்கியம் விடை: ..............................

5. **இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ........................ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ........................**
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன் விடை: ..............................

**குறுவினா.**

1. "கழிந்த பெரும்கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்''
– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?
2. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
3. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
4. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுது.

5. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ. இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?
மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

**பயிற்சிகள்**

**1. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

1. “காமராசர் நகர் எங்கே இருக்கிறது?” “இந்த வழியாகச் செல்லுங்கள்.” – என்று விடையளிப்பது.
   காமராசர் நகர் எங்கே இருக்கிறது? ..............................................
   ‘இந்த வழியாகச் செல்லுங்கள் ’ என்று விடையளிப்பது. ..............................................
2. “எனக்கு எழுதித் தருகிறாயா?” என்ற வினாவுக்கு, “எனக்கு யார் எழுதித் தருவார்கள்?” என்று விடையளிப்பது.
   எனக்கு யார் எழுதித்தருவார்கள் என்று விடையளிப்பது. ..............................................

**கூடுதல்**

1. இந்த நூற்பா தொல்காப்பியமா? நன்னூலா?
   “இது நன்னூல்; என்று விடையளிப்பது. ..............................................
2. வீட்டில் சர்க்கரை இல்லை. நீ வாங்கி வருகிறாயா? என்று
   அம்மா மகனிடம் சொன்னார். போவேன் என்று மகன் கூறினான். ..............................................

**2. உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? ..............................
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். ..............................
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு? ..............................
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்! ..............................
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா? ..............................
பாமகள் : ஏன் வராமல்? ..............................

**கூடுதல்**

சிந்து : வணக்கம் மகிழினி! ஏதோ எழுதுகிறீர்கள் கதையா? கவிதையா? ..............................
மகிழினி : ஆமாம்! சிறுகதைப் போட்டிக்குக் கதை எழுதிக் கொண்டிருக்கிறேன். ..............................
சிந்து : அப்படியா! எனக்கும் கதை எழுதக் கற்றுத் தருகிறாயா? ..............................
மகிழினி : என்னுயிர்த் தோழி உனக்குக் கற்றுத்தராமலா இருப்பேன். ..............................
சிந்து : நன்றி!

**3. மொழிபெயர்க்க.**

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| யாழிசை | It’s like new lute music | |
|---|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்<br>பேத்தி,<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>– *பாரதிதாசன்* | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation<br>*Translated by Kavignar Desini* | Lute music - ..............................<br>Chamber - ..............................<br>at look up - ..............................<br>Grand daughter - ..............................<br>rote - ..............................<br>didactic compilation - .............................. |

4. **அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | 1. | சொல்லிச் சென்றார் | 2. | கதையைச் சொன்னார் |
| தா | 3. | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | 4. |
| பார் | துளிர் பார்த்தாள் | 5. | பார்த்துச் சிரித்தாள் | 6. | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | 7. | குழந்தையே வா! | 8. |

**கூடுதல்**

**அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| செல் | 1. | 2. | சென்று வந்தாள் | மீனா செல்லாதே! | மீனாவுக்காக சென்றாள் |
| பெறு | மணி பெற்றார் | 3. | பெற்றுச் சென்றார் | 4. | பெறுவதைக் கொடுத்தார் |
| உரை | 5. | உரைத்த அரசர் | உரைத்து சென்றார் | அரசரே உரைத்தார்! | 6. |
| காண் | செல்வி கண்டாள் | 7. | கண்டுசிரித்தாள் | 8. | செல்வியைக் கண்டேன் |
| போ | பசு போனது | போன பசு | 9. | பசுவே போ! | 10. |

5. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

...............................................................................................................................

2. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

...............................................................................................................................

3. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

...............................................................................................................................

4. கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.

...............................................................................................................................

5. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

...............................................................................................................................

**கூடுதல்**

1. சிந்தனையே மனிதனை உயர்த்தும்.

...............................................................................................................................

2. சாதனைகளுக்குச் சோதனையும் ஒருவிதத்தில் காரணம் ஆகும்.

.......................................................................................................................

3. தமிழின் சுவையை அனைவரும் உணர வேண்டும்.

.......................................................................................................................

4. அன்பு கொண்டவர்களால் உலகம் இயங்குகின்றது.

.......................................................................................................................

**6. புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுவதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே வருவதைக் கூறுவேன். நான் யார்? ..........................................................

**கூடுதல்**

ஒற்றைக்கால் கொண்டவன் மாற்றுத்திறனாளியில்லை
மணமானவன் ஆனால் திருமணமாகவில்லை
திருமண வீட்டில் இருப்பான் மணமகன் அல்ல
பெண்களுக்குப் பிரியமானவன். நான் யார்? ..........................................................

**7. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ............................... யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ............................... நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதைத்தல், புதையல்)
2. காட்டு விலங்குகளைச் ............................... தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் ............................... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
3. காற்றின் மெல்லிய ............................... பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான ............................... பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)
4. பசுமையான ............................... ஐக் ............................... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
5. பொது வாழ்வில் ............................... கூடாது. ............................... இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

**கூடுதல்**

1. நெல்மணியை மண்ணில் ............................... செய்யும் போது இயற்கை உரமிட்டால் பயிர் ............................... இயற்கைச் சத்துடன் இருக்கும். (விளைச்சல், விதைத்தல்)
2. கவிஞனின் கவிதை ............................... தொழில் என்பது இறைவன் ஒன்றைப் ............................... போன்றது. (படைப்பு, படைத்தல்)
3. தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிக்கை ............................... செய்ததை, நிர்வாகம் ஏற்காததால் தொழிலாளர்கள் ............................... எடுத்தனர். (விடுத்தல், விடுப்பு)
4. கொரானோ பரவுவதைத் ............................... செய்ய, ............................... நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. (தடுப்பு, தடுத்தல்)

**8. அகராதிப் பொருள் எழுதுக.**

1. மன்றல் – ..........................................................................................
2. அடிச் சுவடு – ..........................................................................................
3. அகராதி – ..........................................................................................
4. தூவல் – ..........................................................................................
5. மருள் – ..........................................................................................

9. **காட்சியைக் கவினுற எழுதுக.**



10. **கொடுக்கப்பட்ட கட்டத்தில் உள்ளவற்றை நன்றாகப் படித்து, அதற்கேற்றவாறு உம் விடையை எழுதுக.**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | |
| | |
| | |

11. **கலைச்சொல் தருக.**

1. Emblem - ............................................
2. Thesis - ............................................
3. Intellectual - ............................................
4. Symbolism - ............................................

★★★★★

# இயல் 6

**பலவுள் தெரிக.**

1. **குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்**
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
   ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள் விடை: ..............................

2. **ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?**
   அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
   ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர். விடை: ..............................

3. **மலர்கள் தரையில் நழுவும். எப்போது?**
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால் விடை: ..............................

**4. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?**

அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை? விடை: ..............................

**5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால் விடை: ..............................

## குறுவினா

1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
2. “நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!” என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.
3. உறங்குகின்ற கும்பகன்ன! ‘எழுந்திராய் எழுந்திராய்’
காலதூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
4. “சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்” – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்.
முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
6. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.
7. தஞ்சம் எளியன் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.
8. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?
9. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

## பயிற்சிகள்

**1. மொழிபெயர்க்க:**

**Koothu**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient Puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

**2. தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

1. அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.
   (தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக)

   ..............................................................................................................

2. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)

   ..............................................................................................................

3. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.
   (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)

   ..............................................................................................................

4. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
   (கலவைச் சொற்றொடராக மாற்றுக)

   ..............................................................................................................

5. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

   ..............................................................................................................

**கூடுதல்**

1. பாரதியார் எழுதுகோலை எடுத்தார். அதைக் கொண்டு ஏட்டில் எழுதினார். அது கவிதையாக மலர்ந்தது. (தொடர் சொற்றொடராக மாற்றுக)

   ..............................................................................................................

2. நேற்று மழை பெய்தது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. (கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக.)

   ..............................................................................................................

3. காமராசர் எளிமையாக வாழ்ந்ததால் மக்களால் போற்றப்பட்டார். (தனிச் சொற்றொடராக மாற்றுக)

   ..............................................................................................................

4. தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் கொரோனா பரவல் பெரும்பான்மை தடுக்கப்பட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)

   ..............................................................................................................

**3. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றுக.**

புதிர்:

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

விடை:

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட் ஆனால், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**4. நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.**

1. பாடல் : ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே!
அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!
தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!
வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்
வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி! யம்மாடி!
வாழைமரம் வாடலாமோ யம்மாடி! யம்மாடி!

பாடல் எழுந்த சூழல் : ..............................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

2. பாடல்

பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்
பள்ளிக்கூடம் தானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்
எழுத்துவகை தானறியேன்.
படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்
பங்காளிய ஏன் தேடுறேன்
எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்
எதிராளிய ஏன் தேடுறேன்
நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்
நாலு தேசம் போய்வருவேன்.
நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்
நான் பாடுறேன் தெம்மாங்குதான்.

பாடல் எழுந்த சூழல்:

**5. மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

| | |
|---|---|
| வண்டுகளை ஈர்க்கும் வாசனையில் | பூக்களிடம் விழுவது மனிதர்களே! |
| பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே! | .................................................... |
| பூச்சியைக் கவரும் வண்ணங்களில் | .................................................... |

**கூடுதல்**

**நட்புக்கும் திங்களுக்கும் ஒற்றுமை உள்ளது இந்த நயவுரையைத் தொடர்க.**

| | |
|---|---|
| நீ என்ற ஓரெழுத்தும் | திங்கள் என்ற நான்கெழுத்தில் ஒப்புமையானோம் |
| நான் என்ற ஈரெழுத்தும் | .................................................... |
| நட்பு என்ற மூன்றெழுத்தில் இணைந்து | .................................................... |

**6. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் .................................... தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ....................................

3. ..................................... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ..................................... புல்வெளிகளில் கதிரவனின் ..................................... வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் ..................................... விடும்.

**கூடுதல்**

1. வானவில் ..................................... அழகானது.
2. விருந்தினரை நன்கு வரவேற்றால் அவர்கள் முகம் .....................................
3. நூல்களைப் படிக்க படிக்க மனம் .....................................
4. ..................................... ஓவியம் புனைய புனைய எண்ணம் மேம்படும்.
5. அறுசுவை உணவில் .....................................யை அனைவரும் விரும்புவர்.

**7. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து. |
|---|

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு .................... வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவை தரும் ....................
2. காலை ஒளியினில் மலரிதழ் .................... சோலைப் பூவினில் வண்டினம் ....................
3. மலை முகட்டில் மேகம் .................... அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் ....................
4. வாழ்க்கையில் .................... மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய்த் .................... கூத்து சொல்லும்.
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே .................... - அதில் வரும்காசு குறைந்தாலும் அதுவே அவர் ....................

**கூடுதல்**

| மரம், தரம், வீடு, மகிழும், நெகிழும், நாடு, உண்மை, பொய்மை, மறந்தான், மருந்தை. |
|---|

1. விளையாட்டில் மனம் .................... கைத்தட்டலில் வீரர்கள் மனம் ....................
2. இசைக்கலைஞர்களுக்கு இசையே .................... அவர்களின் விரலே ....................
3. .................... உயர்வு தரும். அது இல்லாத .................... தாழ்வு தரும்.
4. .................... வரம். அதுவே உயிர்த் ....................
5. மனிதன் .................... மரத்தை, அதனால் .................... வளர்த்தான்.

**8. அகராதிப் பொருள் எழுதுக.**

1. தால் : ..........................................................................................
2. உழுவை : ..........................................................................................
3. அகவுதல் : ..........................................................................................
4. ஏந்தெழில்: ..........................................................................................
5. அணிமை : ..........................................................................................

**9. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



10. அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு

மண்ணின் மக்கள்... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.
இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

**11. கலைச்சொல் தருக.**

1. Aesthetics - ..........................................
2. Terminology - ..........................................
3. Artifacts - ..........................................
4. Myth - ..........................................

★★★★★

## இயல் 7

**1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண் விடை: .............................

**2. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே .................**

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும் விடை: .............................

**3. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்?**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர் விடை: .............................

**4. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ..................**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல் விடை: .............................

**5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..................**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம் விடை: .............................

### குறுவினா

1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
3. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

## பயிற்சிகள்

**1. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்- ம.பொ.சி.

..................................................

..................................................

..................................................

**2. மொழிபெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

..................................................

..................................................

..................................................

..................................................

**3. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

**கூடுதல்**

1. வரச் சொல்கிறேன்

..................................................

2. தன்னம்பிக்கை கொள்கிறேன்

..................................................

3. வாகை சூடினேன்

..................................................

4. காலம் கழிந்தது

..................................................

5. கடந்து போகும்

..................................................

**4. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும்.

முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

**கூடுதல்**

முத்தமிழ் தந்த முப்பால் இருவினை போக்கி ஐந்திணையில் நாற்றிசையும்பரவி ஐம்பொறியும் அதனை வாழ்த்தி நிற்கும்.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

5. **கவிதையை உரையாடலாக மாற்றுக.**

| | கவிதை | உரையாடல் |
|---|---|---|
| மகள் சொல்லுகிறாள் | அம்மா என் காதுக்கொரு தோடு – நீ<br>அவசியம் வாங்கி வந்து போடு!<br>சும்மா இருக்க முடியாது – நான்<br>சொல்லி விட்டேன் உனக்கு<br>இப்போது! | |
| தாய் சொல்லுகிறாள் | காதுக்குக் கம்மல் அழகன்று – நான்<br>கழறுவதைக் கவனி நன்று<br>நீதர் மொழியை வெகுபணிவாய் –<br>நிதம்<br>நீ கேட்டு வந்து காதில் அணிவாய்! | |
| மகள் மேலும் சொல்லுகிறாள் | கைக்கிரண்டு வளையல் வீதம் – நீ<br>கடன்பட்டுப் போட்டிடினும்<br>போதும்!<br>பக்கியென் றென்னை யெல்லோரும் –என்<br>பாடசாலையிற் சொல்ல நேரும்! | |
| தாய் சொல்லும் சமாதானம் | வாரா விருந்து வந்த களையில்–அவர்<br>மகிழ உபசரித்தால் வளையல்!<br>ஆராவமுதே மதி துலங்கு –<br>பெண்ணே<br>அவர்சொல்வ துன்கைகட்கு<br>விலங்கு! | |
| பின்னும் மகள் | ஆபரணங்கள் இல்லை யானால் –<br>என்னை<br>யார் மதிப்பார் தெருவில் போனால்?<br>கோபமோ அம்மா இதைச் சொன்னால்<br>– என்<br>குறைதவிர்க்க முடியும் | |

| | | |
|---|---|---|
| அதற்குத் தாய்: | கற்பது பெண்களுக்கா பரணம் – கெம்புக்<br>கல்வைத்த, நகைதீராத ரணம்!<br>கற்ற பெண்களை இந்த நாடு-தன்<br>கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு!<br>– பாரதிதாசன் | |

**6. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**

தஞ்சாவூர் ........................................ புதுச்சேரி ........................................

புதுக்கோட்டை ........................................ கும்பகோணம் ........................................

திருச்சிராப்பள்ளி ........................................ திருநெல்வேலி ........................................

உதகமண்டலம் ........................................ மன்னார்குடி ........................................

கோயம்புத்தூர் ........................................ மயிலாப்பூர் ........................................

நாகப்பட்டினம் ........................................ சைதாப்பேட்டை ........................................

**7. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**


வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை , யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

செய்தி:

**8. அகராதிப் பொருள் எழுதுக.**

1. மிரியல் – ........................................................................................................
2. வருத்தனை – ........................................................................................................
3. அதசி – ........................................................................................................
4. துரிஞ்சில் – ........................................................................................................

**9. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**10. கலைச்சொல் தருக.**

1. Consulate - ........................................
2. Guild - ........................................
3. Patent - ........................................
4. Irrigation - ........................................
5. Document - ........................................
6. Territory - ........................................

11. அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும் படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன். |
| கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | |
| | |

★★★★★

# இயல் 8

**பலவுள் தெரிக.**

1. **மேன்மை தரும் அறம் என்பது .................**
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது.
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.
இ) புகழ் கருதி அறம் செய்வது.
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது. விடை: .............................

2. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ...................**
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி விடை: .............................

3. **வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ..................**
அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை
ஈ) வண்ணம் பூசுவதை விடை: .............................

4. **காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ...................**
அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்.
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால். விடை: .............................

5. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ....................**
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா விடை: .............................

### குறுவினா

1. “கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது.”
அ) அடி எதுகையை எழுதுக. ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக: கொள்க, குரைக்க.
2. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.
3. குறிப்பு வரைக: அவையம்.
4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

### பயிற்சிகள்

**1. மொழிபெயர்க்க:**

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, “He is helped whom God helps”. The Second beggar used to cry, “He is helped who the king helps”. This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, “What have you done with the loaf of bread that I had sent you lately?” The man replied, “I sold it to my friend, because it was heavy and did not seem well baked” Then the Emperor said, “Truly he whom God helps is helped indeed,” and turned the beggar out of his palace.

..............................................................................................................................
..............................................................................................................................
..............................................................................................................................
..............................................................................................................................
..............................................................................................................................
..............................................................................................................................

**2. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

1. மனக்கோட்டை : ..........................................................................................
2. கண்ணும் கருத்தும் : ..........................................................................................
3. அள்ளி இறைத்தல் : ..........................................................................................
4 ஆறப்போடுதல் : ..........................................................................................

### கூடுதல்

1. அள்ளிக் குவித்தல் : ..........................................................................................
2. அரைமனிதன் : ..........................................................................................
3. ஆகாயக்கோட்டை : ..........................................................................................
4. இலவு காத்த கிளி : ..........................................................................................
5. காது குத்தல் : ..........................................................................................

**3. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

"தம்பீ எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."

"அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிட்டு இரு.. நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெய் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

"அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனேக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்ப அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"

"இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிடேன்..."

"சரிங்கண்ணே"

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

**4. கண்டுபிடித்து எழுதுக.**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம்பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

**5. சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.**

1. கானடை

2. வருந்தாமரை

3. பிண்ணாக்கு

4. பலகையொலி

**கூடுதல்**

1. வெங்காயம்

2. சீரகம்

3. பெருங்காயம்

**6. அகராதிப் பொருள் தருக.**

1. ஆசுகவி - ..................................................

2 மதுரகவி - ..................................................

3. சித்திரகவி - ..................................................

4. வித்தாரகவி - ..................................................

**7. கலைச்சொல் தருக.**

1. Belief - ..................................

2. Renaissance - ..................................

3. Philosopher - ..................................

4. Revivalism - ..................................

**8. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**9. மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்.**

| நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம். எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | |

★★★★★

# இயல் 9

## பலவுள் தெரிக.

**1. 'இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்'**
**- இவ்வடிகளில் கற்காலம் என்பது .....................**

அ) தலைவிதி ஆ) பழையகாலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது விடை: .............................

**2. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது .....................**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள் விடை: .............................

**3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ....................., ..................... வேண்டினார்.**

அ) கருணையன், எலிசபெத்துக்காக
ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக
ஈ) எலிசபெத், பூமிக்காக விடை: .............................

**4. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி?**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம் விடை: .............................

**5. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்**
**- இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது?**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார். விடை: .............................

## குறுவினா

1. தீவக அணியின் வகைகள் யாவை?
2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு
   - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
3. காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் - உவமை உணர்த்தும் கருத்து யாது?
4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.
   - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

## பயிற்சிகள்

**1. மொழிபெயர்க்க.**

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein.

   .............................................................................................................

2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb

..........................................................................................

3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle

..........................................................................................

4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

..........................................................................................

**2. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. தாமரை இலை நீர் போல

..........................................................................................

2. மழைமுகம் காணாப் பயிர்போல

..........................................................................................

3. கண்ணினைக் காக்கும் இமைபோல

..........................................................................................

4. சிலை மேல் எழுத்து போல

..........................................................................................

**கூடுதல்**

1. ஆலை அகப்பட்ட கரும்பு

..........................................................................................

2. உயிரும் உடம்பும் போல

..........................................................................................

3. வேலியே பயிரை மேய்ந்தது போல

..........................................................................................

4. இடியோசை கேட்ட நாகம் போல

..........................................................................................

**3. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.**

சேரனின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**4. பாடலில் இடம்பெற்றுள்ளத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிக.**

கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ

..........................................................................................

..........................................................................................

5. **விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.**




..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

6. **கீழ்க்காணும் நாட்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

7. **அகராதிப் பொருள் எழுதுக.**

1. குணதரன் - ..............................................................................
2. செவ்வை - ..............................................................................
3. நகல் - ..............................................................................
4. பூட்கை - ..............................................................................

8. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



9. **நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...**

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது. | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு அவருக்கு மகிழ்ச்சி. |

| | |
|---|---|
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது. | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு. |
| | |

**10. கலைச்சொல் தருக.**

1. Humanism - ..........................................................
2. Cultural Boundaries - ..........................................................
3. Cabinet - ..........................................................
4. Cultural values - ..........................................................

★★★★★

# அணி இலக்கணம்

**1. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று - இக்குறளில் பயின்று வரும் அணி விளக்குக?**

இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

உவமேயம் : நச்சப் படாதவன் செல்வம்

உவமை : நடுஊருள் நச்சு மரம்

உவம உருபு : அற்று (வெளிப்படை)

**விளக்கம் :**

பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம் ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

**2. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இப்பாடலில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.

உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.

உவம உருபு : போல (வெளிப்படை)

**விளக்கம் :**

ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது ஆகும்.

**3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண் - இக்குறளில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.**

இப்பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவமஉருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

உவமை : பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயனில்லை.

உவமேயம் : இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.

உவமஉருபு : போல (மறைந்து வந்துள்ளது)

**விளக்கம் :**

பாடலோடு பொருந்தவில்லை எனில் இசையால் பயன் இல்லை. அதுபோலவே, இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் பயன் இல்லை.

4. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொல் பின்வருநிலையணி.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலையணி ஆகும்.

**விளக்கம்:**

இக்குறட்பாவில் **பொருள்** என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து **பொருட்டு, செல்வம்** ஆகிய வெவ்வேறு பொருளைத் தருகிறது. எனவே, இக்குறட்பா சொல் பின்வருநிலையணிக்குச் சான்றாகிறது.

5. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**
**றுண்டாகச் செய்வான் வினை - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி.

**அணி இலக்கணம்:**

செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

உவமை : மலைமேல் பாதுகாப்பாக நின்று யானைப் போரைக் காணுதல்.

உவமேயம் : தன் கைப்பொருளைக் கொண்டு செய்யும் செயல்.

உவம உருபு : அற்று (வெளிப்படை)

**பொருத்தம்:**

தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது போன்றது ஆகும்.

6. **இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொற்பொருள் பின்வருநிலையணி.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**பொருள் விளக்கம்:**

இக்குறட்பாவில் இன்மை என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து **வறுமை** என்னும் ஒரே பொருளைத் தருகிறது. எனவே, இக்குறட்பா சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

**7. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**
**மேவன செய்தொழுக லான் - இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி வஞ்சப் புகழ்ச்சி அணி.

**அணி இலக்கணம்:**
பழிப்பது போலப் புகழ்வதும் புகழ்வது போலப் பழிப்பதும் வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகும். இப்பாடல் புகழ்வது போலக் கூறி பழிக்கப்பட்டுள்ளது.

**விளக்கம்:**

புகழ்தல் – கயவர் தேவர்களுக்கு ஒப்பாவர்

பழித்தல் – கயவர் தம் மனம் போன போக்கில் தீய செயல்களைச் செய்வார்கள்.

தேவரும் கயவரும் ஒரு தன்மையர். தேவரைப் போல கயவரும் தாம் விரும்பியதை செய்வர் என்று புகழ்வது போல பழித்தலால், இஃது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

**8. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் கூறி விளக்குக.**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமை அணி ஆகும்.

**அணி இலக்கணம்:**
செய்யுளில் உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும், உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

உவமை : கயவர் மக்களைப் போல் இருப்பர்.

உவமேயம் : தோற்ற ஒப்புமையைத் தவிர வேறெந்த ஒப்புமையும் இல்லை.

உவம உருபு : அன்ன (வெளிப்படை)

**விளக்கம் :**
கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவருக்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் காண்பதில்லை.

**9. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.**

**அணி இலக்கணம்:**
இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை (கருத்தை) ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ.கா:** “போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
‘வாரல்’ என்பனபோல் மறித்துக்கை காட்ட”

**பாடல் பொருள்:**

கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கைகாட்டியது என்பது பொருள்.

**விளக்கம்:**
கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேல் இருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன.

ஆனால் இளங்கோவடிகள், மதுரையில் கோவலன் கொலை செய்யப்படுவான் எனக் கருதி அக்கொடிகள், கையை அசைத்து ‘இம் மதுரைக்குள் வரவேண்டா’ என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாக தன் கருத்தைக் கொடியின் மேல் ஏற்றிக் கூறுகிறார். எனவே இப்பாடல் தற்குறிப்பேற்ற அணிக்குச் சான்றாகியது.

**10. நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக.**

**அணி இலக்கணம்:**

நிரல் - வரிசை; நிறை - நிறுத்துல்.

சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**சான்று:** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணிப் பொருத்தம்:**

இக்குறளில் "அன்பும் அறனும்" என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி "பண்பும் பயனும்" என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணிக்குச் சிறந்த சான்றாகும்.

**11. தீவக அணியை விளக்கி, சான்று கூறுக.**

**அணி இலக்கணம்:**

தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவது தீவக அணி என்பர்.

**சான்று:** "சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து
திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,
மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து"

**பாடலின் பொருள்:**

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. கண்கள் சிவந்த அளவில் பகை மன்னர்களின் தோள்கள் சிவந்தன. இரத்தம் பாய்ந்த திசைகள் அனைத்தும் சிவந்தன; அம்புகள் சிவந்தன. இரத்தம் மேலே வீழ்வதால் பறவைகள் சிவந்தன.

**அணிப்பொருத்தம்:**

முதலில் உள்ள சேந்தன (சிவந்தன) என்ற சொல் பாடலில் கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

**12. 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்' அணி எது? சான்றுடன் விளக்குக. (அல்லது) தன்மை நவிற்சி அணியைச் சான்றுடன் விளக்கு.**

**அணி இலக்கணம்:**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணி ஆகும். இதனை தன்மை நவிற்சியணி என்றும் கூறுவர்.

**சான்று:** "மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக் கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகைதன்
உண்டளவே தோற்றான் உயிர்."

**பாடலின் பொருள்:**

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை பாயும் நகரத்து அரசன் பாண்டியன் தோற்றான். அவளது சொல் கேட்டு உயிர் நீத்தான்.

**அணிப்பொருத்தம்:**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாடு உரிய சொற்களின் மூலம் கூறியமையால் தன்மை நவிற்சியணி எனப்படும்.

★★★★★

## பாடலைப் படித்து விடை எழுதுதல்

**1.** காற்றே வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த
ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

**வினாக்கள் :**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியரின் பெயர் என்ன?
3. பொருள் தருக. அ) மயலுறுத்து ஆ) ப்ராண - ரஸம்
4. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
5. 'சுமந்து' என்ற சொல்லிற்கான இலக்கணக் குறிப்பை எழுதுக.

**விடைகள்:**

1. காற்றே வா 2. பாரதியார் 3. அ) மயங்கச்செய் ஆ) உயிர் வளி
4. மகரந்த, மனத்தை - சீர் மோனை; மகரந்த, மயலுறுத்து - அடிமோனை. 5. வினையெச்சம

---

**2.** சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய"

**வினாக்கள் :**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார்?
3. சுவல் என்பதன் பொருள் யாது?
4. இலக்கணக் குறிப்பு வரைக: உறுதுயர்
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

**விடைகள்:**

1. முல்லைப்பாட்டு 2. நப்பூதனார் 3. தோள் 4. வினைத்தொகை 5. சிறுதாம்பு,உறுதுயர்

---

**3.** விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

**வினாக்கள் :**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியரின் பெயர் என்ன?
3. நன்மொழி - இலக்கணக்குறிப்பு தருக.
4. எந்நகரத்தின் பெருமையை இந்நூல் கூறுகின்றது?
5. 'முகமன்' என்பதன் பொருள் யாது?
6. எவ்வொழுக்கம் பற்றி இப்பாடல் கூறுகின்றது?
7. எப்பண்பினை இப்பாடல் எடுத்தியம்புகின்றது?
8. அருகுற என்பதன் பொருள் யாது?
9. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள் யாவை?

**விடைகள்:**

1. காசிக்காண்டம் 2. அதிவீரராம பாண்டியர் 3. பண்புத்தொகை 4. காசிநகரம் 5. ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள். 6. இல்லறவொழுக்கம் 7. விருந்தோம்பல் பண்பு 8. அருகில் 9. விருந்தினனாக, திருந்துற, பொருந்து

---

**4.** ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
“ஏழைமை வேடன் இறந்திலன்'' என்று எனை யேசாரோ?

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார்?
3. “ஏழைமை வேடன் இறந்திலன்'' என்று எனை ஏசாரோ? - இக்கூற்றுக்கு உரியவர் யார்?
4. இப்பாடலில் அமைந்துள்ள சீர்மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

**விடைகள் :**

1. கம்பராமாயணம் 2. கம்பர் 3. வேடன் 4. ஆழ, ஆறு; ஏழைமை, ஏசாரோ
5. ஆழ, வேழ; தோழமை, ஏழைமை

---

**5.** “விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் ; பனியொடு
தன்பெயல் தலைஇய ஊழியும் ; அவையிற்று
உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்.....''

**வினாக்கள் :**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடுக்குத் தொடர் சொற்களை எழுதுக.
4. இப்பாடலில் முதல் நான்கு அடிகளில் உள்ள அடிமோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
5. ஊழி என்பதன் பொருள் யாது?

6. இப்பாடலடி சுட்டும் முதல் பூதம் எது?
7. எதனைப் போல புவி உருவாகியது?
8. இப்பாடலில் இடம்பெறும் அடி எதுகைகளைச் சுட்டுக.
9. பாடலில் பண்புத்தொகை இடம்பெறும் சொல்லினை எடுத்து எழுதுக.
10. உருவம் இல்லதாது எது?
11. ஊழ் ஊழ் - இலக்கணக் குறிப்பு
அ) இரட்டைக் கிளவி ஆ) பண்புத்தொகை
இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை
12. பாடலில் உணர்த்தப்படும் கருத்து
அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் செய்தி
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்
13. விசும்பு, இசை, ஊழி - பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே
அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொளி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்

**விடைகள் :**

1. பரிபாடல் 2. கீரந்தையார் 3. ஊழ் ஊழ் 4. உரு, உந்து 5. யுகம் 6. வானம் 7. நெருப்பு பந்து 8. கரு, உரு; உந்து, செந்தீச்; உள், உள்ளீடு 9. செந்தீ 10. காற்று 11. இ) அடுக்குத்தொடர் 12. ஆ) அறிவியல் செய்தி 13. இ) வானம், பேரொளி, யுகம்

**6.** "நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை''

**வினாக்கள்:**

1. இப்பாடலின் ஆசிரியர்
அ) நப்பூதனார் ஆ) கணிமேதாவியார்
இ) ஔவையார் ஈ) பரணர்
2. இப்பாடல் இடம் பெற்ற நூல்
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை
3. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்
4. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்
அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த
5. பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை
அ) தடக்கை ஆ) வளைஇ
இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

**விடைகள்:**

1. அ) நப்பூதனார் 2. அ) முல்லைப்பாட்டு 3. ஈ) அகன்ற உலகம்
4. இ) பாடுஇமிழ், கோடுகொண்டு 5. ஆ) வளைஇ

7. அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று ஏரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,
நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

**வினாக்கள்:**

1. இப்பாடலடியை எழுதியவர் யார்?
2. இப்பாடலடிகள் அமைந்த நூல் எது?
3. இப்பாடலடி அமைந்த தொகுப்பு நூல் எது?
4. மலைபடுகடாம் நூலின் வேறுபெயர் யாது?
5. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?
6. இப்பாடலடியில் 'சிற்றூர்' என்னும் பொருள் தரும் சொல் எது?
7. இப்பாடலடிகளில் இடம்பெற்றுள்ள அடி மோனைகளைக் குறிப்பிடுக.
8. இப்பாடலடிகளில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளை எடுத்தெழுதுக.
9. 'கிழவிர்' என்பதன் பொருள் யாது?
10. 'மலைபடுகடாம்' என ------- நயம் வாய்ந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.
11. இப்பாடலில் இடம்பெறும் தொழிற்பெயர்களை எடுத்தெழுதுக.
12. இப்பாடலில் இடம்பெறும் பண்புத்தொகைச் சொல் எது?
13. 'அசைஇ' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு
    அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
    இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
14. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' - இவ்வடியில் 'பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்
    அ) சிற்றூர் ஆ) பேரூர்
    இ) கடற்கரை ஈ) மூதூர்

**விடைகள்:**

1. பெருங்கௌசிகனார் 2. மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை 3. பத்துப்பாட்டு 4. கூத்தராற்றுப்படை 5. நன்னன் 6. பாக்கம் 7. அன்று, அலங்கு; சேந்த, சேட் 8. அன்று, கன்று; பரூஉக்குறை, குரூஉக்கண் 9. உறவினர் 10. கற்பனை 11. வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் 12. நன்மொழி 13. இ) சொல்லிசை அளபெடை 14. அ) சிற்றூர்

8. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

**வினாக்கள் :**

1. இப்பாடலடிகள் இடம்பெறும் நூல் எது?
2. இப்பாடலடிகளை இயற்றியவர் யார்?
3. எத்தொகுப்பில் இப்பாடல் அமைந்துள்ளது?
4. இப்பாடலடிகளில் இடம்பெறும் அடிஎதுகைச் சொற்களைச் சுட்டுக.
5. இப்பாடலடிகளில் இடம்பெறும் அடிமோனையைச் சுட்டுக.
6. மீளாத் துயர் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

**விடைகள் :**

1. பெருமாள் திருமொழி 2. குலசேகராழ்வார் 3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் 4. வாளால், மாளாத, மீளாத், ஆளா 5. மாளாத – மாயத்தால் 6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**9.** "செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"

**வினாக்கள் :**

1. இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர் இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்
2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ் பருவம்
அ) அம்மானை ஆ) சப்பாணி இ) சிறுதேர் ஈ) செங்கீரை
3. 'குண்டலமும் குழைகாதும்' – இலக்கணக் குறிப்பு தருக.
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்
4. கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே
அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

**விடைகள்**

1. ஆ) குமரகுருபரர் 2. ஈ) செங்கீரை 3. அ) எண்ணும்மை
4. இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

**10.** "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று.

**வினாக்கள்:**

1. பாடல் இடம்பெற்ற நூல் ...........
அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு
இ) வெற்றி வேற்கை ஈ) கொன்றை வேந்தன்
2. பாடலின் சீர் மோனைச் சொற்கள்
அ) அருளை, அருத்துவதும் ஆ) அருளை, அறிவை
இ) அகற்றி, அருந்துணையாய் ஈ) அறிவை, அகற்றி

3. அருந்துணையாய் - இச்சொல்லைப் பிரித்தால் கிடைப்பது
அ) அருந்துணை + யாய் ஆ) அருந்து + துணையாய்
இ) அருமை + துணையாய் ஈ) அரு + துணையாய்

4. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது
அ) அன்பு ஆ) கல்வி
இ) மயக்கம் ஈ) செல்வம்

**விடைகள்:**

1. அ) நீதிவெண்பா 2. ஆ) அருளை, அறிவை 3. இ) அருமை + துணையாய் 4. ஆ) கல்வி

**11.** "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு

2. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

3. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது
அ) சங்கப் பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்

4. தொழிற்பெயர் அல்லாத சொல்
அ) துய்ப்பதால் ஆ) அணிகலன் இ) மேவலால் ஈ) கண்டதால்

விடைகள்:

1. ஈ) தனிப்பாடல் திரட்டு 2. அ) இரட்டுற மொழிதல் அணி 3. ஆ) கடல் 4. ஆ) அணிகலன்

**12.** "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!"

**வினாக்கள்:**

1. இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

**விடைகள்:**

| | | |
|---|---|---|
| 'கண்ணே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| காலையில் நீயெழும்பு | - | ஐந்தாம் வேற்றுமை தொகாநிலைத் தொடர் |
| மாமழை பெய்கையிலே | - | உரிச்சொல் தொடர் |
| மாம்பூவே கண்ணுறங்கு | - | விளித்தொடர் |
| பாடினேன் தாலாட்டு | - | வினைமுற்றுத் தொடர் |
| ஆடி ஆடி ஓய்ந்துறங்கு | - | அடுக்குத்தொடர் |

**13.** விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதோர் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி.

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
4. கவரி என்பதன் பொருள் யாது?
5. கதலி என்பதன் பொருள் யாது?
6. இப்பாடல் இடம்பெற்றுள்ள காண்டம் எது?
7. இப்பாடல் இடம்பெற்றுள்ள படலம் எது?
8. இப்பாடலில் இடம்பெறும் மன்னன் யார்?
9. இப்பாடலில் இடம்பெறும் மன்னன் அணிந்த மாலை எது?

**விடைகள்:**

1. திருவிளையாடற்புராணம் 2. பரஞ்சோதி முனிவர் 3. விதிமுறை புதியதோர்; கதிர்மணி, மதிபுனை
4. சாமரம் 5. வாழை-துணிக்கொடி 6. திருசூலவாய்க் காண்டம் (3)
7. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தபடலம் (56) 8. குலேசபாண்டியன் 9. வேப்பமலர் மாலை

**14.** என்னை இகழ்ந்தனனோ சொல் வடிவாய் நின்இடம் பிரியா இமையப் பாவை
தன்னையும் சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன் என் தனக்கு யாது என்னா
முன்னை மொழிந்து இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்திச் சென்றான்
அன்ன உரை திருச்செவியின் ஊறுபாடு என உறைப்ப அருளின் மூர்த்தி.

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. சொல் வடிவமாகவும், பொருள் வடிவமாகவும் இருந்தவர் யார்?
4. ‘முனிவு’ என்பதன் பொருள் யாது?
5. இடைக்காடனார் சினந்து கூறியச் சொற்கள் இறைவன் செவியில் எவ்வாறு தைத்தது?
6. இப்பாடல் இடம்பெற்றுள்ள காண்டம் எது?
7. இப்பாடல் இடம்பெற்றுள்ள படலம் எது?
8. இப்பாடலில் இடம்பெறும் மன்னன் யார்?
9. இப்பாடலில் இடம்பெறும் மன்னன் அணிந்த மாலை எது?

**விடைகள்:**

1. திருவிளையாடற்புராணம் 2. பரஞ்சோதி முனிவர் 3. சொல்-பார்வதி; சொல்லின் பொருள்-சிவன்
4. சினம் 5. வெற்படை போல் 6. திருசூலவாய்க் காண்டம் (3)
7. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தபடலம் (56) 8. குலேசபாண்டியன் 9. வேப்பமலர் மாலை

**15.** இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்
தளரப் பிணைத்தால்
மலரங்கள் நிறையில் நழுவும்
வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடல் அடிகளின் ஆசிரியர் பெயர் என்ன?
3. மரணம் வந்தாலும் வருந்தாமல் சிரிப்பவை?
4. மலர்கள் எவ்வாறு தரையில் நழுவும்?

**விடைகள்:**

1. பூத்தொடுத்தல் 2. உமாமகேஸ்வரி 3. பூக்கள் (பெண்) 4. தளரப் பிணைத்தால்

---

**16.** செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ மசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

**வினாக்கள்:**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?
2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள எண்ணும்மைகளை எடுத்து எழுதுக.
4. 'ஆடுக' என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
5. இப்பாடலில் உள்ள அடிஎதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
6. இப்பாடலில் இடம்பெற்றுள்ள இறைவன் வீற்றிருக்கும் தலம் யாது?

**விடைகள்:**

1. குமரகுருபரர் 2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 3. குண்டலமும் குழைக்காதும்
4. வியங்கோள் வினைமுற்று 5. செம்பொனடி, பைம்பொன; கம்பிவிதம், வம்பவள 6. வைத்தீஸ்வரன்

---

**17.** வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்
றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்

**வினாக்கள்:**

1. இப்பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலில் நூலாசிரியர் பெயர் என்ன?
3. இப்பாடலில் உள்ள அடிஎதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
4. இப்பாடல் இடம்பெற்றுள்ள காண்டம் யாது?

**விடைகள்:**

1. கம்பராமாயணம் 2. கம்பர் 3. வன்மையில்லை, உண்மை, வெண்மை 4. பாலகாண்டம்.

---

**18.** ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரே

**வினாக்கள்:**

1. இப்பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலில் நூலாசிரியர் பெயர் என்ன?
3. இப்பாடலில் உள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
4. இப்பாடலில் இடம்பெறும் ஆற்றின் பெயர் என்ன?
5. கடந்திடவர் போவாரோ என்ற பாடல் வரிகளில் வரும் மன்னன் பெயர் என்ன?
6. இப்பாடல் இடம்பெற்றுள் காண்டம் யாது?

**விடைகள்:**

1. கம்பராமாயணம் 2. கம்பர் 3. ஆழ, வேழ, தோழ, ஏழ 4. கங்கையாறு 5. பரதன்
6. அயோத்தியா காண்டம்.

---

**19.** வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலடிகளில் இடம்பெறும் படலம் எது?
4. இப்பாடலில் அழியாத அழகுடையவன் யார்?
5. இடையாளொடு இளையானும் போனான் என்பது யாரைக் குறிக்கும்?

**விடைகள்:**

1. கம்பராமாயணம் 2. கம்பர் 3. கங்கைப் படலம் 4. இராமன்
5. இடையாள் - சீதை; இளையவன் - இலக்குவன்

---

**20.** முதல்மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகிவிட்டது
வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ நண்பா!
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!
பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு
மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்,
ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது,
காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்
கை புதிதா, கார் புதிதா? இல்லை.
நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது!
ஊக்கம் புதிது, உரம் புதிது!
மாட்டைத் தூண்டி, கொழுவை அமுத்து
மண்புரளும், மழை பொழியும்,
நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும்,
எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்;
கவலையில்லை!
கிழக்கு வெளுக்குது
பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெறும் நூல் யாது?
2. இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன?
3. கருகி என்பதன் பொருள் என்ன?
4. என்ன விழுந்தது, எவை பதமாகியது?

**விடைகள்:**

1. ஏர்புதிதா 2. கு.ப. ராஜகோபாலன் 3. விரைந்து செல் 4. மனம் விழுந்தது, மண் பதமாகியது

**21.** இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி
வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய
படியானையே பிணிப்புண்பன
வடிமணிச்சிலம்பே யரற்றுவன

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள் நூல் யாது?
2. பிணிக்கப்படுவன் எவை?
3. இப்பாடலில் இடம்பெறும் மன்னன்?
4. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

**விடைகள்:**
1. மெய்க்கீர்த்தி 2. யானை 3. இரண்டாம் இராசராச சோழன் 4. இந்திரன், வந்த ; படி, வடி

**22.** பூக்கையைக் குவித்துப் பூவே
 புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
 திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
 இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
 அழுங்கணீர் பொழிந்தான் மீதே

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. அழுங்கணீர் பொழிந்தான் யார்?
4. கருணையனின் தாயார் யார்?
5. இப்பாடலில் இடம்பெறும் அடிஎதுகைகளைச் சுட்டுக.
6. 'பூக்கை' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
7. இப்பாடலில் 'உடல்' என்னும் பொருள் தரும் சொல் எது?
8. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உருவகச் சொல் எது?
9. கணீர் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

**விடைகள்:**
1. தேம்பாவணி 2. வீரமாமுனிவர் 3. கருணையன் (அருளப்பன், யோவான்) 4. எலிசபெத்
5. பூக்கையைக், சேக்கையைப், யாக்கையைப், ஆக்கையை 6. உவமைத்தொகை 7. யாக்கை
8. பூஞ்சேக்கை 9. இடைக்குறை

**23.** வாய்மணி யாகக் கூறும்
 வாய்மையே மழைநீ ராகித்
தாய்மணி யாக மார்பில்
 தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்
தூய்மணி யாகத் தூவும்
 துளியிலது இளங்கூழ் வாடிக்
காய்மணி யாகு முன்னர்க்
 காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ.

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இளம்பயிர் வாடக்காரணம் எது?
4. இப்பாடலில் இடம்பெறும் அடிஎதுகைகளைச் சுட்டு
5. 'இளங்கூழ்' என்பதன் பொருள் யாது?
6. 'காய்மணி' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
7. 'இளங்கூழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
8. இப்பாடலடியில் 'உண்மை' என்னும் பொருள் தரும் சொல் எது?

**விடைகள்:**

1. தேம்பாவணி 2. வீரமாமுனிவர் 3. மழைத்துளி இல்லாமை 4. வாய்மணி, தாய்மணி, தூய்மணி, காய்மணி 5. இளம்பயிர் 6. வினைத்தொகை 7. பண்புத்தொகை 8. வாய்மை

---

**24.** விரிந்தன கொம்பில் கொய்த
வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
இரும்புழைப் புண்போல் நோகப்
பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பில் செல்லும்
தடவிலா தனித்தேன் அந்தோ!

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலடிகளில் இடம்பெறும் அடி மோனைகளை எழுதுக.
4. இப்பாடலில் 'கொம்பு' என்னும் சொல்லின் பொருள் யாது?
5. இப்பாடலில், 'நிலம்' என்றும் பொருள் தரும் சொல் எது?
6. இப்பாடலில் 'பறவை' என்னும் 'புள்' என்னும் பொருள் தரும் சொல் எது?
7. 'வீ' என்பதன் பொருள் யாது?
8. இப்பாடலில் இடம்பெறும் ஓரெழுத்து மொழிச் சொல் எது?

**விடைகள்:**

1. தேம்பாவணி 2. வீரமாமுனிவர் 3. விரிந்தன, எரிந்தன, பிரிந்தன, சரிந்தன
4. கிளை 5. அசும்பு 6. புள் 7. பூ 8. வீ

---

**25.** உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொத்து உறுப்பும் இல்லா
மெய்முறை அறியேன்; மெய்தான்
விரும்பிய உணவு தேடச்
செய்முறை அறியேன்; கானில்
செல்வழி அறியேன்; தாய்தன்
கைமுறை அறிந்தேன் தாயும்
கடிந்தெனைத் தனித்துப் போனாள்

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. இப்பாடலில் இடம்பெறும் அடி எதுகைகளைச் சுட்டுக.
4. காட்டில் தவிக்க விடப்பட்டவர் யார்?
5. கருணையைத் தவிக்க விட்டுச் சென்றவர் யார்?
6. இப்பாடலில் வினைத்தொகை பயின்று வந்த சொற்களை எழுதுக.
7. இப்பாடலில் வேற்றுமைத்தொகை பயின்று வந்த சொல் எது?
8. 'மெய் முறை அறியேன்; மெய்தான் விரும்பிய உணவு' அடிக்கோடிட்டச் சொற்களின் பொருள்களைச் சுட்டுக.

**விடைகள்:**

1. தேம்பாவணி 2. வீரமாமுனிவர் 3. உய்முறை, மெய்முறை, செய்முறை 4. கருணையன்
5. கருணையன் தாய் எலிசபெத் 6. உய்முறை, செய்முறை 7. மெய்முறை 8. தன்மை, உடல்.

---

**26.** நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
2. இப்பாடலின் ஆசிரியர் யார்?
3. 'தவமணி' என்பதன் பொருள் யாது?
4. 'படலை' என்பதன் பொருள் யாது?
5. 'மலர்' என்னும் பொருள் தரும் சொல்லினை எழுதுக.
6. நல்லறங்களை மாலையோடு அணிந்தவர் யார்?
7. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளைச் சுட்டுக.
8. நல்லறம் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
9. 'நவ' என்ற சொல் குறிக்கும் எண் யாது?

**விடைகள்:**

1. தேம்பாவணி 2. வீரமாமுனிவர் 3. மணமலர் 4. மாலை 5. துணர் 6. கருணையன்
7. நவமணி, தவமணி, துவமணி, உவமணி 8. ஒன்பது

---

**27.** பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்,
தொலைந்ததே வாழ்வு என
தலையில் கைவைத்து
புலம்புவார் பூமியிலே
தன் வாழ்வு தொலைக்காமல்
தற்காத்து வைப்பதற்காய்
தலையில் கைவைக்கிறாள் இவள்.
வாழ்வில் தலைக்கனம்
பிடித்தவர் உண்டு.
தலைக்கனமே வாழ்வாக
ஆகிப்போனது இவளுக்கு
அடுக்குமாடி அலுவலகம்
எதுவாயினும்

அடுத்தவர் கனவுக்காக
அலுக்காமல் இவள் சுமக்கும்
கற்களெல்லாம்
அடுத்தவேளை உணவுக்காக
செத்தாலும் சிறிதளவே
சலனங்கள் ஏற்படுத்தும்
சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது

**வினாக்கள்:**

1. இப்பாடலைப் பாடியவர் யார்?
2. தாகூர் ரூமியின் இயற்பெயர் யாது?
3. இப்பாடலடிகளில் இடம்பெறும் அடிமோனையைச் சுட்டுக.
4. இப்பாடலடிகளில் அமைந்த அடிஎதுகைகளைச் சுட்டுக.
5. இவள் தலையில் எழுதியது......
6. யாருடைய வேதனை இப்பாடலில் சுட்டப்படுகின்றது?
7. இப்பாடலடியில் இருபொருள் உணர்த்தும் ஒரு சொல் எது?
8. சித்தாளின் மனச்சுமைகளை அறியாதது எது?
9. சித்தாள் எதற்காகக் கற்களைச் சுமக்கிறாள்?
10. இப்பாடலடிகள் அமைத்த கவிதைத் தலைப்பு எது?
11. சிறிதளவே சலனப்படுத்துவது எது?
12. புலம்புவார் என்பதன் இலக்கணக்குறிப்பு யாது?

**விடைகள்:**

1. தாகூர் ரூமி 2. முகம்மது ரஃபி 3. தலையில்-தன்; தற்காத்து-தலையில்-தலைக்கணம், கற்காலம்தான்-கற்களெல்லாம்; அடுத்தவர், அலுக்காமல், அடுத்தவேளை 4. பொற் காலமாகி, கற்காலம்தான், தற்காத்து, கற்களெல்லாம், தொலைத்ததே, தலைக்கனமே 5. கற்காலம் 6. சித்தாள் 7. தலைக்கனம் 8. செங்கற்கள் 9. அடுத்தவேளை உணவுக்காக 10. சித்தாளு 11. சித்தாளின் மரணம் 12. வினையாலணையும் பெயர்

★★★★★

# நயம் பாராட்டல்

1. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

– கா. நமச்சிவாயர்

**திரண்ட கருத்து:**

'வாழைக்கு அழகு குருத்து
செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து'

“தேனினும் இனிமையான செம்மை பெற்ற மொழி தமிழ் மொழி. தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி தமிழ்மொழி. ஒளி வீசி அறிவும், செறிவும் நுட்பமும் கொண்ட மொழி தமிழ்மொழி உணர்வோடு உணர்வான மொழி, வானினும் உயர்ந்த வளம்மிக்க மொழி தமிழ். தழைத்து ஓங்குவாய் குளிர்ச்சி தங்கிய தமிழ் மொழியே'' என தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் க. நமச்சிவாயர்.

**தொடை நயம்:**

'தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்'

செய்யுளானது எதுகை, மோனை, இயைபு, முரண் முதலியவற்றால் தொகுக்கப்படுவது தொடை எனப்படும். இப்பாடலில் தொடை நயங்கள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன.

**'மோனை நயம்:**

'மோனையற்ற பாட்டு
சேனையற்ற நாடு'

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை.

**சான்று:**

ஒண்டமிழ், ஒளிர்தமிழ், ஒளிர்வுறும்,
தனித்தமிழ், தண்டமிழ்

**எதுகை நயம்:**

'வீரத்துக்கு அழகு வேங்கை
செய்யுளுக்கு அழகு எதுகை'

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகைத் தொடை.

**சான்று:**

தேனினும், ஊனினும், வானினும்

**இயைபு நயம்:**

'பாடலின் இயைபு
படிப்போர்க்கு வியப்பு'

செய்யுளில் கடைசி எழுத்தோ சீரோ அசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும். 'மொழியே' என்னும் சொல் அடிதோறும் வந்து இயைபாக அமைந்துள்ளது. அடிதோறும் மூன்றாம் சீரில் செந்தமிழ், ஒண்டமிழ், ஒளிர்தமிழ், வண்டமிழ், தனித்தமிழ், தண்டமிழ் என்னும் சொற்கள் வந்து பாடலுக்கு இயைபாக அமைந்துள்ளன.

**அணி நயம்:**

'கோவிலுக்கு அழகு மணி
செய்யுளுக்கு அழகு அணி'

இப்பாடலில் 'மொழி' என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து சொற்பொருள் பின்வரு நிலையணியைக் கொண்டுள்ளது.

பாவகை : எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

---

2. "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்". - காளமேகப் புலவர்

**திரண்ட கருத்து :**

வாழைக்கு அழகு குருத்து
செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து

கடல் சூழ்ந்த ஊர் நாகப்பட்டினம். அங்குள்ள காத்தான் சத்திரத்தில் பொழுது இறங்கும் போதுதான் அரிசி வரும். அதனைத் தீட்டி உலையில் போடும்போது ஊரே அடங்கிப் போயிருக்கும். ஓர் அகப்பைச் சோறு இலையில் போடும்போது விடிவெள்ளி முளைத்துவிடும்.

**தொடை நயம் :**

தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்

செய்யுளில் எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய உறுப்புகளால் தொடுக்கப்படுவது தொடை.

**மோனை நயம் :**

மோனையற்ற பாட்டு
சேனையற்ற நாடு

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

**சான்று:** கத்துகடல், காத்தான்
உலையிலிட, ஊரடங்கும்
அத்தமிக்கும், அரிசி வரும்

**எதுகை நயம் :**

வீரத்துக்கு அழகு வேங்கை
பாட்டுக்கு அழகு எதுகை

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

**சீர் எதுகை:**

கத்துகடல், காத்தான், சத்திரத்தில்; அத்தமிக்கும், குத்தி

**அடி எதுகை:**

| | |
|---|---|
| கத்துகடல் | உலையிலிட |
| அத்தமிக்கும் | இலையிலிட |

**அணி நயம் :**

கோவிலுக்கு மணி அழகு
செய்யுளுக்கு அணி அழகு

இப்பாடல் இரு பொருள்பட வந்து இரட்டுற மொழிதல் அணியால் அலங்கரிக்கப்பட்டு உள்ளது.

**பா நயம் :**

இப்பாடல் நேரிசை வெண்பா வகையைச் சார்ந்தது.

**தலைப்பு :**

'நாகை சத்திரம்' என்பது இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு.

3. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;

உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ? - பாரதியார்

**தலைப்பு** : இயற்கை

**ஆசிரியர்** : பாரதியாா

**திரண்ட கருத்து :**

வாழைக்கு அழகு குருத்து
செய்யுளுக்கு அழகு திரண்ட கருத்து

நிலா, விண்மீன், காற்று ஆகிய இவற்றையெல்லாம் செம்மையுற்ற ஏற்படுத்தி வைத்து, அவற்றிலெல்லாம் தோய்ந்துள்ளது. திருவருளாகிய அமுதரசம். அந்த அமுதரசத்தைப் பருகி, அழகிய உன்னத நிலைக்கு யாம் உள்ளானோம். உலவுகின்ற மனமாகிய சிறுபறவையை எங்கெங்கும் செலுத்திக் களிப்படைவோம். பலாச்சுளை ஏற்றப்பட்ட வண்டியை ஒரு வண்டானது ரீங்காரம் செய்து வட்டமிடுவது ஆச்சரியகரமானதா என்ன?

**தொடை நயம் :**

தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்

செய்யுளில் எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய உறுப்புகளால் தொடுக்கப்படுவது தொடை.

**மோனை நயம் :**

மோனையற்ற பாட்டு
சேனையற்ற நாடு

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும்.

**சான்று:**

குலாவும், குழம்பைக், குடித்தொரு

**எதுகை நயம் :**

வீரத்துக்கு அழகு வேங்கை
பாட்டுக்கு அழகு எதுகை

முதல் எழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.

**சான்று:**

**அடி எதுகை:**

நிலாவையும்
குலாவும்
உலாவும்
பலாவின்

**அணி நயம் :**

கோவிலுக்கு மணி அழகு
செய்யுளுக்கு அணி அழகு

இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி இடம் பெற்றுள்ளது.

4. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே. – வள்ளலார்

**திரண்ட கருத்து:**

கோடையில் இளைப்பாறும் வகையில் கிடைத்த குளிர்ச்சி பொருந்திய தரு ஆனவன். மரம் (தரு) தரும் நிழலாகவும், நிழலின் குளிர்ச்சியாகவும், நிழல்தரும் கனியாகவும் இருப்பவன். ஓடையிலே ஊறுகின்ற இன்சுவை நீராகவும், நீரின் இடையில் மலர்ந்து சுகந்தம் தரும் வாசமலராகவும் திகழ்பவன். மேடையிலே வீசுகின்ற மென்பூங்காற்றாகவும், மென்காற்று தரும் சுகமாகவும் சுகத்தின் பயனாகவும் இருக்கும் இறைவா. இவ்வுலக வாழ்வில் ஆடிக்கொண்டிருக்கும் என்னையும் ஏற்றுக்கொண்ட (மனந்த) தலைவனே (மணவாளனே) பொதுவிலே ஆடுகின்ற, ஆட்டுவிக்கின்ற எம் அரசே நான் தரும் பாமாலையை (அலங்கல்) அணிந்து எனக்கு அருள் செய்வாயாக.

**மோனை நயம்:**

குயவனுக்குப் பானை
செய்யுளுக்கு மோனை

செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.

மேடையிலே
மென்காற்று...
ஆடையிலே...
ஆடுகின்ற...

**எதுகை நயம்:**

மதுரைக்கு வைகை
செய்யுளுக்கு எதுகை

முதல் எழுத்து அளவொத்திருக்க அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும். இப்பாடலில்,

கோடையிலே
ஓடையிலே
மேடையிலே
ஆடையிலே

**இயைபு நயம்:**

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

தண்ணீரே
மலரே

**அணி நயம்:**

அணி என்றால் அழகு. இப்பாடலின் அழகுக்கு அழகு செய்யும் வகையில்,

“குளிர் தருவே...
நிழல் கனிந்த கனியே...”

இறைவனை உருவகப்படுத்தும் ''உருவக அணியும்'' இறைவனை மேன்மைப்படுத்தி உயர்த்திப் புகழ்ந்து பாடியிருப்பதால் ''உயர்வு நவிற்சி அணியும்'' அமைந்து பாடலுக்கு நயம் கூட்டியுள்ளது.

**சந்த நயம்:**

இப்பாடல் இனிய ஓசையுடன், இசையுடன் பாடும் வகையில், ஒழுகிய ஓசையாய் 'எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்' பெற்று அகவலோசையுடன் சந்த நயமும் மிக்குள்ளது.

இப்பாடல் அனைத்து இலக்கிய நயங்களுமுடையதாய்ப் படிப்போர் மனதில் இறைபக்தியையும், இலக்கிய ஆர்வத்தையும் ஊட்டும் வகையில் அமைந்துள்ளது.

★★★★★

## கடிதம் எழுதுதல்

**1. மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

திருநெல்வேலி,
12-03-2020.

அன்புள்ள நண்பன் அரசுக்கு,

உன் உயிர் நண்பன் எழுதுவது. நலம் நலமறிய ஆவல்,

நேற்றைய நாளிதழில் 'மரம் இயற்கையின் வரம்' என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு முதல் பரிசு பெற்றதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். நாளிதழிலும் அக்கட்டுரை வெளிவந்திருந்தது. அதனைப் படித்துப் பார்த்தோம்.

**மரம்தான் மரம்தான்**
**மனிதன் மறந்தான் மரத்தை**

என்று நீ எழுதிய சொற்கள் விழிப்படையச் செய்துவிட்டது. நாங்களும் எங்கள் பகுதியில் மரங்களை நட்டு இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டோம்.

நீயும் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்குகொண்டு உலகளாவிய சாதனைகளைப் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைத் தேடித்தர மனதார உன்னை வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
உன் உயிர் நண்பன்,
க. தமிழ்மணி.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
ச. அரசு,
103, செந்தமிழ்நகர்,
ஈரோடு - 638 002.

**2. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்**

அனுப்புநர்
கண்ணன்,
25, வள்ளல் தெரு,
அண்ணாநகர்,
திருநெல்வேலி - 11.

பெறுநர்
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
திருநெல்வேலி.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தரமற்ற உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுதல் - தொடர்பாக.

வணக்கம்.

இன்று காலை பேருந்துநிலையத்திற்கு வெளியில் உள்ள "சுவையகம்'' என்ற உணவகத்திற்குச் சென்றோம். நானும் என் நண்பனும் உணவு உண்டோம். உணவில் கல்லும், குழம்பில் பூச்சியும் கிடந்தது. உணவக மேலாளரிடம் முறையிட்டோம். அதற்குச் சரியான காரணத்தை அவர் அளிக்கவில்லை. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு விலைப்பட்டியல் பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்த தொகையை வாங்காமல் கூடுதலாக இருபது ரூபாயைக் காசாளர் வாங்கினார்.

எனவே, தரமற்ற உணவையும், விலை கூடுதலாகவும் விற்பனை செய்த, அந்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கான தக்க சான்றுகள் (புகைப்படம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நன்றி!

திருநெல்வேலி.
23.03.2020.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கண்ணன்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்பு ஆணையம்,
திருநெல்வேலி.

**3. 'பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்'' - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுதுதுக.**

அனுப்புநர்
பத்தாம் வகுப்பு மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

பெறுநர்

தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை – 18.

ஐயா,

பொருள்: பள்ளித் தூய்மை குறித்த செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் – சார்பாக.

வணக்கம்.

நாங்கள் நம் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். கடந்த 4 ஆண்டுகளாக நம் பள்ளியை நன்கு கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல்திட்டமாக தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் வழங்கி நம் பள்ளியில் செயல்படுத்தி மாணவர்களாகிய எங்கள் கல்வி நலனையும் வருங்கால தலைமுறையினரின் கல்வி நலனையும் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி!

இடம் : சென்னை
நாள் : 13.03.2020

இப்படிக்கு,
மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி

**பள்ளித் தூய்மை**

நல்ல நீரும் நல்ல காற்றும் சூழலுமே வாழ்விற்கு ஆதாரம். அந்த வகையில் மாணவராகிய நாங்கள் தலைமை ஆசிரியர் ஒப்புதலோடு பின்வரும் செயல்திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம்.

- வகுப்பறையில் உணவுக்கழிவுகளைப் போடாது இருத்தல்.
- குப்பைத்தொட்டிகளை உலர வைத்துப் பயன்படுத்துதல்.
- கழிப்பறைகளைத் தூய்மையாக வைத்தல்.
- பாதுகாக்கப்பட்ட தூய்மையான நீரைக் குடித்தல்.

மேற்கண்ட செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பள்ளியையும், பாரதத்தையும் தூய்மையாக்கித் தூய்மை இந்தியாவை உருவாக்குவோம்.

**4. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

ஆர். இராகவன்,
16, பெரியகடைவீதி,
மதுரை.

பெறுநர்

ஆசிரியர் அவர்கள்,
‘கனல்’ நாளிதழ்,
மதுரை.

பொருள்: கட்டுரை வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

தங்கள் நாளிதழின் சார்பாக பொங்கல் பண்டிகையை ஒட்டி வெளியிடும் பொங்கல் மலருக்காக உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்கள் அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளேன். தாங்கள் அக்கட்டுரையைத் தங்கள்

நாளிதழ் சார்பாக வெளியிடும் பொங்கல் சிறப்பு மலரில் என் கட்டுரையும் வெளிவர ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடம் : மதுரை
நாள் : 8.3.2020

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ஆர். இராகவன்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
ஆசிரியர் அவர்கள்,
'கனல்' நாளிதழ் அலுவலகம்,
மதுரை - 10.

**5. உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்
எஸ். சங்கரன்,
23, வள்ளலார் சாலை,
பாரதிதாசன் நகர்,
திருச்சி.

பெறுநர்
உயர்திரு. மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
திருச்சி.

பொருள்: தெருவிளக்குகள் பழுது நீக்குதல் - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். நான் பாரதிதாசன் நகர் வள்ளலார் சாலையைச் சார்ந்தவன். கடந்த வாரம் வீசிய தானே புயலால் எங்கள் தெருவில் உள்ள மினவிளக்கு கம்பங்கள் அனைத்தும் சாய்ந்துவிட்டன. இதனால் இரவில் வெளியே செல்வோர்க்கு மிகவும் துன்பமாக இருக்கிறது. தெருவிளக்கு இல்லாததைப் பயன்படுத்தி சமூக விரோதிகளின் செயல்களும் அதிகமாகி விட்டது. அதனால் தயவுசெய்து நேரில் பார்வையிட்டு பழுதடைந்த மின்விளக்குக் கம்பங்களைச் சரிசெய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
எஸ். சங்கரன்.

21.03.2020
பாரதிதாசன் நகர்

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
உயர்திரு. மின்வாரிய செயற்பொறியாளர் அவர்கள்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
திருச்சி.

**6. புயலால் விழுந்த மரங்களை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர்

சு. முத்துக்குமார்,
3வது குறுக்குத்தெரு,
திருநெல்வேலி.

பெறுநர்

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி அலுவலகம்,
திருநெல்வேலி.

பொருள்: புயலால் விழுந்த மரங்களை அகற்றக் கோரி விண்ணப்பம் – தொடர்பாக.

ஐயா,

வணக்கம்!

எங்கள் பகுதியில் கடந்த பத்தாம் தேதி புதன்கிழமை வீசிய புயலால் ஏராளமான மரங்கள் வேரோடு வீழ்ந்துள்ளன. அதனால் சாலைகளில் ஏற்பட்ட மரக்கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிப்பும் போக்குவரத்துப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் அன்றாட வாழ்வும் நிலைகுலைந்துள்ளது. பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்றவற்றின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் ஐயா தயவுசெய்து எங்கள் பகுதியில் விழுந்துள்ள மரங்களை விரைந்து அகற்றித் தருமாறு வேண்டுகிறேன்.

நன்றி!

இடம் : திருநெல்வேலி
நாள் : 20.02.2020

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள,
சு. முத்துக்குமார்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி அலுவலகம்,
திருநெல்வேலி.

**7. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.**

சென்னை
20.02.2020

அன்புள்ள தங்கைக்கு,

அண்ணன் அறிவழகன் எழுதும் கடிதம். நலம். நலம் அறிய ஆவல். வீட்டில் அம்மா, அப்பா ஆகியோரின் நலமும் அறிய ஆவல்.

இன்றைய உலகை விரல் நுனிக்கே கொண்டு வந்து தந்ததில் திறன்பேசியின் பங்கு அளவிட முடியாதது. எத்துறை சார்ந்த கருத்துகளையும் திறன்பேசியின் இணையத்தின் வாயிலாக எளிதாக அறிந்து கொள்ள முடியும். அரிய தகவல்களைக்கூட மிக எளிதில் தெரிந்து கொள்ள முடியும். திறன்பேசியின் வாயிலாகக் கணக்கிட முடியும்; புகைப்படம் எடுக்க இயலும்; காணொலிகள் வாயிலாகப் பேச முடியும்; நேரத்தில் எழுதுவதற்கான எழுப்பு மணியைப் பயன்படுத்திடலாம்; உன் பள்ளிப் பாடப்புத்தகங்களையும், பிற புத்தகங்களையும் படித்திட இயலும்;

ஆயினும் எத்தனையோ நன்மைகளைக் கொண்டிருந்தாலும் மிகுந்த ஆபத்து நிறைந்த சாதனமாகவும் திறன்பேசி விளங்குகிறது. இணையத்தில் புகைப்படங்கள் வெளியிடுவதோ, அறிமுகமில்லாதவர்களிடம் உரையாடவோ வேண்டாம். தனிப்பட்ட தகவல்களை எக்காரணத்தைக் கொண்டும் பொதுவெளியில் வெளியிடாதே. உன் கல்விக்கும் அறிவுக்கும் தனித்திறமைக்கும் பயனுள்ள வகையில் திறன்பேசியின் உறவை அமைத்துக் கொள். அன்புடன் முடிக்கின்றேன். மற்றவை நேரில்.

நன்றி!

இப்படிக்கு,
அன்பு அண்ணன்,
க. அறிவழகன்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
க.கயல்விழி,
த/பெ. பெ. கதிரவன்,
25, கம்பர் நகர், மதுரை - 06.

**8. நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.**

குற்றாலம்,
20.02.2020.

அன்புள்ள நண்பா,

நலம், நலம் அறிய ஆவல். என்னைப் போன்றே நீயும் புத்தகம் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவன் என்ற வகையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். இ.ஆ.ப.அதிகாரியான வெ.இறையன்புவின் 'சந்தித்ததும் சிந்தித்ததும்' என்னும் நூலை அண்மையில் வாசித்தேன். இந்நூலில் "வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலவிதமான மனிதர்களை நாம் சந்தித்த வண்ணம் இருக்கிறோம். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள ஏதாவது ஒரு விஷயம் இருக்கிறது'' என்கிறார் இறையன்பு.

"ஆரோக்கியமான பார்வையோடு உலகத்தைப் பார்த்தால் அத்தனை மனிதர்களுமே சுவாரசியத்திற்குப் பஞ்சமில்லாதவர்கள் என்ற உண்மை நமக்குப் புரியும்'' என்கிறார் அவர். தான் சந்தித்த அத்தகைய மனிதர்கள் குறித்த சிறுகுறிப்புகளை இலகுவான வாசிப்புக்கு ஏற்ற நடையில், ஆங்கிலத்தில் இனிய மேற்கோளுடன் 50 கட்டுரைகளாக அவர் வடித்திருக்கிறார். அவற்றின் தொகுப்பே இந்நூல். படிக்க விறுவிறுப்பாகவும், படித்து முடித்தவுடன் புதிய தெளிவை அளிப்பதாகவும் இந்நூல் அமைந்திருக்கிறது. சக மனிதர்களுக்குப் பரிசளிப்பதற்கு ஏற்ற நூல் இது. இச்சிறப்புமிகு நூலை நீயும் படித்துப் பயன் பெறுவாயாக.

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
க.அகில்

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
மு.முகிலன்,
52, கபிலர் நகர்,
திருநெல்வேலி.

**9. உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கு அழைக்கக் கடிதம் எழுதுக.**

20.02.2020
கும்பகோணம்.

அன்புடையீர்!

வணக்கம்.

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருகின்ற நிகழ்கலைகளில் ஒன்றான தோற்பாவைக் கூத்து வல்லுநரான தங்களை எங்கள் பள்ளியில் வருகின்ற ஆகஸ்ட் 15ஆம் நாளன்று விடுதலைநாள் விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு தாங்கள் சிறப்பு விருந்தினராக வருகைத்தந்து விழாவை சிறப்பித்தும், தங்களது நிகழ்கலையைப் பற்றி மாணவர்களுக்கு தங்கள் குழு வாயிலாக நடத்தியும் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
விழாக்குழுவினர்,
கும்பகோணம்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
அ. கலையமுதன்,
55, ஆடலரசி நகர்,
ஆடுதுறை - 612 108.

**10. பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

திருச்சி,
18.03.2020.

அன்புள்ள சித்தப்பாவிற்கு,

இரகு எழுதிக்கொள்வது,

வணக்கம்.

நானும், அப்பா, அம்மா, தங்கை அனைவரும் நலம். நாங்கள் அனைவரும் நலமுடன் இருக்கிறோம். சித்தப்பா! நான் ஏன் இக்கடிதம் எழுதுகிறேன் தெரியுமா?

நான் இன்று மிக்க மகிழ்ச்சியில் இருக்கிறேன். நேற்று வகுப்பு முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தேன் பள்ளித்திடலில் ஒரு பணப்பை கிடந்தது. அதிகமான பணம் இருந்தது. ஒரு நிமிடம் பயம்! ஐயோ! இவ்வளவு பணம் இருக்கிறதே. பையை எடுத்துக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்றேன். அலுவலக ஊழியர் கட்டணம் வசூலித்த பணம் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தவற விட்டுவிட்டாராம்.

தலைமை ஆசிரியர் மிகவும் மகிழ்ந்தார். என் நேர்மையையும், கண்ணியமான செயலையும் பாராட்டினார்.

‘பிறர் பொருளுக்கு ஆசைப்படாத அறச் சிந்தனை’ உடைய உன்னைப் பாராட்டியே தீர வேண்டும் என்று, மறுநாளே மாணவர்களை அழைத்து, ஒரு சிறப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்து என் நேர்மையைப் பாராட்டி சன்மானத் தொகையைப் பரிசாகவும், ‘நேர்மையாளன் ரகு’ என்று பாராட்டுப் பத்திரத்தையும் எனக்குக் கொடுத்தார்.

அது மட்டுமில்லாமல் என்னைப் பள்ளி மாணவர் தலைவராக்கினார். நேர்மைக்கு எப்போதும் உயர்வு உண்டு. அதற்கு 'இரகுவே' சான்று என்று என்னைப் பாராட்டினார்.

இந்நிகழ்வையின் மகிழ்ச்சியை உங்களுடனும், சித்தி, தங்கையுடனும் இக்கடிதம் மூலம் பகிர்ந்து கொள்வதற்கு மகிழ்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
இரகு.ம.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
வீ. ஆனந்தன்,
72, நேரு நகர்,
சேலம் - 2.

---

**11. ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.**

தஞ்சாவூர்,
20.02.2020.

அன்புள்ள மாமா,

நலம். நலம் அறிய ஆவல்.

தாங்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறேன். முக்கியச் சாலை விதிகள் பற்றி என்னுடைய பள்ளியில் விழிப்புணர்வு முகாம் வாயிலாகக் கற்றுத்தந்ததையே இக்கடிதத்தில் தங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். சாலைகளில் இடப்பக்கமாக மட்டுமே வண்டிகளை ஓட்டிச் செல்ல வேண்டாம். சாலைகளின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்க வேண்டும்.

மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப்பட்டை அணிய வேண்டும். அதுவே உயிர்ப் பாதுகாப்பு. சிவப்பு விளக்கைக் கண்டவுடன் சாலையில் நிறுத்தக் கோட்டுக்கு முன்பாக ஊர்தியை நிறுத்த வேண்டும். நமக்கும் சாலையில் பயணிக்கும் பிறருக்கும் விபத்து ஏற்படாதவண்ணம் பாதுகாப்பாக ஊர்திகளை இயக்க வேண்டும்.

எனவே தாங்களும் இவற்றை மனத்தில் நிறுத்தி, தங்கள் நண்பர்களுக்குக் கூறி அழகிய வாழ்வினை விபத்தில்லாப் பயணமாக அமைத்துக் கொள்ள வேண்டுமாறு விரும்புகிறேன்.

இப்படிக்கு,
அன்புடன்,
க.வளவன்.

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
அ.அறிவழகன்,
5, பாரதிதாசன் நகர்,
கரூர்-5.

★★★★★

# கட்டுரை எழுதுதல்

## இயல்சார்ந்த கட்டுரைகள்

### 1. காற்றினைப் போற்றுவோம்

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| காற்று குறித்து இலக்கியச் செய்திகள் |
| பருவக்காற்றின் வகைகள் |
| ஹிப்பாலஸ் பருவக்காற்று |
| திசைக்காற்று |
| காற்றின் பயன்கள் |
| காற்று மாசு |
| காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகள் |
| முடிவுரை |

**முன்னுரை:**

உயிர்களின் சுவாசம் காற்று!
காற்றின் சுவாசம் மரம்!

ஐம்பூங்களுள் ஒன்று காற்று.நாம் உயிர்வாழக் காற்று அவசியம். காற்று இல்லாமல் எந்த உயிர்களும் வாழ இயலாது. காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி என்ற வேறு பெயர்களிலும் காற்று அழைக்கப்படுகின்றது.காற்று குறித்த செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**காற்று குறித்து இலக்கியச் செய்திகள்:**

தென்றலானது மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும் போது வண்டுகளையும் அழைத்து வருகிறது என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரைத்துள்ளார். பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய பத்மகிரிநாதர் தென்றல் விடு தூதுவில் "தமிழும் குளிர்ச்சியான பொருநை நதி சேரும் செந்தமிழ் மலையின் பின் தோன்றிய தென்றலே'' என்று பெண்ணொருத்தி தென்றலைத் தூது செல்வதற்காக அழைக்கிறாள். சங்ககாலப் பெண் புலவர் வெண்ணிக்குயத்தியார் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய பாடலில் 'வளி' எனக் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார்.

**பருவக்காற்றின் வகைகள்**

கதிரவனின் வெப்பத்தால் சூடாகி அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்று அங்குள்ள வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாகிறது.தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று என இரு வகைப்படும்.

ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும் தென்மேற்குப் பருவக்காற்று. இதனால் இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தருகிறது.

அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும் வடக்கிழக்குப் பருவக்காற்று .இதனால் இந்தியாவின் முதுகெலும்பான வேளாண்மை சிறக்கிறது.நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற உதவுகிறது.

**ஹிப்பாலஸ் பருவக்காற்று**

கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ்.இவர் பருவக்காற்றின் உதவியால் முசிறித் துறைமுகத்திற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்தார். விரைவான பயணத்திற்கு இப்புதிய வழி உதவியதால் யவனக் கப்பல்கள் சேரர்களின் முசிறித் துறைமுகத்திற்கு அதிகமாக வந்தன. யவனர் இப்பருவக்காற்றிற்கு அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையே சூட்டினர்.

**திசைக்காற்று**

- கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் காற்று. மழையைத் தருவதால் மழைக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.
- மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசும். வறண்ட நிலப்பகுதியிலிருந்து வீசுவதால் வெப்பக்காற்று அல்லது கோடைக்காற்று என அழைக்கப்படுகிறது.
- வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று. பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறது.
- தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று, மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான காற்றைத் தருகிறது.

**காற்றின் பயன்கள்:**

- உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.
- தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் உணவை உற்பத்தி செய்ய உதவுகிறது.
- விதைகளை பல இடங்களுக்குப் பரப்புகிறது.
- உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
- நவீன தொலைத்தொடர்பின் மையமாக விளங்குகிறது.
- காற்றாலை மூலம் மின்னாற்றலைப் பெறுகிறோம்.

**காற்று மாசு:**

போக்குவரத்து வாகனங்களும் தொழிற்சாலைகளும் காற்றைப் பெருமளவில் மாசுபடுத்துகின்றன. காற்றுமாசினால் கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய், மூளை வளர்ச்சி குறைவு ஆகியவை மனிதர்களுக்கு ஏற்படுகின்றன. அமிலமழை, ஓசோன் படலம் பாதிப்பு ஆகியனவும் ஏற்படுகின்றது.

**காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகள்:**

- மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுதல்.
- பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளித்தல்.
- மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்.
- புதை வடிவ எரிபொருட்களைத் (கச்சா எண்ணெய், நிலக்கரி) தவிர்த்தல்.
- சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்தாமை.

ஆகியன காற்று மாசடைதலைத் தவிர்க்கும் வழிகள் ஆகும்.

**முடிவுரை:**

காற்றுக்கு அடிப்படை மரங்களாகும்.மனிதனின் உடலுக்கு அமிழ்தம் தூயகாற்று ஆகும்.அத்தூய காற்றினைப் பெற மாசினைக் குறைப்போம்.அதிக மரக்கன்றுகளை நட்டு வளர்ப்போம்.

தூய்மையை நேசிப்போம்!
தூய காற்றை சுவாசிப்போம்!

## உ. விருந்தோம்பல் பண்பாடு

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | விருந்தினரை உபசரித்தல் |
| விருந்து போற்றும் திருக்குறள் | விருந்தில் வாழை இலை |
| தமிழர் மரபு ‘விருந்தோம்பல் | வாழை இலையில் உண்பதால் ஏற்படும் நன்மைகள் |
| விருந்தினர் | நாடு கடந்த தமிழ்ப் பண்பாடு |
| வறுமையிலும் விருந்து | நிறைவுரை |

**முன்னுரை:**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**விருந்து போற்றும் திருக்குறள்:**

திருவள்ளுவர் 'விருந்தோம்பல்' என்ற ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை 'மோப்பக்குழையும் அனிச்சம் ....' என்ற குறளில் குறிப்பிடுகின்றார்.

**தமிழர் மரபு 'விருந்தோம்பல்':**

கோவலன் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி கண்ணகி வருந்துகின்றாள் என்பது மூலம் விருந்து தமிழர் மரபு என்கிறார் இளங்கோவடிகள். கம்பரும் செயங்கொண்டாரும் விருந்தைத் தமிழர் மரபாகப் போற்றினர்.

**விருந்தினர்:**

- சங்க காலத்தில் அரசனாயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.
- கால மாற்றத்தினால் புதியவர்களை வீட்டிற்குள் அழைத்து உணவளிப்பது குறைந்தது.
- விருந்து புரப்பது குறைந்ததால் நாயக்கர் மராத்தியர் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் வழிப்போக்கர்களுக்காகக் கட்டப்பட்டன. புதியவர்களை விருந்தினராய் ஏற்பது குறைந்து ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாய் ஏற்றனர்.
- படிப்படியாக உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.

**வறுமையிலும் விருந்து:**

- வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்தனர் பழந்தமிழர் என்று புறநானூறு கூறுகிறது.
- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தளித்தாள் தலைவி. இன்று வந்த விருந்தினருக்கு விருந்தளிக்க கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்தான் தலைவன்.
- இளையான்குடி மாறநாயனார் தன் வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க, அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து விருந்து படைத்ததைப் பெரியபுராணம் மூலம் அறியலாம்.

**விருந்தினரை உபசரித்தல்:**

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்று, அவர் எதிரில் நின்று, அவர் முன் மனம் மகிழும்படி பேசுதல் வேண்டும்.
- அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்.வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும்.

**விருந்தில் வாழை இலை:**

- தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.
- உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகிய பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வர வேண்டும்.
- இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலானவைகளையும், சிறிய உணவு வகைகளையும் வைத்தனர்.

♦ இலையின் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான உணவு வகைகளை வைப்பர். நடுவில் சோறு வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவர்.

**வாழை இலையில் உண்பதால் ஏற்படும் நன்மைகள்:**

♦ வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல் நீண்ட நாட்கள் தலைமுடி கருப்பாக இருக்கும்.

♦ வாழை இலை ஒரு கிருமிநாசினி. அது உணவில் உள்ள நச்சுக்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது.

♦ வாழை இலையில் தொடர்ந்து உண்பவர்களுக்கு நோய் தாக்குவதில்லை.

♦ தோல் பளபளப்பாகும்; பித்தம் தணிக்கும்.

**நாடு கடந்த தமிழ்ப் பண்பாடு:**

♦ அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

♦ தமிழர்களின் பாரம்பரிய உணவுகளைக் கொண்டு விருந்து வைக்கின்றனர்.

♦ முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப்பாயாசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

♦ அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

**நிறைவுரை:**

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் பல்வேறு முறைகளில் பின்பற்றப்படுகிறது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர்பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

## 3. செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | இலா |
| செயற்கை நுண்ணறிவு | வாட்சன் |
| மெய்நிகர் உதவியாளர் | பெப்பர் |
| வேர்டுஸ்மித் | முடிவுரை |

**முன்னுரை:**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு ஆகும். இது பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.

**செயற்கை நுண்ணறிவு:**

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம். ஒலிப்படங்கள், எழுத்துகள், கானொலிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் மென்பொருளை ஆராய்ச்சியாளர்கள் வடிவமைக்கின்றனர். இந்த மென்பொருள் அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப் போல தானே முடிவெடுக்கும் திறனுடையது. செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் கேட்கவும் புரிந்து கொள்ளவும் முடியும். மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு.

**மெய்நிகர் உதவியாளர்:**

திறன் பேசியில் இயங்கும் உதவு மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி சில உதவிகளைச் செய்கிறது.இம்மென்பொருள் நாம் சொல்லுகிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும்.நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும்.நாம் கேட்பதை உலாவியில் தேடும்.நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும். எந்தக் கடையில் எது விற்கும் என்றும் சொல்லும்.படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும். எதிர்காலத்தில் நம் நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இது போன்ற மெய்நிகர் உதவியாளர் நம்மை நன்கு அறிந்திருக்கும்.

**வேர்டுஸ்மித்:**

இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித். இதற்கு எழுத்தாளி என்று பெயர். இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்குகின்றன.

**இலா:**

பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது. ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும். அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

**வாட்சன்:**

2016இல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன். சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**பெப்பர்:**

ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன. இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றன. பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

**முடிவுரை:**

இன்று அங்கும் இங்குமாய் இருக்கும் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, நாளை உலகம் முழுவதும் அனைத்துத் துறைகளிலும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

## 4. மொழிபெயர்ப்பு

| குறிப்புச் சட்டம் |
| --- |
| முன்னுரை<br>மொழிபெயர்ப்பு<br>மொழிபெயர்ப்பு தவறானால்..<br>இடம்பார்த்து மொழிபெயர்க்க<br>தமிழ் இலக்கியமும் மொழிபெயர்ப்பும்<br>முடிவுரை |

**முன்னுரை:**

உலகம் தகவல் தொழில்நுட்பத்தினால் சுருங்கி விட்ட சூழலில் கூட மொழிபெயர்ப்புத் துறை முக்கிய இடம் பெறுகிறது. இத்தகு மொழிபெயர்ப்பு கலை மக்களின் வாழ்வில் எத்தகு போக்கினைச் செய்கிறது என்பது பற்றிக் காண்போம்.

**மொழிபெயர்ப்பு:**

மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில் உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை எந்தவித பொருள் மாற்றமும் இல்லாமல் வேறு மொழியில் பெயர்ப்பு செய்வது மொழிபெயர்ப்பு எனப்படும். ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார். மு.கு. ஜகந்நாதர்.'ஒரு மொழி வளம் பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்' என்கிறார்.

**மொழிபெயர்ப்பு தவறானால்..**

உலகப் போரின்போது அமெரிக்கா சரணடையாவிட்டால் குண்டு வீசப்படும் என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாமையால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டு வீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்கு 'விடைதர அவகாசம் வேண்டும்' என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள் 'மறுக்கிறோம்' என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர். அதனால்தான் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது; மொழிபெயர்ப்புச் சரியாக அமைந்து இருந்தால் பேரழிவு தடுக்கப்பட்டிருக்கும்.

**இடம்பார்த்து மொழிபெயர்க்க:**

Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. ஆகவே Telegraph, Television, Telephone, Telescope, Telemetry முதலிய சொற்கள் மொழிபெயர்க்கப்படுகிற போது தொலைவரி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி, தொலை அளவியல் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன. இதற்கு மாறாக Transcribe, Transfer, Transform, Transact ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது படியெடுத்தல், மாறுதல், உருமாற்றுதல், செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன. இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. எனவே இடம் பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**தமிழ் இலக்கியமும் மொழிபெயர்ப்பும்:**

'மாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூா் செப்பேடு குறிப்பின் மூலம் சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயா்ப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளது என்பதை உணர முடிகிறது.வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள். தமிழ் மொழிக்குரிய நூலாகிய திருக்குறள் உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதன் காரணமாக உலகப் பொதுமறையாக உயர்ந்தது.பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலியவை ஆகும்.வடமொழியில் வழங்கிவந்த இராமாயண மகாபாரத செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்று இருப்பதைக் காணும்போது பிறமொழிக் கருத்துகள் சங்க காலத்திலேயே தமிழ்ப்படுத்தப்பட்டன என்பதை உணர முடிகிறது.

**முடிவுரை:**

மொழிபெயர்ப்புகள் கழிவின்றி சிதறலின்றி மூலமொழியின் கருத்துகளை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்.ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.ஏதேனும் ஒரு மொழியை நாம் கற்று மொழிபெயர்ப்புத் துறையில் பங்களிப்பு செய்யலாம்.

## 5. நிகழ்கலைகள்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | சேர்வையாட்டம் |
| நிகழ்கலையின் வடிவங்கள் | பொய்க்கால் குதிரையாட்டம் |
| கரகாட்டம் | தப்பாட்டம் |
| மயிலாட்டம் | புலியாட்டம் |
| காவடியாட்டம் | தெருக்கூத்து |
| ஒயிலாட்டம் | முடிவுரை |
| தேவராட்டம் | |

**முன்னுரை:**

ஆயக்கலைகள் 64 என்பர் சான்றோர். பொழுது போக்குவதற்கும் மனமகிழ்ச்சிக்கும் கலைகள் உதவுகின்றன.ஆனால் அவை இன்று நம்மிடையே பல்வேறு சூழலால் குறைந்து வருகின்றன.

**நிகழ்கலையின் வடிவங்கள்:**

பொதுவாக நிகழ்கலை, அவை நிகழும் இடங்கள் ஊரில் பொதுமக்கள் கூடும் இடம், கோயில் போன்ற இடங்களில் நடைபெறும். இவ்வகை கலைகள் பல்வேறு வழிகளில் ஆடல் பாடல்களோடு நடைபெறும். சான்றாக கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து போன்றன.

**கரகாட்டம்:**

கரகம் என்பது, பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுதல் ஆகும் 'நீரற வறியாக் கரகத்து' என்னும் புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் ஒன்று 'குடக்கூத்து' எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. திருநெல்வேலி, திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர் ஆகியன கரகாட்டம் நிகழ்த்தப்படும் மாவட்டங்கள் ஆகும்.

**மயிலாட்டம்:**

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கு ஏற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டம். கரகாட்டத்தின் துணையாட்டம் மயிலாட்டமே.

- ஊர்ந்து ஆடுதல்
- மிதந்து ஆடுதல்
- இறகை விரித்தாடுதல்
- தலையைச் சாய்த்தாடுதல்
- தாவியாடுதல்
- இருபுறமும் சுற்றியாடுதல்
- அகவுதல்
- தண்ணீர் குடித்துக் கொண்டே ஆடுதல்

ஆகியன மயிலாட்டத்தில் பின்பற்றப்படும் அசைவுகள் ஆகும்.

**காவடியாட்டம்:**

'கா' என்பதன் பொருள் பாரந்தாங்கும் கோல். இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மச்சக்காவடி, தேர்க்காவடி சர்ப்பக்காவடி, பறவைக்காவடி, பூக்காவடி ஆகிய பெயர்கள் காவடியின் அமைப்புக்கேற்ப அவை அந்தந்தப் பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இலங்கை, மலேசியா உட்பட தமிழர் வாழும் பிற நாடுகளில் காவடியாட்டம் ஆடப்படுகின்றன.

**ஒயிலாட்டம்:**

ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டுதல். காலில் சலங்கையை அணிதல். சிறு துணியை இசைக்கேற்ப வீசி ஒயிலாக ஆடும் குழு ஆட்டம்.கம்பீரத்துடன் ஆடுதல் தனிச்சிறப்புடையது. தவில், தப்பு, சிங்கி, தோலால் கட்டப்பட்ட குடம், டோலக் ஆகிய இசைக் கருவிகள் ஒயிலாட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**தேவராட்டம்:**

வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். இடையிலும் தலையிலும் சிறுதுணி கட்டுவர். வேட்டி அணிந்திருப்பர். கால்களில் சலங்கை அணிவர். எளிய ஒப்பனை செய்து கொள்வர். தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி தேவதுந்துபி. இதன் பொதுவான பெயர் உறுமி.

**சேர்வையாட்டம்:**

தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை சேர்வையாட்டம். சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இசைச்சார்பு கலையாகவும், வழிபாட்டுக் கலையாகவும் உள்ளது.

**பொய்க்கால் குதிரையாட்டம்:**

குதிரை வடிவக் கூண்டுக்குள் நின்று குதிரை ஆடுவது போல ஆடுவது பொய்க்கால் குதிரையாட்டம். புரவி ஆட்டம், கச்சி கொடி, புரவி நாட்டியம், குதிரைக்களி என்றெல்லாம் இவ்வாட்டம் அழைக்கப்படுகின்றது.

**தப்பாட்டம்:**

தப்பு என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கேற்ப ஆடும் ஆட்டமே தப்பாட்டம். தப்பாட்டம், தப்பு, தப்பட்டை, பறை. இதன் வேறு பெயர்கள் ஆகும். ‘தப் தப்’ என ஒலிப்பதால் தப்பாட்டம் எனப் பெயர் பெற்றது. கோவில் திருவிழா, விளம்பர நிகழ்ச்சி, திருமண விழா, விழிப்புணர்வு முகாம், இறப்பு ஆகிய இடங்களில் இது நிகழ்த்தப்படுகின்றது.

**புலியாட்டம்:**

தமிழரின் வீரத்தை சொல்லும் கலையாகத் திகழ்வது புலியாட்டம். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் ஒன்று. புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக் கோடுகளையிட்டுத் துணியால் ஆன வாலை இடுப்பில் கட்டி ஆடுவர். புலியைப் போல நடத்தல், எம்பிக் குதித்தல், பதுங்குதல், நாக்கால் வருடுதல், பாய்தல், பற்கள் தெரிய வாயைப் பிளந்து உறுமுதல் ஆகியன இவ்வாட்ட அசைவுகள் ஆகும்.

**தெருக்கூத்து:**

திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை, அணி ஒப்பனையுடன் தெருச்சந்திப்புகளிலும் களத்து மேடுகளிலும் நடத்தப்படும் நடனம்.இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடுகளுடன் கதையை ஒருங்கிணைத்து வழங்குவர்.

**முடிவுரை:**

நிகழ்கலைகள் நம்முடைய பண்பாட்டுப் பதிவுகள். அதனை திருவிழா மற்றும் பள்ளி விழாக்களில் நிகழ்கலைக் கலைஞர்களைக் கொண்டு நிகழ்வுகளை நடத்தி, அக்கலைஞர்களின் வாழ்வாதாரம் காக்கலாம். மேலும் நாமும் நிகழ்கலைகளைக் கற்று, கலைகளை அழியாமல் காப்போம்.

### 6. மா.பொ.சிவஞானம் வாழ்வும் வரலாறும்

| குறிப்புச் சட்டம் |
| --- |
| முன்னுரை |
| இளமை |
| புத்தகப்பித்தன் |
| பணி - படைப்பு - சிறப்பு |
| சிலம்புச் செல்வர் |
| சென்னையை மீட்போம் |
| முடிவுரை |

**முன்னுரை:**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்தவர் ம.பொ.சி.அவரின் வாழ்க்கை வரலாறு பற்றிக் காண்போம்.

**இளமை:**

ம.பொ.சி. சென்னை ஆயிரம் விளக்கு சால்வன் குப்பத்தில் 1906இல் பொன்னுச்சாமி – சிவகாமி ஆகியோருக்கு மகனாக பிறந்தார். மா.பொ.சிவஞானம் அவர்கள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஞானப்பிரகாசம் ஆகும். சரபையர் என்ற முதியவர் இவரைச் 'சிவஞானி' என்றே அழைத்தார். அதுவே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்றானது. ம.பொ.சிக்கு அவரது அன்னையார் அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பயிற்றுவித்தார்.

**புத்தகப்பித்தன்:**

நூல் வாங்குவதற்குப் போதிய பணம் இல்லாத குறையைப் போக்க பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று, விருப்பமான புத்தகங்களை, மிகக்குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டு இருந்தார் மா.பொ.சிவஞானம். உணவுக்காக வைத்திருந்த பணத்தில் புத்தகம் வாங்கி, பல வேளைகளில் பட்டினி கிடந்தார். குறைந்த விலைக்கு நல்ல நூல் ஒன்று கிடைத்தால் பேரானந்தம் அடைவார். இவர் தன்னுடைய வாழ்நாளில் சேர்த்து வைத்துள்ள சொத்துகள் பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்கிறார். இதன் மூலம் சிலம்புச் செல்வர் மா.பொ.சிவஞானம், 'புத்தகப்பித்தன்' என்பதை அறியலாம்.

**பணி - படைப்பு - சிறப்பு:**

| | |
|---|---|
| பணி | : சிறந்த விடுதலைப்போராட்ட வீரர், 1952 முதல்1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினர், 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவர். |
| படைப்புகள் | : எனது போராட்டம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு முதலியன. |
| விருது | : 1966இல் 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது. |

**சிலம்புச் செல்வர்:**

நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியதற்குக் காரணம் உண்டு. திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவன் அல்லன். ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்தக் கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டு என்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறு இல்லை என்று உறுதியாகக் கூறுவேன். இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச்சொத்து. எனவேதான் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம் என்று சிலப்பதிகாரம் குறித்து சிலப்பதிகாரத்தை எல்லா இடங்களிலும் பரப்புரை செய்ததால், இவர் 'சிலம்புச் செல்வர்' எனப் புகழப்பட்டார்.

**சென்னையை மீட்போம்:**

ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னை அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று சில ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியைத் துறக்கவும் இராஜாஜி முன்வந்தார். மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு சென்னை பற்றிய தீர்மானம் முன்மொழியப்பட்டது.தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கிய தன் விளைவாக 25.08.1953 அன்று சென்னை தமிழருக்கே என்பது உறுதியானது என்று 'சென்னையை மீட்போம்' என்று சென்னையை மீட்டது குறித்து ம.பொ.சி குறிப்பிடுகிறார்.

**முடிவுரை:**

தேவைக்காக வாழாமல் சேவைக்காகவே வாழ்ந்தவர் மா.பொ.சி. ஆவார். அவர் புகழை என்றும் மறவாமல் போற்றி, அவர் போல நாட்டுப்பற்றுடனும், தமிழ்ப்பற்றுடனும் வாழ்வோம்.

## 7. கொரோனா வைரஸ் விழிப்புணர்வு

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை<br>கொரோனா வைரஸ்<br>அறிகுறிகள் மற்றும் பரவுதல்<br>அபாயம் | தடுப்பு நடவடிக்கை<br>சுகாதாரத்துறை அறிவுரை<br>முடிவுரை |

**முன்னுரை:**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. சுகாதாரக் குறைபாட்டால் குறைவற்ற செல்வத்தைப் பெறமுடியவில்லை. தற்சமயம் உலகையே அச்சுறுத்திக் கொண்டுள்ள வைரஸ் கொரோனா வைரஸ் ஆகும். இதனால் பலர் இறந்தும் வருகின்றனர்.அத்தகைய வைரஸ் பற்றியும், அதிலிருந்து நாம் எவ்வாறு தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் காண்போம்.

**கொரோனா வைரஸ்:**

கொரோனா வைரஸ் என்பது விலங்குகளிடம் இருந்து விலங்குகளுக்குப் பரவும் ஒரு நோய். இந்த நோய் படிப்படியாக தற்போது விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கும் பரவத் தொடங்கியுள்ளது. இந்த வைரஸ் கிருமி வட்ட வடிவில் உள்ளது. இதன்மேல் கிரீடம் இருப்பது போன்ற தோற்றம் கொண்டது. இதனால் தான் இதற்கு கொரோனா என்று பெயர் வைக்கப்பட்டது.இதுவரை 7 வகையான கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட நாவல் கொரோனா வைரஸ் எந்த மிருகத்தில் இருந்து பரவியது என உறுதியான ஆராய்ச்சி முடிவுகள் இல்லை.

**அறிகுறிகள் மற்றும் பரவுதல்:**

கொரோனா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டவுடன் சளி மற்றும் இருமல் தான் இருக்கும். இந்த நோயின் தாக்கம் வெளிப்படுவதற்கு 2 வாரங்கள் ஆகும் என உலக சுகாதாரத்துறை நிறுவனம் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளவர்களுக்கு இருமல் மற்றும் தும்மல் ஏற்படும் போது அவர்களது வாயில் இருந்து வெளிவரும் நீர்த் துளிகள் பிறர் மீது படும் போதும் அல்லது அந்த நீர்த் துளிகள் உள்ள இடங்களில் கை வைத்து அதை முகத்தின் அருகே கொண்டு வரும்போதும் கொரோனா வைரஸ் பரவுகிறது.

**அபாயம்:**

கொரோனா வைரஸ் கிருமியின் தாக்குதல் அதிக அளவில் பரவி இருக்கிறது. ஆனால் தற்போது உள்ள நாவல் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் இறக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களில் குறைந்த சதவீதம் பேர் மட்டுமே இறந்துள்ளனர். இதனால் பொதுமக்கள் பயப்படத் தேவையில்லை. கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடியது தான்.இந்த வைரசால் உயிர் இழந்தவர்களில் அதிகம் பேர் முதியவர்கள் தான் என உலக சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

**தடுப்பு நடவடிக்கை:**

கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளவர்களுக்கு இருமல் மற்றும் தும்மல் ஏற்படும் போது அவர்களது வாயில் இருந்து வெளிவரும் நீர்த் துளிகளால் தான் அதிக அளவில் பரவுகிறது. இதனால் கைகளைச் சோப்பு மற்றும் சானிடைசர் என்ற சுத்திகரிப்பு திரவம் கொண்டு தண்ணீரில் நன்றாக கழுவ வேண்டும். இருமல் மற்றும் சளியால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுமான வரையில் வீட்டில் இருந்து வேலை பார்ப்பது நல்லது. தும்பும் போதும், இருமல் வரும் போதும் துணி வைத்து வாயை மூடிக்கொண்டால் இந்த நோய் பரவுவதைக் குறைக்கலாம். சுகாதாரமாக இருப்பதால் இந்த நோய் பாதிப்பு முற்றிலும் தடுக்கப்படும்.

**சுகாதாரத்துறை அறிவுரை:**

- கூட்டமான, நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

- கொரோனா பாதிப்புள்ள வெளிநாட்டு ,உள்நாட்டுப் பகுதிகளுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.
- காய்ச்சல், இருமல், தும்மல் தொந்தரவுகள் தெரியவந்தால் குடும்ப மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.
- வீட்டின் தரைப்பகுதிகளை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- முகக்கவசம் அணிந்து வெளியில் செல்லுதல் வேண்டும்.
- கொரோனா பாதிப்புள்ள வெளிநாட்டு, உள்நாட்டுப் பகுதிகளுக்குப் பயணம் செய்து வந்தவர்கள். தங்களைப் பரிசோதனை செய்து, தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவைதான் கொரோனாவைத் தடுக்கும் அடிப்படைச் செயல்களாகும் என்று சுகாதாரத்துறை அறிவுரை வழங்கியுள்ளது.

**முடிவுரை:**

சுகாதாரத்துறை கூறியுள்ள எளிதான வழிமுறைகளைப் பின்பற்றி விலைமதிப்பற்ற உயிர்களைக் கொள்ளை நோய்க்குப் பலி தராமல் தடுக்கும். நம்மால் இயன்ற நடவடிக்கைகள் தேவையற்ற அச்சத்தைப் போக்கும். அதே வேளையில் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருமுன் காப்பது அவசியம்.

## PTA கட்டுரைகள்

### 1. அறத்தான் வருவதே இன்பம்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | இலக்கியம் காட்டும் அறம் |
| அறம் | அறத்தான் வருவதே இன்பம் |
| மனித வாழ்வு அறம் சார்ந்தது | முடிவுரை |

**முன்னுரை:**

உலகமே வியக்கும் அளவிற்கு அறப் பண்புகளை உருவாக்கியவர்கள் தமிழர்கள் . மக்கள் இன்பம் அடைவதற்குப் பல வழிகள் உள்ளன. பொன்னையும் பொருளையும் சேர்த்து வைத்து அதில் செலவு செய்து வாழ்வதில் இன்பம் இல்லை. அதை நன்முறையில் இல்லாதவருக்குக் கொடுப்பதால் வருவதே இன்பம்.

**அறம்:**

அறம் என்றால் நற்செயல் எனலாம். உண்மை பேசுவது அறம். நன்மை செய்வது அறம். கொடை தருவது அறம். உயிர்களைத் துன்புறுத்தாமல் இருப்பது அறம். குற்றம் மற்றும் தீமை இல்லாமல் வரும் அனைத்தும் அறம் ஆகும்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது:**

கொடை, இரக்கம், அன்பு, மனிதநேயம், தன்னலமின்மை, இன்னாசெய்யாமை, பொதுநலம் ஆகிய அனைத்தையும் மனித வாழ்வில் பார்க்க முடிகிறது. வறுமையில் வாடுபவர்களுக்குப் பொருள் கொடுப்பதும் உணவில்லாத அவர்களுக்கு உணவு கொடுப்பதுவும் அறம். அதை மனிதர் வாழ்வில் காண முடிகிறது.

**இலக்கியம் காட்டும் அறம்:**

சங்க இலக்கியங்களில் அறம் வழி வாழ்ந்த தமிழர்களைக் காணமுடிகிறது. சங்கம் மருவிய காலத்தில் அறத்தை விளக்கும் நூல்கள் தோன்றியிருந்தன. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்கிறது புறநானூறு. 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' என்கிறது குறுந்தொகை. திருக்குறள் அறன்வலியுறுத்தல் என்ற ஒரு அதிகாரத்தையே வைத்துள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவையே அறம் என்கிறது மணிமேகலை. அவ்வையாரும், 'அறம் செய்ய விரும்பு என்கிறார்.

**அறத்தான் வருவதே இன்பம்:**

அறத்தால் வருவதே இன்பம் என்று சங்ககால மக்கள் வாழ்ந்து வந்தனர். கொடைச் சிறப்பால் வள்ளல்கள் போற்றப்படுவதற்குக் காரணம் அவர்களின் அறமேயாகும். வறுமையில் வாடும் ஏழைகளுக்குத் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து, அவர்களை வாழ வைத்து அதில் இன்பம் கண்டவர்கள் தமிழர்கள். ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள் வரை அனைத்தையும் ஒன்றெனக்கருதி அறம் செய்தனர். அறம் அல்லாத செயல்களில் வரும் அனைத்தும் துன்பமே தரும் என எண்ணினர்.

**முடிவுரை:**

அன்பாலும் அருளாலும் பண்பாலும் அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்வதே அறமாகும். அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் என்பது உறுதி.

**உ. மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!**

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | மழை நீரைக் காப்போம் |
| இயற்கையோடு இயைந்த வாழ்க்கை | மரம் வளர்ப்போம் |
| காற்று மாசு | முடிவுரை |

**முன்னுரை:**

‘துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.’

என்கிறது திருக்குறள். நீருக்கு அடிப்படையான மரத்தையும் மரத்தால் கிடைக்கும் நீரையும் பாதுகாக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கும்.

**இயற்கையோடு இயைந்த வாழ்க்கை:**

சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டனர். ஓரறிவு மரத்தையும் கூட தன் உடன் பிறந்தவர்களாக எண்ணி வாழ்ந்தனர். பழங்கால மக்கள் இயற்கையைப் போற்றி இயற்கைக்குத் தீங்கு விளைவிக்காமல் இயற்கையாக விளைந்த பொருட்களையே உண்டு வாழ்ந்தனர். அதனால் அன்று நோயும் பேரழிவுகளும் கிடையாது.

**காற்று மாசு:**

உயிரினங்கள் வாழ காற்று அவசியமாகும். கரியமில வாயு கடந்த 200 ஆண்டுகளில் அதன் இயற்கை அளவைவிட 26 விழுக்காடு அதிகரித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு ஒரு விழுக்காடு. இது உயர்ந்து கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளும் வாகனங்களும் பெருகி காற்றை மாசுபடுத்துகிறது. அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**மழை நீரைக் காப்போம்:**

‘எனது தாத்தா ஆற்றில் நீரைப் பார்த்தார்
எனது தந்தை கிணற்றில் நீரைப் பார்த்தார்
நான் குழாயில் நீரைப் பார்த்தேன்.
என் மகன்கள் பாட்டில்களில் நீரைப் பார்க்கின்றனர்
எனது பேரக் குழந்தைகள்???’

வானத்திலிருந்து சிறு துளியாய் பெய்த நீர் பூமியில் பெரு வெள்ளமாய் பெருகி கடலில் கலக்கிறது. பெய்யும் மழை நீரை வீணாக்காமல் மழை நீர் சேமிப்புத் தொட்டி மூலம் சேமித்து பாதுகாத்து வைக்க வேண்டும். அப்போது தான் அது எதிர்காலத் தண்ணீர்த் தேவையைச் சரிசெய்ய முடியும்.

**மரம் வளர்ப்போம்:**

'ஒளியை வடிகட்டும்
ஓசோன் படலத்தைப்
பின்னித் தருகின்ற
நெசவாளிகள் .......மரங்கள்'
'பூமியின் பச்சை இதயம் மரங்கள்'

மேகங்களைத் திரட்டிக் குளிர்ச்சியூட்டி மழை பொழிய வைப்பவை காடுகளே. இந்தக் காட்டிற்கு அடிப்படைக் காரணம் மரங்கள். காடுகள் அழிக்கப்பட்டதால், மழை இல்லாமல் மழையின் அளவும் குறைந்து போய் வருகிறது. காடுகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். மரக்கன்றுகளை அதிகமாக நட்டு மரங்களை வளர்க்க வேண்டும்.

**முடிவுரை:**

தம்மையே நமக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் இத்தகைய மரங்களுக்கு நாம் கொடுக்கும் வெகுமதி அவைகளை அளிப்பதா? சற்று சிந்தியுங்கள். மரம் வளர்ப்பதையும் மழை நீர் சேமிப்பு அதையும் நம் இரு கண்களாக கொண்டு செயல்படவேண்டும்.

'பல்லுப் போனால் சொல்லுப் பேச்சு
மரம் போனால் மழை போச்சு.'

### 3. சாலை விதிகளைக் கடைபிடிப்போம்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை<br>உயிர்ப் பாதுகாப்பு<br>சாலை விதிகள் | நெறிமுறைகள்<br>விழிப்புணர்வு<br>முடிவுரை |

**முன்னுரை:**

வாகனங்கள் ஓட்டி செல்லும் சாலையில் நடந்து செல்பவர்களும் சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். சாலை விதிகளைப் பின்பற்றாமல் நடப்பதனால் சாலை விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. சாலை விதிகளை எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் என்பதை பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

**உயிர்ப் பாதுகாப்பு:**

'அரசுக்கும் தனியாருக்கும்
விபத்தில் கூடவா போட்டி..?
போட்டி போட்டு
இடித்து அழிக்கிறார்கள்
மக்கள் கனவுகளை...
நீதி மன்றங்களில் இன்னமும்
தேங்கி இருப்பதெல்லாம்..
விபத்து வழக்குகள் தான்...' – கவிஞர் தமிழ் நிலா.

சாலை என்பது விளையாட்டு மைதானம் அன்று. கவனமில்லாமல் வாகனங்களை ஓட்டுவது, வேகமாக வாகனங்களை ஓட்டுவது, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனங்களை இயக்குவது ஆகியவை விபத்தினையும் ஏற்படுத்தும்; மரணத்தையும் தரும். சாலையைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தினால் விபத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**சாலை விதிகள்:**

- ஒருவழிப் பாதை‘ என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில், எந்தத் திசையில் செல்வதற்கு அனுமதி உண்டோ? அந்தத் திசையில் மட்டுமே செல்ல வேண்டும். அனுமதிக்கப்பட்ட திசையில் இல்லாமல் எதிர்திசையில் வாகனத்தைப் பின்னால் செலுத்தக் கூடாது.
- தடக் கோடுகள் இடப்பட்ட சாலைகளில், தடத்தின் உள்ளேயே வாகனத்தைச் செலுத்த வேண்டும். தடம் மாற நேர்ந்தால், மாறுவதற்கு முன்பு உரிய கை சைகைகள் (இண்டிகேட்டர்) காட்ட வேண்டும்.
- சாலையின் நடுவே மஞ்சள் கோடு இருந்தால், முன்னே செல்லும் வாகனத்தை முந்துவற்கு, எக்காரணம் கொண்டும் மஞ்சள் கோட்டைக் கடக்கக் கூடாது.
- சாலைச் சந்திப்பு, பாதசாரிகள் கடக்கும் இடம் போன்ற இடங்களைத் திரும்பும்போது, சாலை மீது, ‘நிறுத்தம்‘ என்ற அடையாளத்தைக் கண்டால், வாகனத்தை நிறுத்தக் கோட்டுக்கு முன்னால் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**நெறிமுறைகள்:**

‘தலைக்கவசம் உயிர்க் கவசம்’.
‘100ல் போனால் 108 வரும்’.

சாலையில் இடப்பக்கம் வண்டியை ஓட்ட வேண்டும். அடையாளப் பலகைகளை அறிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும். மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கை பட்டை அணியவேண்டும். தீயணைப்பு ஊர்திக்கும், பணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிட வேண்டும்.

**விழிப்புணர்வு:**

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் சமீபத்திய அறிக்கை ஒன்று திடுக்கிடும் புள்ளிவிவரத்தைத் தருகிறது. 2006 - 07ஆம் ஆண்டுகளில் 178 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான அறிக்கையின்படி, சுமார் 12 லட்சத்துக்கும் அதிகமானோர் சாலை விபத்துகளில் ஆண்டுதோறும் மரணமடைவதாகத் தெரிகிறது. படுகாயமடைவோரின் எண்ணிக்கை இரண்டரை கோடிக்கும் அதிகம் என்கிறது அந்த ஆய்வு. அந்த ஆய்வில் அதைவிட அதிர்ச்சி அளிக்கும் விஷயம் என்னவென்றால், உலகிலேயே மிக அதிகமானோர் சாலை விபத்துகளில் பலியாவது இந்தியாவில்தான் என்பதுதான்.

**முடிவுரை:**

இந்தியாவைவிட அதிக அளவில் வாகனங்கள் இருந்தாலும், வளர்ச்சி அடைந்த நாடுகளில் சாலை விபத்துகள் கணிசமாகக் குறைந்து இருப்பதற்கு முக்கியக் காரணம், அங்கே சாலை விதிகள் மிகவும் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. சுவீடன், ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகக் குறைவாகவே சாலை விபத்துகள் நடைபெறுகிறது.

எனவே சாலை விதிகளை மதிப்போம்! விபத்துகளைத் தவிர்ப்போம்!!

## 4. தமிழகம் தந்த தவப்புதல்வர் திரு.வி.க.

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை<br>இளமை<br>கல்வி<br>நாட்டுப்பற்று<br>தமிழ்ப்பற்று | பொதுவாழ்வில் தூய்மை<br>எளிமை<br>மகத்தான பணி<br>முடிவுரை |

**முன்னுரை:**

தமிழின் அருமையும் தாய்நாட்டின் விடுதலையும் தன் உயிராக கருதி, தமிழுக்கும் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றிய பெருமகனார் திரு.வி.கல்யாணசுந்தரம் ஆகிய திரு.வி.க. ஆவார். தன்னலம் கருதாத உள்ளம் கொண்டவர். அவரைப் பற்றி இக்கட்டுரை விளக்கி நிற்கும்.

**இளமை:**

காஞ்சிபுரம் மாவட்டம் துள்ளம் என்ற சிற்றூரில் (1883) பிறந்தவர். தந்தை ஆசிரியர், வணிகர். இசை, இலக்கியப் பயிற்சி பெற்றவர். அவரிடமே கல்வியைத் தொடங்கிய திரு.வி.க., பின்னர் சென்னை இராயப்பேட்டையில் தங்கி ஆரம்பக்கல்வி பயின்றார்.

**கல்வி:**

யாழ்ப்பாணம் நா.கதிரவேற் பிள்ளையிடம் புராணங்கள், யாப்பிலக்கணமும், மயிலை மகாவித்வான் தணிகாசல முதலியாரிடம் வடமொழி, சைவ சமய நூல்களையும், பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதங்களையும், அப்துல் கரீமிடம் திருக்குர்ஆனும் கற்றார். ஜஸ்டிஸ் சதாசிவராவ் தொடர்பால் ஆங்கில அறிவும் பெற்றார்.

**நாட்டுப்பற்று:**

அன்னிபெசன்ட் அம்மையார், மறைமலை அடிகளாரின் தொடர்பு இவரை உயர்த்தியது. 1906-ல் ஸ்பென்சர் நிறுவனத்தில் கணக்கராக சேர்ந்தார். விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டதால், அந்த வேலையைத் துறந்தார். ‘தேச பக்தன்’ பத்திரிகையின் ஆசிரியராக இரண்டரை ஆண்டுகள் இருந்தார். தனது எழுச்சிமிக்க எழுத்துகளால், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களைப் பொங்கி எழச்செய்தார். அந்நிய அடக்குமுறையை எதிர்த்து மேடைகளில் ஆவேசமாக உரை நிகழ்த்தினார்.

**தமிழ்ப்பற்று:**

சென்னை மகாஜன சங்கக் கூட்டத்தில் ‘இனி எங்கும் எவரும் தமிழிலேயே பேசவேண்டும்’ என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். சென்னையில் காந்தியடிகள் ஆற்றிய உரையை அற்புதமாக மொழிபெயர்த்து காந்தியடிகளிடம் பாராட்டு பெற்றார். முருகன் அருள் வேட்டல், கிறிஸ்துவின் அருள் வேட்டல், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், நாயன்மார் வரலாறு, தேசபக்தாமிர்தம், முருகன் அல்லது அழகு என பல்வேறு துறைகளில் ஏராளமான நூல்களைப் படைத்துள்ளார்.

**பொதுவாழ்வில் தூய்மை:**

சென்னையில் 1918-இல் முதன்முதலாக தொழிற்சங்கம் உருவானதில் இவரது பங்கு மகத்தானது. அச்சகத் தொழிலாளர்களுக்கான சங்கங்கள் உருவாகவும் காரணமாக இருந்தார். 1920-இல் நவசக்தி வார இதழைத் தொடங்கி 20 ஆண்டுகள் நடத்தினார். தன் எழுத்துகளால் தேசபக்திக் கனலை மூட்டினார். 1926-இல் அரசியலைத் துறந்தார். பதில் பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, மாதர் சங்கம், கைம்மைப் பெண்கள் கழகம் ஆகிய அமைப்புகள் உருவாகக் காரணமாக இருந்தார்.

**எளிமை:**

எளிமையின் உருவமாகத் திகழ்ந்தவர். சொந்தவீடு கிடையாது. செருப்புகூட அணியமாட்டார். எளிய, தூய கதராடையே உடுத்துவார். தம்முடைய நூல்களைத் தாமே மிதிவண்டியில் ஏற்றிச் சென்று விற்பார். மிகுந்த ஏழ்மை நிலையிலும் தன்னுடைய மாணவர் கல்கி கொடுத்த பணத்தையும் ஏற்க மறுத்தார்.

**மகத்தான பணி:**

புதிய உரைநடையின் தந்தை, மேடைப் பேச்சின் தந்தை என்றும் போற்றப்பட்டார். இவரின் மகத்தான பணியால் “தமிழ்த் தென்றல், பேச்சுப் புயல், எழுத்து எரிமலை, செய்தித்தாள் சிற்பி” என்றெல்லாம் புகழப்பட்டார். ‘தமிழ்நாட்டு காந்தியாகவும், தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் தந்தையாகவும், தொழிலாளர்களுக்குத் தாயாகவும் விளங்கியவர்’ என்று இவரைப் பாராட்டியுள்ளார் கல்கி.

**முடிவுரை:**

யார் ஒருவர் தன்னலம் கருதாது தன் மொழிக்காகவும், தன் மக்களுக்காகவும், தன் மண்ணுக்காகவும் உழைக்கிறாரோ அவருடைய வாழ்க்கை வரலாறு ஆகிறது. 'திரு.வி.க. தமிழ்' என்று அழைக்கும் வண்ணம் புதுவகை நடையைத் தோற்றுவித்தவர். தமிழ்ப்பணி, நாட்டுப் பணியுடன் சமயப்பணியும் ஆற்றிய திரு.வி.க. 70-வது வயதில் (1953) மறைந்தார். அவர் வாழ்வை நம் பாதையாக ஏற்போம்.

## 5. விண்வெளி ஆய்வும் இந்தியாவும்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | சாதனைகள் |
| தமிழன் அறிவியல் முன்னோடி | நமது கடமை |
| விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் | முடிவுரை |

**முன்னுரை:**

அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர். அறிவியல் தோன்றுவதற்கு முன்பே அறிவியல் துறையில் சிறந்து இருந்தவர்கள் இந்தியர்கள். அதுவும் குறிப்பாக தமிழர்கள் தான்.

**தமிழன் அறிவியல் முன்னோடி:**

'வலவன் ஏவா வானூர்தி' (புறம், 27) என்னும் தொடர், வலவனால் ஏவப்படாத வானூர்தியைப் பழந்தமிழர்கள் விண்ணில் செலுத்தி இருக்கலாம் என உணர்த்துகிறது. இது செயற்கைக்கோளைப் போன்றது என்று கருத இடமுண்டு. 'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்' பெருங்கதையின் வரியின் வாயிலாக, நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக்கிணறு அக்காலத்தில் இருந்திருக்கலாம் என அறியலாம். வேதியியல், உயிரியல், இயற்பியல், அணுவியல், மண்ணியல், கனிமவியல் ஆகிய அறிவியல் துறை கருத்துகள் தமிழ் இலக்கியத்தில் தோன்றியுள்ளது.

**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்:**

கல்பனா சாவ்லா அரியானா மாநிலம் கர்னலில் 1916ல் பிறந்தார். பஞ்சாபிக் குடும்பத்தைச் சார்ந்தவர். கல்பனா என்றால் கற்பனை என்ற பொருள். தாகூர் அரசுப் பள்ளியில் கல்பனா சாவ்லா ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார்.பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் பட்டம் பெற்றார். விண்வெளிப் படிப்பை அமெரிக்காவில் முடித்தார். கல்பனா சாவ்லா 1995ல் நாசாவில் இணைந்தார். 1997ல் விண்வெளிப்பயணம் செய்தார். 372 மணிநேரம் வானத்திலேயே இருந்து சாதனை புரிந்தார். 2003 சனவரியில் கொலம்பியா விண்கலத்தில் விண்வெளி சென்றார் கல்பனா சாவ்லா. விண்வெளி ஆய்வை முடித்துத் திரும்பும் போது விண்வெளி ஓடம் வெடித்து கல்பனா சாவ்லா விண்ணில் கலந்தார்.

**இஸ்ரோ:**

இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) பெங்களூரில் உள்ளது. திரு.கே.சிவன் என்பவர் 14.1.2018 முதல் இதன் தலைவராக உள்ளார். குறைந்த செலவில் தரமான சேவையைக் கொடுப்பதனை நோக்கமாக இஸ்ரோ கொண்டுள்ளது. இதுவரை 109 செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உலகின் மிகப் பெரிய விண்வெளி ஆய்வு மையத்தில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது.

**சாதனைகள்:**

- 1975இல் இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஆரியப்பட்டா சோவியத் ரஷ்யா உதவியால் விண்ணில் செலுத்தப்பட்டது. விக்ரம் சாராபாய் இதற்கு மூலகாரணமாவார்.
- 1980இல் முதல் செயற்கைக் கோள் ரோகினி விண்ணில் ஏவப்பட்டது.
- சந்திராயன்-1 நிலவை நோக்கி 2008இல் விண்ணில் ஏவப்பட்டது.
- நேவிக் என்ற செயலியைக் கடல் பயணத்திற்கு உருவாக்கியிருக்கிறது.
- 2018இல் கார்ட்டோசாட்-2 செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

**நமது கடமை:**

விண்ணியலை ஆராய்ந்து ஆய்ந்து விண்ணுக்கு வாகனம் செலுத்திய முதல் மனிதன் தமிழன். அத்தகைய மரபில் பிறந்த நாம் விண்ணியல் அறிவை மேலும் வளர்க்க வேண்டும். விண்ணியல் புதிய கோட்பாடுகளை உருவாக்க வேண்டும். விண்ணியல் ஆய்வில் முழுமையாக ஈடுபட வேண்டும் நமது கடமையாகும்.

**முடிவுரை:**

'தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா'

நம்நாட்டிற்குத் தேவையான செயற்கைக்கோளை விண்ணில் அனுப்பி நம் தேவைகளை நிறைவு செய்வதே நம் முதற்பணியாகக் கொள்ளவேண்டும். அறிவியல் தந்த தமிழர் மரபில் பிறந்த நாம் அறிவியல் தமிழை வளர்ப்போம்! விண்வெளித்துறையில் புதிய சாதனைகள் புரிவோம்!

## 6. உழவின் சிறப்பு

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | உழவரே சிறந்தவர் |
| பண்பாட்டின் மகுடம் | உழவே முதன்மை |
| உழவின் சிறப்புகள் | முடிவுரை |

**முன்னுரை:**

பூமி எப்படித் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறதோ! அதுபோல தான் விவசாயியும் தனக்கு வேண்டிய உணவை உற்பத்திச் செய்துவிட்டு பிறருக்கும் உணவை உற்பத்திச் செய்து தருகின்றனர். இப்படிப்பட்ட விவசாயின் உழவுக்கு உயிரூட்டுவோம் என்ற வகையில் சில கருத்துகளைக் காண்போம்.

**பண்பாட்டின் மகுடம்:**

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்பது பழமொழி. ஆம் அனைவரும் கணக்கு பார்ப்பது போல உழுகின்றவனும் கணக்குப் பார்த்தால் உணவு கூட மிஞ்சாது. செங்கோல் நடத்துவது உழவனின் ஏரடிக்கும் சிறுகோல் என்றுரைத்தார் கம்பர். உலகம் என்னும் தேருக்கு உழவனே அச்சாணி என்றுரைத்தார் வள்ளுவர்.

ஔவையார், இளவரசரே வாழ்க என்று வாழ்த்தவில்லை. அரசே உன் வரப்புகள் உயர்க என்று தான் வாழ்த்துவார். காரணம், வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோனுயர்வான் என்ற உழவையே உவமையாகக் கூறுவார்.

**உழவின் சிறப்புகள்:**

உலகில் நடைபெறும் தொழில்களில் தலைமைத் தன்மை வாய்ந்தது உழவுத் தொழில் எனலாம். இதனால்தான், 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' (1031) என்று வள்ளுவர் கூறினார் போலும். இந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில்,

'எங்க ஏரோட்டம் நின்னு போனா
உங்கக் காரோட்டம் என்னவாகும்'

என்று கேள்வி எழுப்புகிறார் கவிஞர் கண்ணதாசன்.

உழவுத் தொழிலின் மேன்மையை உணர்ந்தே அரசாங்கமும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நல்ல பல திட்டங்களின் வழி வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**உழவரே சிறந்தவர்:**

உழுதலாகியத் தொழிலைச் செய்யும் வேளாண் மக்களே உரிமையோடு வாழ்கின்றனர் என்று எண்ணத்தக்கவர்கள். மற்ற பணிகளைச் செய்பவர்கள் எல்லாம் யாரையாவது தொழுது, தங்களின் தொழிலைச் செய்து வருபவர்கள் ஆகின்றார்கள். விடுமுறையே இல்லாமல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து உழைக்கின்ற பெருமக்கள் உழவர் பெருமக்கள். அவர்களின் வாழ்வும், நலமும் என்றைக்கும் காக்கப்பட வேண்டியனவாகும். மற்ற தொழில்களில் பழுது இருக்கும். குற்றம் இருக்கும். குறைகள் இருக்கும். அழுத்தம் இருக்கும். ஆனால் பழுதில்லா ஒரே தொழில் விவசாயம் தான் என்கிறார் ஔவையார்.

**உழவே முதன்மை:**

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்கிறார் திருவள்ளுவர்.

உழுதலாகியத் தொழிலைச் செய்யும் வேளாண் மக்களே உரிமையோடு வாழ்கின்றனர் என்று எண்ணத்தக்கவர்கள். மற்ற பணிகளைச் செய்பவர்கள் எல்லாம் யாரையாவது தொழுது, தங்களின் தொழிலைச் செய்து வருபவர்கள் ஆகின்றார்கள்.

இதே குறளுக்கு மற்றொரு நிலையிலும் விளக்கம் சொல்லலாம். உழவுத் தொழில் செய்பவர்களே சிறந்தவர்கள். மற்றவர்கள் உழவுத் தொழிலைச் செய்யக் கூடியவர்களாகிய வேளாண் மக்களைத் தொழுது வாழவேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் பொருள் சொல்லலாம். எனவே, உழவே முதன்மை.

**முடிவுரை:**

உலகத்திற்கு அச்சாணி போன்றவர்கள் உழவர்கள். அவர்களின் உளம் மகிழ நிலமென்னும் தாய் தானிய வளத்தை அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கட்டும்.

## 7. மொழிபெயர்ப்பும் அதன் சிறப்பும்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | பாரதியின் கனவு |
| மொழிபெயர்ப்பு | மொழிபெயர்ப்புக் கல்வி |
| மொழிபெயர்ப்பு நூல்கள் | முடிவுரை |

**முன்னுரை:**

மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளைப் போக்கி ஒன்றுபடுத்த உதவுவது மொழி பெயர்ப்பு ஆகும். ஒருமொழியில் உள்ள அறிவையும் உணர்வையும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும் மிகவும் அவசியமாகும். அதற்கு மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்.

**மொழிபெயர்ப்பு:**

ஒரு மொழியில் உணர்த்தப்பட்டது வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா. ஒரு மொழியில் உள்ள இலக்கியம், கலைகள், ஆய்வு நெறிகள், கோட்பாடுகள் ஆகிய அனைத்தையும் பிறமொழிகளில் மாற்றம் செய்வதே மொழிபெயர்ப்பு ஆகும். மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தமிழில் கிடைக்கக்கூடிய முதல் நூலான தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. மொழிபெயர்ப்பு சங்ககாலம் முதல் காணப்படுகின்றது.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழி பெயர்த்தல் வேண்டும்'

பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய காப்பியங்கள் வடமொழி கதைகளைத் தழுவி படைக்கப்பட்டன. ஷேக்ஸ்பியரின் கவிதைகள் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. தாகூரின் கீதாஞ்சலி நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துள்ளன. தமிழிலிருந்து பிறமொழிகளுக்கும் எண்ணற்ற நூல்கள் மொழிபெயர்ப்பும் செய்துள்ளனர்.

**பாரதியின் கனவு:**

சாகித்திய அகாதெமி நிறுவனமும் தேசிய புத்தக நிறுவனமும் பல மொழிகளிலிருந்து நல்ல படைப்புகளை எல்லா இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்துள்ளன. வேறு படைப்புகள் மட்டுமின்றி துறைசார்ந்த மொழிபெயர்ப்புகளையும் மேற்கொள்ளவேண்டும். அவ்வகையில் தமிழில் பல நூல்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனை பாரதியார்,

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'

என்றார். பாரதி கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும்.

**மொழிபெயர்ப்புக் கல்வி:**

மொழிபெயர்ப்பைக் கலையாகக் கொள்ளாமல் கல்வியாகக் கொள்ளவேண்டும். மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாக பெற முடியும். அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டார் எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை:**

'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'

பிறமொழிகளில் இருந்து தமிழிலும் தமிழிலிருந்து பிறமொழிகளிலும் இலக்கியங்கள் பெருக வேண்டும் என்பது பாரதியின் ஆசை. அதனை நிறைவேற்றுவோம். பேசக்கூடிய மொழிகள் பல பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடைய உலகம் ஆக்கப்பட வேண்டும். இதற்கு மொழிபெயர்ப்பு கல்வி இன்றியமையாததாகும்.

## உயர்சிந்தனைப் பொதுக்கட்டுரைகள்

### 1. திராவிட மொழிகள்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் |
| கால்டுவெல் | தமிழின் தனித்தன்மைகள் |
| திராவிட மொழிகளின் வகைகள் | முடிவுரை |

**முன்னுரை:**

மனித இனம் வாழ்ந்த இடஅமைப்பும், இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின. 1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. அவற்றுள் தொன்மையானது திராவிட மொழிகள் ஆகும்.

**கால்டுவெல்:**

1856 இல் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஒப்பிலக்கண நூலை கால்டுவெல் வெளியிட்டார். அந்நூலில் திராவிடமொழிகள் ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டன என்றார். சமஸ்கிருதத்திற்குள்ளும் திராவிட மொழிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்றார். திராவிட மொழிகள் குறித்த விரிவான நூல் இஃது ஒன்றே எனலாம்.

**திராவிட மொழிகளின் வகைகள்:**

தென் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள் - என மூன்றாகத் திராவிட மொழிகளை வகைப்படுத்துவர். தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியவை தென் திராவிட மொழிகள் ஆகும். தெலுங்கு, கூயி, கூவி, கோண்டா, கோலாமி, நாய்க்கி, பெங்கோ, முண்டா, பர்ஜி, கதபா, கொண்டி, கோயா ஆகியவை நடுத் திராவிட மொழிகள் ஆகும். குரூக், மால்தோ, பிராகுய் ஆகியவை வட திராவிட மொழிகள் ஆகும்.

**திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள்:**

திராவிடமொழிகளின் சொற்கள் பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளது. சான்று: கண் - தமிழ், கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு, குடகு. ஃகன் - குரூக். திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன. சான்று: மூன்று - தமிழ், மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி -துளு. திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் குறில் - நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்துகின்றன. சான்று: அடி- குறில், ஆடி - நெடில்

**தமிழின் தனித்தன்மைகள்:**

தொன்மை, இலக்கண-இலக்கிய வளம் உடையது தமிழ். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ். பிற திராவிட மொழிகளை விட தனித்த இலக்கணவளத்தைக் கொண்டு தனித்தியங்கும் மொழி தமிழ். பிறமொழித் தாக்கம் இல்லாத மொழி தமிழ். திராவிட மொழிகள் சிலவற்றிற்குத் தாய்மொழி தமிழே. ஒரு பொருளைக் குறிக்க பல சொற்கள் வழங்கும் மொழி தமிழ். பெரும்பாலான இந்தியக் கல்வெட்டுகளில் பழமையானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

**முடிவுரை:**

தமிழ்மொழியிலிருந்தே பிற திராவிட மொழிகள் தோன்றின. அதற்கு மொழியியல் அறிஞர்கள் எண்ணற்ற சான்றுகளைக் கூறுகின்றனர். வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகளில் திராவிட மொழிகள் இடம்பெற்றிருப்பது சிறப்பானதாகும்.

### 2. நீரின்றி அமையாது உலகு (அல்லது) மழைநீர் சேமிப்பு

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை<br>மழைநீர் சேமிப்பு<br>சேமிக்கும் முறை<br>பயன்கள் | மரம் வளர்ப்போம்<br>அடுத்த தலைமுறைக்கு<br>முடிவுரை |

**முன்னுரை:**

உணவின்றி கூட வாழ முடியும், ஆனால் நீரின்றி எந்த உயிர்களாலும் வாழமுடியாது. அதனால் தான் வள்ளுவரும், இளங்கோவடிகளும் மழையைப் போற்றினர். மாரி இல்லையேல் காரியமில்லை என்று முன்னோர் முதுமொழியும் மழையின் அவசியத்தை உணர்த்துகின்றது.

**மழைநீர் சேமிப்பு:**

**''சிறு துளிப் பெருவெள்ளம்''**
**''நீரின்று அமையாது உலகு''**

என்னும் தம் கருத்தை வள்ளுவர் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். மனித வாழ்வின் அடித்தளம் நீரே! அத்தகைய நீரைத் தருவது மழை. மேகம் மழை பொழிந்து நீரை நமக்குக் கொடுக்கிறது. அந்த நீரை வீணாக்காமல் நாம் சேமிக்க வேண்டும்.

**சேமிக்கும் முறை:**

வீட்டின் மீது விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் மழைநீர் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கலாம். ஏரி, குளம், கிணறு ஆகியவற்றில் மழைநீரைச் சேமிக்கலாம்.

**பயன்கள்:**

மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க் கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றது. மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழ நீரே அவசியம். குடிநீராகப் பயன்படும், எதிர்காலத்திற்குப் பயன்படும் நிலத்தடி நீர் மட்டம் உயரும். வறட்சி குறையும்.

**மரம் வளர்ப்போம்:**

**''மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்''**

மரத்தை வெட்டுவதால் மழை குறைகிறது. மண்வளம் குறைகின்றது. எனவே, நாம் மரத்தை வெட்டக் கூடாது. மழை அதிகமாக மரங்களை மிக அதிகமாக வளர்க்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கட்டாயமாக வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.

**அடுத்த தலைமுறைக்கு:**

**''இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு''**

அதிகப்படியான நிலத்தடி நீரை மக்கள் பயன்படுத்திவிட்டனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால் நிலத்தடி நீரைச் சிக்கனமாகவே பயன்படுத்த வேண்டும். மழைநீர் சேமிப்புத் தொட்டி மூலம் நிலத்தடியில் மழை நீரைச் சேமிக்க வேண்டும். மிகுதியான தடுப்பணைகளை உருவாக்க வேண்டும். இப்படிச் செய்தால் தான் அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

**முடிவுரை:**

தண்ணீரை வீணாக்கினால் கண்ணீரே மிச்சம். கடல், ஆறு, குளம், குட்டை என நீர் குறைந்து இன்று புட்டிகளில் நீரைப் பார்க்கிறோம். நாளைய நிலையில் என்னவாகுமோ? தண்ணீருக்காக உலகப்போர் கூட வரலாம். எனவே, தண்ணீரைச் சிக்கனமாகச் செலவு செய்து பெய்யும் மழைநீரை சேமிப்போம்! அனைவரும் மரம் வளர்ப்போம்!

**''மழைநீரின் சேவை! உயிர்களுக்குத் தேவை!''**

### 3. இணையப் பயன்பாடு

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை<br>அட்டைப் பயன்படுத்தும் இயந்திரம்<br>திறன் அட்டைக் கருவி<br>இணைய வணிகம்<br>ஆளறிசோதனைக் கருவி<br>இணையப் பயன்பாடுகள்<br>முடிவுரை |

**முன்னுரை:**

**''மனிதனின் ஆறாம் விரல் கணினி''**

கணினி இல்லாத இடமில்லை. தொலைபேசியுடன் கணினியை இணைத்து உலகத்தை ஒன்று சேர்ப்பது இணையம். இணையத்தோடு பல்வேறு கருவிகளை இணைத்து பயன்பாட்டிற்கு ஏற்ப கருவிகளைப் பயன்படுத்தலாம். உலகத்தில் உள்ள கணினி அனைத்தையும் இணைக்கலாம்.

**அட்டைப் பயன்படுத்தும் இயந்திரம்:**

கையில் பணம் இல்லாமல் கடைக்குச் சென்று பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் இந்தக் கருவி பயன்படுகின்றது. இந்த இயந்திரத்தில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியைத் தேய்க்கும் போது வாடிக்கையாளரின் விவரங்கள், இணையத்தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது. கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச்சொல் சரிபார்க்கப்பட்டு பணப்பரிவர்த்தனைக்கு வங்கி ஒப்புதல் அளிக்கின்றது.

**திறன் அட்டைக் கருவி:**

தமிழகத்தில் குடும்பஅட்டைகள் திறன்அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதார் எண்கள், அலைபேசி எண், முகவரி ஆகிய விவரங்கள் சேர்த்து திறன்அட்டைகள் வழங்கப்படுகின்றன. நியாயவிலைக் கடையில் திறன்அட்டை விற்பனைக்கருவியில் வருடப்படுகின்றன. அங்கு விற்பனை செய்யப்படும் விவரங்கள் குறிப்பாக பதிவு செய்யப்பட்டு அலைபேசிக்குக் குறுஞ்செய்தியாக வரும்.

**இணைய வணிகம்:**

1979இல் மைக்கல் ஆல்ட்ரிச் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார். 1989இல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக் கடை தொடங்கப்பட்டது. கரும்பு முதல் கணினி வரை விற்காத பொருளே இணைய வணிகத்தில் இல்லை என்ற நிலை இன்று வந்துவிட்டது.

**ஆளறிசோதனைக் கருவி:**

அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வருகைப் பதிவுக்காகவும் வெளியேறுகைப் பதிவுக்காகவும் ஆளறிசோதனைக்கருவி பயன்படுத்தப்படுகின்றது.

**இணையப் பயன்பாடுகள்:**

பேருந்து முன்பதிவு, விமான முன்பதிவு, தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. அரசுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியன இணையவழியில் செலுத்தப்படுகின்றன. பிறப்புச் சான்றிதழ், வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன. பள்ளி, கல்லூரிக்கட்டணங்கள் செலுத்தவும், தேர்வுக்கு விண்ணப்பிக்கவும், தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினைப் பெறவும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**முடிவுரை:**

மருத்துவம், தொழில்நுட்பம், பொறியியல், இயந்திரவியல், வானியல், மண்ணியல் என பல துறைகளிலும் இணையப் பயன்பாடும், இயந்திர வழிச்செயல்பாடும் நடந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு இணையத்தையும் அதன் வழி இயங்கும் கருவிகளையும் பயன்படுத்துவோம்.

## 4. நூலகம்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | பயன்படுத்தும் முறை |
| நூலகம் | பயன்கள் |
| தோற்றம் | பள்ளி நூலகம் |
| நூலக வகைகள் | முடிவுரை |

**முன்னுரை:**

"நூல்களை வாசி! நூலகத்தை சுவாசி!"

நூல் + அகம் = நூலகம். அறிவினை உற்பத்தி செய்யும் இடம் நூலகம் ஆகும். நூலகம் அறிஞர்களின் ஆத்மாக்கள் வாழும் இடம். அத்தகைய நூலகத்தைப் பற்றியும் அதனைப் பயன்படுத்தும் முறை பற்றியும் இக்கட்டுரை விளக்கி நிற்கும்.

**நூலகம்:**

**"வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்" - பேரறிஞர் அண்ணா**

புத்தகங்களின் சங்கமம் நூலகம். அறிவுத் திருக்கோயில் நூலகம். நாளிதழ், அகராதிகள், களஞ்சியங்கள், பொது அறிவுத் தகவல்கள், வரைபடங்கள், ஆங்கிலம், தமிழ், அறிவியல், வரலாறு, கணிதம், கணினி எனப் பல் துறை நூல்கள் காணப்படும் இடம் நூலகம். பள்ளிக்கு அடுத்தபடியாக பாடங்களைப் போதிப்பது நூலகங்களே!

**தோற்றம்:**

நூலகம் பழங்காலம் தொட்டே இருந்து வருகின்றது. தமிழ்ச் சங்கங்களில் எண்ணற்ற நூல்கள் இருந்ததாகச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன. தொடக்க காலத்தில் ஏட்டுச்சுவடிகளில் நூல்கள் இருந்தன. அச்சுக்கருவிகள் கண்டுபிடிப்புக்குப் பின்னர் நூலகங்கள் மிகுந்த வளர்ச்சி பெற்றன.

**நூலக வகைகள்:**

- பள்ளி நூலகம்
- கல்லூரி நூலகம்
- பல்கலைக்கழக நூலகம்
- பொது நூலகம்
- தனியார் நூலகம்
- குழந்தைகள் நூலகம்
- நடமாடும் நூலகம்

– என நூலகம் பயன்பாட்டிற்கு ஏற்ப பல வகைப்படும்.

**பயன்படுத்தும் முறை:**

**"அறிஞர்கள் வாழுமிடம் - நூலகம்"**

காப்புத் தொகையினைச் செலுத்தி, நூலக உறுப்பினராகி நூல்களை எடுத்துச் சென்று படிக்கலாம். நூலகத்தில் அமைதியாகப் படிக்க வேண்டும். சத்தமாகப் படிக்கக் கூடாது. குறிப்பு எடுத்துக் கொள்ளலாம். நூல்களைப் படிக்கும் போது நூலில் கிறுக்குதல் எழுதுதல் கிழித்தல் ஆகியவற்றைச் செய்யக் கூடாது.

**பயன்கள்:**

> **''இன்று என்னைத்**
> **தலைகுனிந்து படித்தால்**
> **நாளை உலகம்**
> **உன்னைத் தலைநிமிர்ந்து**
> **பார்க்கும்'' - புத்தகம்**

பள்ளி, கல்லூரி மேற்படிப்புக்கு உதவும். பொது அறிவு வளரும். போட்டித்தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்து அரசு வேலைக்கு உதவும். பயனுள்ள வகையில் பொழுது போக்குவதற்குப் பயன்படும். பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா ஆகியவற்றிற்குப் பயன்படும்.

**பள்ளி நூலகம்:**

தமிழக அரசு பள்ளிக்குத் தேவையான நூல்களை வழங்கி, பள்ளியிலேயே நூலகத்தை அமைத்துள்ளது. பள்ளி நூலகம் மூலம் வகுப்பறையிலேயே நூல்களைப் படிக்க, ''புத்தகப்பூங்கொத்து'' திட்டம் அமைந்துள்ளது.

**முடிவுரை:**

பூவினை மொய்க்கும் வண்டு போல நாம் அனைவரும் நூலகம் சென்று படிப்போம். நல்லறிவைப் பெறுவோம். நூலக உறுப்பினர் ஆவோம்.

## 5. பெண்கல்வி (அல்லது) பெண்கள் முன்னேற்றம்

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | பெண்கல்வி |
| பெண்ணின் சிறப்பு | பெண் முன்னேற்றம் |
| பெண்ணடிமை | முடிவுரை |

**முன்னுரை:**

''மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்றார் கவிமணி. அத்தகைய சிறப்பு மிக்க இனம் பெண்ணினம்.

**பெண்ணின் சிறப்பு:**

மொழி, நாடு, மண், ஆறு, இறைவன் ஆகிய அனைத்தும் பெண்கள். பாரதியும், பாரதிதாசனும், பெரியாரும் போற்றிய பெருமைக்குரியவள் பெண். தாய், மனைவி, தமக்கையென பன்முகங்களில் நமக்கு உதவுபவர்கள் பெண்களே!

**பெண்ணடிமை:**

முன்னோர்கள் ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பில் சமம் என்று நினைத்து சரியாக வாழ்ந்து வந்தார்கள். இடையில் வந்த மூடப் பழக்க வழக்கங்களால் பெண்ணைத் தாழ்த்தினார்கள். சமத்துவத்தை அடியோடு வீழ்த்தினார்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்ணுக்குரியது என்று கூறி பெண்ணை அடிமைப்படுத்தினர். சமைப்பதும், குழந்தை பெறுவதும் பெண்ணுக்குரியதாய் கூறி அடிமைப்படுத்தினர்.

**பெண்கல்வி:**

''ஆணுக்குப் பெண் இளைப்பில்லை'' என்றார் பாரதி. பெண்கட்கு கல்வி வேண்டும் என்றார் பாரதிதாசன். திரு.வி.க., காந்தியடிகள், பெரியார் ஆகியோர் பெண்கல்விக்குக் குரல் கொடுத்தனர்.

**பெண் முன்னேற்றம்:**

மருத்துவர் முத்துலெட்சுமி, நீலாம்பிகை அம்மையார், மூவலூர் இராமாமிர்தம், இந்திரா காந்தி, அன்னை தெரஸா, கிரண்பேடி, கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ், பாத்திமா பீவி ஆகிய பெண்கள் கல்வியால் சிறந்து பெருமை பெற்ற பெண்கள் ஆவர்.

**முடிவுரை:**

இன்று பெண்கல்வி வளர்ந்து வருகின்றது. பெண்களுக்கென்று தனிப்பள்ளிகள், தனிக் கல்லூரிகள் தோன்றிவிட்டன. பெண்கள் கல்லாத நிலை இல்லை என்பது உருவாக வேண்டும்.

## 6. பழந்தமிழரின் சமூக வாழ்க்கை

| குறிப்புச் சட்டம் | |
|---|---|
| முன்னுரை | கல்வி |
| வழிபாடும் விழாக்களும் | தமிழரின் திருமண முறை |
| பழக்கவழக்கங்கள் | தன்னேரில்லாப் பண்புகள் |
| தொழில்கள் | முடிவுரை |

**முன்னுரை:**

உலகின் தொன்மையான குடி தமிழ்க்குடி ஆகும். தமிழர் இன்று தொட்டு இன்று வரை தனிநாகரிகர்களாக இருந்து வந்துள்ளனர்.

**வழிபாடும் விழாக்களும்:**

திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றை மேற்கொண்டனர். தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா ஆகிய விழாக்களைக் கொண்டாடினர்.

**பழக்கவழக்கங்கள்:**

தீ மூட்ட கல்லை உரசினர். காலத்தை ஞாயிறு, நிலவு, விண்மீன், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை கொண்டு கணக்கிட்டனர். முதுமக்கள் தாழியில் இறந்தோரை இட்டுப் புதைத்தனர். விருந்தினரை வீட்டுக்கு வெளியே வந்து அனுப்பினர்.

**தொழில்கள்:**

தச்சுத் தொழில், தேர், வண்டி, கதவு, கட்டில் முதலிய பொருள்கள் செய்யும் தொழில், இரும்பு, பொன் கருவிகள் செய்யும் தொழில், உப்பு வணிகம், மீன் பிடித்தல் தொழில், உழவுத்தொழில் ஆகிய தொழில்களை மேற்கொண்டனர்.

**கல்வி:**

திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்கள் அக்காலக் கல்விச் சிறப்பினை விளக்குவன. மரத்தடி, ஊர் மன்றம், ஆசிரியர் வீடு, வீட்டுத் திண்ணை பழந்தமிழகத்தில் கல்வி கற்கும் இடங்களாக விளங்கின. எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது. எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. மருத்துவம், வானியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.

**தமிழரின் திருமண முறை:**

பெண்ணுக்கு மணமகன் பரிசளிப்பது வழக்கத்தில் இருந்தது. மணநிகழ்வின் போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி, தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளைத் தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

**தன்னேரில்லாப் பண்புகள்:**

- அறனெனப்பட்டதே இல்லறம்.
- உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்ற எளிய வாழ்க்கை.
- செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர் பண்பு.
- கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைவு படாது வாழும் கொள்கை.
- களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே என்ற வீரம்.
- அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தூய அன்பு.
- யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப்பொதுமை.

ஆகியன தமிழரின் தன்னேரில்லாத பண்புகள் ஆகும்.

**முடிவுரை:**

அறிவியல் வளர்ச்சி பெறாத காலத்திலேயே நாகரீக வாழ்க்கையில் உலகத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். அவர்கள் வாழ்வும் பண்பாடும் என்றும் நிலைத்து போற்றுதலுக்குரியது.

★★★★★

## இலக்கணக்குறிப்பு

**இன்றியமையாத இலக்கணக்குறிப்புகள், கண்டறிய எளிமையான சில வழிகள்:**

| | | |
|---|---|---|
| 1. | **வியங்கோள் வினைமுற்று** | க, இய, இயர் என்பதில் முடிவது.<br>எ.கா: வாழ்க, பொழிக, வாழிய, வாழியர். |
| 2. | **பண்புத்தொகை** | இரண்டு சொற்களுக்கு இடையே 'ஆகிய' பண்புருபு மறைந்து வருவது. வடிவம், பண்பு,சுவை, எண் பற்றி வரும். பிரித்தால் 'மை' விகுதி இடம் பெறும்.<br>எ.கா: பெரும்படை, இருநிதி, நறுஞ்சுவை. |
| 3. | **தொழில் பெயர்** | தல், அல், அம், கை, ஐ, சி, பு என்பதில் முடிவது தொழில்பெயர்.<br>எ.கா: பாடுதல், ஓட்டம், காண்ப. |
| 4. | **உரிச்சொல் தொடர்** | சால, தவ, தட, நனி, மல்லல், மா, கூர், மழ, குழ, கடி, கழி, உறு, வை முதலிய உரிச்சொற்களில் தொடங்கினால் உரிச்சொல் தொடர்.<br>எ.கா: மாஞாலம், தவச்சிறிது, தடக்கரி, மல்லலம் குருத்து, கடிநகர், வைவேல். |
| 5. | **பெயரெச்சம்** | சொல் 'அ' வில் முடிந்தால் பெயரெச்சம்.<br>எ.கா: உண்ட சாத்தன், வந்த பசு. |
| 6. | **வினையெச்சம்** | சொல் 'உ' அல்லது 'இ' என்பதில் முடிந்தால் வினையெச்சம்.<br>எ.கா: வந்து சென்றான், ஆடி. |
| 7. | **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** | ....'ஆ' வில் முடியும். முடிவு பெறாமல் இருக்கும் அது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.<br>எ.கா: வேண்டா குப்பை, ஓடா குதிரை, தீதிலா வடமீன். |
| 8. | **வினையாலணையும் பெயர்** | வினையைச் செய்தவனுக்கு அடைமொழியாக வரும் வன், வர், ஆர், ஆன், அன், ஆர், ஓர் ஆகியவற்றில் முடிவது வினையாலணையும் பெயர்.<br>எ.கா: ஓடியவன், வந்தார், கொண்டோர். |

| | | |
|---|---|---|
| 9. | **இரட்டைக்கிளவி** | இரட்டைச் சொல் பிரித்தால் பொருள் தராது. அது இரட்டைக்கிளவி.<br>எ.கா: படபட, தகதக, சடசட, பளபள. |
| 10. | **அடுக்குத்தொடர்** | இரண்டு அல்லது மூன்று முறை அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும். அது அடுக்குத் தொடர்.<br>எ.கா: போபோ, தீதீதீ, வருக வருக. |
| 11. | **வினைத்தொகை** | மூன்று காலத்தையும் மறைமுகமாகக் காட்டுவது வினைத்தொகை.<br>எ.கா: கொல்யானை, (கொல்கின்ற யானை, கொல்லும் யானை, கொன்ற யானை), குவி மொட்டு. |
| 12. | **ஒருபொருட்பன்மொழி** | ஒரே பொருளைக் குறிக்க வேறு சொற்கள் வரும். அது ஒருபொருட்பன்மொழி.<br>எ.கா: ஒரு தனி (ஒரு-ஒன்று, தனி-ஒன்று), ஓங்கியுயர்ந்த, பிறைக்கூன். |
| 13. | **உவமைத்தொகை** | 'போல', 'போன்ற' ஆகிய உவமஉருபு மறைந்து வரும். அது உவமைத்தொகை.<br>எ.கா: மலர்முகம் (மலர் போன்ற முகம்), கயல்விழி, பவள வாய். |
| 14. | **உருவகம்** | 'ஆகிய' என்ற சொல்லுருபு மறைந்து வரும். உவமையின் தன்மையைப் பொருளின் மீது ஏற்றிக் கூறுவது உருவகம்.<br>எ.கா: வாழ்க்கைப்போர் (வாழ்க்கையாகிய போர்), பிறவி இருள், ஒளியமுது. |
| 15. | **உம்மைத்தொகை** | தொடர்புடைய இருசொற்களில் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகை.<br>எ.கா: வில் வாள் (வில்லும் வாளும் தொடர்புடைய போர்க்கருவிகள். 'உம்' மறைந்து வந்துள்ளது.)<br>காசுபணம் |
| 16. | **எண்ணும்மை** | தொடர்புடைய இருசொற்களில் 'உம்' என்ற இடைச்சொல் வெளிப்படையாக வருவது உம்மைத்தொகை.<br>எ.கா: வாயிலும் சன்னலும் |

★★★★★

## பகுபத உறுப்பிலக்கணம்

**பகுபத உறுப்பிலக்கணம் கண்டறியும் முறை:**

| | | |
|---|---|---|
| 1. | **பகுதி** | சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு. கட்டளையாகவே வரும். |
| | **சான்று** | 'வாழ்க' என்பதில் 'வாழ்' பகுதி. நட, போ, வா, காண் என்பன போல வரும் |
| 2. | **சந்தி** | பகுதிக்கும் இடைநிலையையும் இணைப்பது சந்தி. க், ச், ப், த் ஆகியன சந்தியாக வரும் |
| | **சான்று** | 'பார்க்கின்ற' என்பதில் 'க்' என்பது சந்தி. 'பார்' என்ற பகுதிக்கும் 'கின்று' என்ற இடைநிலைக்கும் இடையில் நிற்பது |
| 3. | **விகாரம்** | பகுதி திரிந்தோ அல்லது சந்தி திரிந்தோ வருவது விகாரம். |
| | **சான்று** | 'கண்ட' என்பதில் 'காண்' பகுதி 'கண்' என்பது விகாரம்.<br>'கடிந்த' என்பதில் 'த்' என்ற சந்தி திரிந்து 'ந்' விகாரமானது. |

| | | |
|---|---|---|
| 4. | **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டுவது இடைநிலை. நிகழ்காலம் - கிறு, கின்று, ஆநின்று; எதிர்காலம் - ப், வ்; இறந்தகாலம் - த், ட் , ற், இன் |
| | **சான்று** | 'பார்க்கின்ற' என்பதில், 'பார்' என்ற பகுதிக்கும் 'அ' என்ற விகுதிக்கும் 'கின்று' என்ற நிகழ்கால இடைநிலை வந்துள்ளது. |
| 5. | **சாரியை** | பகுதி மற்றும் சந்திக்கு இடையிலோ அல்லது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலோ இனிய ஓசைக்காக இடம்பெறுவது சாரியை. கு, உ, அன், அ ஆகியவையே பெரும்பாலும் சாரியையாக வரும். |
| | **சான்று** | 'தாகுவேன்' என்பதில் 'தா' என்ற பகுதிக்கும் 'வ்' என்ற எதிர்கால இடைநிலைக்கும் இடையில் 'கு' என்பது சாரியை. 'பார்த்தனன்' என்பதில் 'த்' என்ற இறந்தகால இடைநிலைக்கும் 'அன்' விகுதிக்கும் இடையில் உள்ள 'அன்' சாரியை. |
| 6. | **விகுதி** | சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பு விகுதி. திணை, எண், பால், இடம் ஆகியவற்றை உணர்த்தும். |
| | **சான்று** | 'வாழ்க' என்பதில் இறுதியில் நிற்கும் 'க' என்பது விகுதியாகும். 'கண்ட' என்பதில் 'அ' என்ற இறுதி எழுத்து விகுதி. |

## புதிய தமிழ்ச்சொற்கள்

| ஆங்கிலச் சொற்கள் | புதிய தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| Sim | தொகுப்பி, செறிவட்டை |
| Whatsapp | புலனம் |
| Youtube | வலையொளி |
| Wechat | அளாவி |
| Messenger | பற்றியம் |
| Twitter | கீச்சகம் |
| Skype | காயலை |
| Smart Phone | திறன்பேசி |
| Bluetooth | ஊடலை |
| Wifi | அருகலை |

| ஆங்கிலச் சொற்கள் | புதிய தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| Hotspot | பகிரலை |
| Broad Band | ஆலலை |
| Online | இயங்கலை |
| Offline | முடக்கலை |
| Thumbdrive | விரலி |
| Gps | தடங்காட்டி |
| Cctv | மறைகாணி |
| 3D | முத்திரட்சி |
| Charger | மின்னூக்கி |
| Selfie | சுயஉரு, சுயப்பு, தம் படம் |

★★★★★

# படிவங்கள்

1. க. நந்தினி என்பவர் ''326, திரு.வி.க. நகர், விருதுநகர் - 626 005'' என்ற முகவரியில் வசிக்கிறார். அவருடைய மாவட்டத்தில் உள்ள மைய நூலகத்தில் உறுப்பினராக விரும்புகிறார். தேர்வர் தன்னை ''நந்தினி''யாக நினைத்து படிவம் நிரப்புக.

**நூலக உறுப்பினர் படிவம்**

**விருதுநகர்** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய(✓)/கிளை/ஊர்ப்புற நூலகம் **விருதுநகர்**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

**அட்டை எண்: 432** **உறுப்பினர் எண்: 234**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **க. நந்தினி** |
| 2. தந்தை பெயர் | : | **ம. கணேசன்** |
| 3. பிறந்த தேதி | : | **15.3.2002** |
| 4. வயது | : | **18** |
| 5. படிப்பு | : | **பத்தாம் வகுப்பு** |
| 6. தொலைபேசி எண் | : | **9994142883** |
| 7. அஞ்சல் முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **326, திரு.வி.க. நகர்,<br>விருதுநகர் - 626 005.** |

நான் **க. நந்தினி** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. **30** சந்தா தொகை ரூ. **5** ஆக மொத்தம் ரூ. **35** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : விருதுநகர்
நாள் : 29.3.2020

தங்கள் உண்மையுள்ள,
*க. நந்தினி.*

திரு / திருமதி / செல்வி(✓) / செல்வன் **நந்தினி** அவர்களை எனக்கு நனக்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

நளினி

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை

(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்

2. **ஜே. அந்தோணி என்பவர் மேல்நிலை வகுப்பில் சேர விண்ணப்பிக்கிறார். தேர்வர் தன்னை அந்தோணியாக நினைத்து, பின்வரும் குறிப்புகளைக் கொண்டு படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 748, தமிழ்நகர், ஈரோடு - 638 002.

ii) படித்த பள்ளி : அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

iii) 10ஆம் வகுப்பு மதிப்பெண் : $\frac{432}{500}$

iv) பதிவு எண் : 73265

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண்: 1106** **தேதி: 01.06.2020** வகுப்பும் பிரிவும்: **XI ஆ**

1. மாணவ/மாணவியின் பெயர் : **ஜே, அந்தோணி**
2. பிறந்த தேதி : **29.3.2004**
3. தேசிய இனம் : **இந்தியன்**
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : **ம. ஜேம்ஸ் - ஜே. ஷீலா**
5. வீட்டு முகவரி : **748, தமிழ்நகர்,<br>ஈரோடு - 638 002.**
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
7. பயின்ற மொழி : **தமிழ் வழி**
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : **அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.**
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| **பள்ளிக்கல்வி இடைநிலைக் கல்விச் சான்றிதழ் (எஸ்.எஸ்.எல்.சி)** | **73265 / 2020** | **தமிழ்** | **81** |
| | | **ஆங்கிலம்** | **78** |
| | | **கணக்கு** | **91** |
| | | **அறிவியல்** | **90** |
| | | **சமூக அறிவியல்** | **92** |
| | | **மொத்தம்** | **432** |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : **ஆம்**
11. தாய்மொழி : **தமிழ்**
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **உயிரியல் - தமிழ் வழி**

மாணவ / மாணவியின் கையெழுத்து

*ஜே. அந்தோணி.*

**3. மை. முகமது அஜ்மல் என்பவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு தேர்வர் மை. முகமது அஜ்மலாக நினைத்துப் படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 201, கவிமணி நகர், கரூர்-3.

ii) பள்ளி முகவரி : அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கரூர்.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

1. மாணவரின் பெயர் : **மை. முகமது அஜ்மல்**
2. பாலினம் : **ஆண்**
3. பிறந்த தேதி : **17.01.2005**
4. தேசிய இனம் : **இந்தியன்**
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : **ஹ. மைதீன் - மை. ரசியா**
6. இரத்த வகை : **'ஏ' நேர்மறை (ஏ+)**
7. உயரம் மற்றும் எடை : **157.5 செ.மீ (5.17 அடி), 55 கி.**
8. வீட்டு முகவரி : **201, கவிமணி நகர், கரூர் - 3.**
9. தொலைபேசி/அலைபேசி எண் : **8883681115**
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
11. பள்ளியின் முகவரி : **அரசினர் ஆண்கள் மேனிலைப்பள்ளி, கரூர் - 1.**
12. சேர விரும்பும் விளையாட்டு : **கால்பந்து**

சேர்க்கை எண்: **216**

மாணவரின் கையெழுத்து

*மை. முகமது அஜ்மல்*

தேதி : **20.5.2020**

இடம் : **கரூர்**

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து

**ஹ.மைதீன்**

4. **பெ. கனிமொழி என்பவர், "06, சர்க்கரை ஆலை குடியிருப்பு, பாலபாக்ய நகர், திருநெல்வேலி - 627 001" என்ற முகவரியில் வசிக்கின்றார். தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டுவதற்காகப் படிவம் நிரப்புகிறார். தேர்வர் தன்னை, பெ. கனிமொழியாக நினைத்துப் படிவம் நிரப்புக.**

**பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **பெ. கனிமொழி** |
| 2. பாலினம் | : | **பெண்** |
| 3. பிறந்த நாள் மற்றும் வயது | : | **30.11.2000, 20** |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **கி. பெரியசாமி - பெ. சந்திரமதி** |
| 6. வீட்டு முகவரி | : | **06, சர்க்கரை ஆலை குடியிருப்பு,<br>பாலபாக்ய நகர்,<br>திருநெல்வேலி - 627 001.** |
| 7. தொலைபேசி/அலைபேசி எண் | : | **8883681115** |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | **398/500** |
| 9. தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. பயின்ற மொழிகள் | : | **ஆங்கிலம், இந்தி** |
| 11. தட்டச்சு | : | **தமிழ், ஆங்கிலம் உயர்நிலைத் தேர்ச்சி** |
| 12. கணினி | : | **கணினிப் பயன்பாட்டியல் பட்டயம் (டி.சி.ஏ)** |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் **தட்டச்சர்** பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
*பெ. கனிமொழி.*

# படிவங்கள் - பயிற்சிக்காக

1. **க. நந்தினி என்பவர் ''326, திரு.வி.க. நகர், விருதுநகர் - 626 005'' என்ற முகவரியில் வசிக்கிறார். அவருடைய மாவட்டத்தில் உள்ள மைய நூலகத்தில் உறுப்பினராக விரும்புகிறார். தேர்வர் தன்னை ''நந்தினி''யாக நினைத்து படிவம் நிரப்புக.**

## நூலக உறுப்பினர் படிவம்

**____________________ மாவட்ட நூலக ஆணைக்குழு**

**மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் ____________________**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

**அட்டை எண்:** **உறுப்பினர் எண்:**

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ________ சந்தா தொகை ரூ. ________ ஆக மொத்தம் ரூ. ________ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : விருதுநகர் தங்கள் உண்மையுள்ள,

நாள் : 29.3.2020

திரு / திருமதி / செல்வி / செல்வன் ______________ அவர்களை எனக்கு நனக்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்

2. **ஜே. அந்தோணி என்பவர் மேல்நிலை வகுப்பில் சேர விண்ணப்பிக்கிறார். தேர்வர் தன்னை அந்தோணியாக நினைத்து, பின்வரும் குறிப்புகளைக் கொண்டு படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 748, தமிழ்நகர், ஈரோடு - 638 002.

ii) படித்த பள்ளி : அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

iii) 10ஆம் வகுப்பு மதிப்பெண் : $\frac{432}{500}$

iv) பதிவு எண் : 73265

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண்:** **தேதி:** **வகுப்பும் பிரிவும்:**

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| | | **தமிழ்** | |
| | | **ஆங்கிலம்** | |
| | | **கணக்கு** | |
| | | **அறிவியல்** | |
| | | **சமூக அறிவியல்** | |
| | | **மொத்தம்** | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

**3. மை. முகமது அஜ்மல் என்பவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு தேர்வர் மை. முகமது அஜ்மலாக நினைத்துப் படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 201, கவிமணி நகர், கரூர்-3.

ii) பள்ளி முகவரி : அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கரூர்.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி/அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து

தேதி :

இடம் :

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து

4. பெ. கனிமொழி என்பவர், “06, சர்க்கரை ஆலை குடியிருப்பு, பாலபாக்ய நகர், திருநெல்வேலி - 627 001” என்ற முகவரியில் வசிக்கின்றார். தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டுவதற்காகப் படிவம் நிரப்புகிறார். தேர்வர் தன்னை, பெ. கனிமொழியாக நினைத்துப் படிவம் நிரப்புக.

**பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்**

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி/அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் __________________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

1. **க. நந்தினி என்பவர் ''326, திரு.வி.க. நகர், விருதுநகர் - 626 005'' என்ற முகவரியில் வசிக்கிறார். அவருடைய மாவட்டத்தில் உள்ள மைய நூலகத்தில் உறுப்பினராக விரும்புகிறார். தேர்வர் தன்னை ''நந்தினி''யாக நினைத்து படிவம் நிரப்புக.**

**நூலக உறுப்பினர் படிவம்**

**____________________ மாவட்ட நூலக ஆணைக்குழு**

**மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் ____________________**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

**அட்டை எண்:** **உறுப்பினர் எண்:**

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. அஞ்சல் முகவரி :
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. _______ சந்தா தொகை ரூ. _______ ஆக மொத்தம் ரூ. _______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : விருதுநகர் தங்கள் உண்மையுள்ள,

நாள் : 29.3.2020

திரு / திருமதி / செல்வி / செல்வன் ____________ அவர்களை எனக்கு நனக்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்

**2. ஜே. அந்தோணி என்பவர் மேல்நிலை வகுப்பில் சேர விண்ணப்பிக்கிறார். தேர்வர் தன்னை அந்தோணியாக நினைத்து, பின்வரும் குறிப்புகளைக் கொண்டு படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 748, தமிழ்நகர், ஈரோடு - 638 002.

ii) படித்த பள்ளி : அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

iii) 10ஆம் வகுப்பு மதிப்பெண் : $\frac{432}{500}$

iv) பதிவு எண் : 73265

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண்:** **தேதி:** **வகுப்பும் பிரிவும்:**

1. மாணவ/மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் (100) |
|---|---|---|---|
| | | **தமிழ்** | |
| | | **ஆங்கிலம்** | |
| | | **கணக்கு** | |
| | | **அறிவியல்** | |
| | | **சமூக அறிவியல்** | |
| | | **மொத்தம்** | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

3. **மை. முகமது அஜ்மல் என்பவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு தேர்வர் மை. முகமது அஜ்மலாக நினைத்துப் படிவம் நிரப்புக.**

**குறிப்புகள்:**

i) வீட்டு முகவரி : 201, கவிமணி நகர், கரூர்-3.

ii) பள்ளி முகவரி : அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கரூர்.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்
சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி/அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண்:

மாணவரின் கையெழுத்து

தேதி :

இடம் :

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து

4. பெ. கனிமொழி என்பவர், “06, சர்க்கரை ஆலை குடியிருப்பு, பாலபாக்ய நகர், திருநெல்வேலி - 627 001” என்ற முகவரியில் வசிக்கின்றார். தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டுவதற்காகப் படிவம் நிரப்புகிறார். தேர்வர் தன்னை, பெ. கனிமொழியாக நினைத்துப் படிவம் நிரப்புக.

**பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்**

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி/அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ____________________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

# விடைகள்

## இயல் 1

**பலவுள் தெரிக.**

1. அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
2. ஈ) சருகும் சண்டும்
3. இ) எம் + தமிழ் + நா
4. ஈ) பாடல்; கேட்டவர்
5. ஆ) மணி வகை

**பயிற்சிகள்**

**1.**
1. தேன் மருந்துப் பொருளாக பயன்படுகிறது.
2. நூல் பல கல்.
3. பை நிறைய பணம் இருந்தது.
4. மலர் பறித்து வந்தேன்.
5. விரைந்து வா.

**கூடுதல்**
1. இளமையில் கல்
2. திருக்குறள் படி
3. மரக்கன்று நட்டு வை
4. பூக்கள் மலர்துள்ளது
5. புத்தகம் தா

**2.**
1. காட்சி, காணுதல், காணல், காணாமை
2. சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை
3. படிப்பு, படித்தல், படிக்காமை
4. தடுப்பு, தடுத்தல், தடுக்காமை

**கூடுதல்**
1. தருதல், தராமை
2. வருதல்,வாராமை
3. போதல்,போகாமை
4. செய்தல்,செய்யாமை

**3.**
1. அழைத்தல்
2. ஏறுதல்
3. பார்த்தல்
4. எய்தல்

**கூடுதல்**
1. பெய்தல்
2. கொட்டுதல்
3. ஓடுதல்
4. நனைதல்

**4.**
1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலைத் தொழிற்பெயர்
3. விகுதி பெற்ற தொழிற்பெயர்
4. முதனிலை திரிந்த தொழிற்பெயர்
5. விகுதி பெற்ற தொழிற்பெயர்

**கூடுதல்**
1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
3. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
4. விகுதி பெற்ற தொழிற்பெயர்
5. முதனிலைத் தொழிற்பெயர்

**5.**
1. நீங்கள் ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொண்டு அவன் மூளைக்குச் செல்கிறது. ஆனால் அவனுடைய மொழியில் பேசினால் அது அவன் நெஞ்சத்தைத் தொடும். – நெல்சன் மண்டேலா
2. மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள் மற்றும் எங்குப் போகிறார்கள் என்பதைச் சொல்லும். – ரிட்டா மே பிரவுண்

**6.** "தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தேறும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே"

**7.**
1. கற்குவியல்
2. பழக்குலை
3. புற்கட்டு
4. ஆட்டுமந்தை

**கூடுதல்**
1. யானைக்கூட்டம்
2. நீர்த்திவலை
3. சோளக்கதிர்கள்
4. மகளிர்க்குழு

**8.**
1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

2. ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**கூடுதல்**

1. தன்னம்பிக்கையோடு படித்தவன் தேர்வில் வெற்றிபெற்றான்.
2. கடின முயற்சி செய்தவன் வாழ்வில் உயர்ந்தான்.
3. நன்கு கற்றவர் நானிலம் போற்ற வாழ்வார்.
4. நேற்று வந்தவர் இன்று போனார்.
5. அதிகாலையில் எழுந்தவர் சோம்பலின்றிச் செயல்களைச் செய்தார்.

**9.**
1. புவியில் வாழும் மானுடர்கள் சிலர் பழமிருக்கக் காய் உண்பதைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி துன்பப் படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் துன்பத்தால் வாடிவந்த அறிஞர்களுக்குத் தனது தலையை ஈந்து மங்காப் பெருமை பெற்றான்.
3. நளனும் அவனது மனைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமேகம் கண்ட மயிலைப் போல மகிழ்ச்சி கொண்டனர்.
4. நந்தவனத்தில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடி தேனை உண்டன.
5. ஆப்போல் அமைதியும் வேங்கை போல் வீரமும் களிறு போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**கூடுதல்**

1. மன்னனின் தோற்றம் அழகு மிக்கது.
2. நெருப்பு பிடித்ததால் மக்கள் அச்சம் கொண்டனர்.
3. தமிழ் ஆசிரியர் பாடிய திருவருட்பா பாடலைக் கேட்டு மாணவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.
4. ஆசிரியர் சொல் அமிழ்தம் போன்றது.
5. அறிவோடு பிழைத்துக் கொள் என்றார் தாய்.

**10.** பொன்விலங்கு, மணிமேகலை, வான்மழை, பூமணி, பொன்மணி, பொன் விளக்கு, செய்தேன், பூமழை, செய்வான், தேன்பூ, விளக்குவான், விண்மணி, தேன்மழை, பூவிலங்கு.

**கூடுதல்**

வெண்பனி, சீர்வரிசை, பழனிமலை, மலைக்கோயில், பனிமலர்.

**11.**
1. குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
2. மன்னன் சுவைக்காத இளநீர் உண்டோ?
3. கம்பர் காலத்தில் காப்பியச் சுவை உச்சநிலையில் இருந்ததோ?
4. இந்நூற்றாண்டில் மனிதகுல மேன்மை சிறப்புற்று விளங்குகிறதோ?
5. தேரோட்டம் அன்று விடுமுறை நாள் என அறிவிக்கப்படுமா?

**கூடுதல்**

1. தமிழ்ச்சுவை அறியாதவர் உண்டோ?
2. உழைப்பே உயர்வு தருமா?
3. வாய்மை வெல்லுமா?
4. கற்காதவன் தாழ்வான் அன்றோ?

**12.**

| எண்ணுப் பெயர் | தமிழ் எண் |
|---|---|
| நான்கு | ச |
| எட்டு | அ |
| ஐந்து | ரு |
| நான்கு, இரண்டு | சஉ |
| ஆயிரம் | க000 |

**கூடுதல்**

| | |
|---|---|
| ஆறு | சா |
| ஐந்து | ரு |
| நான்கு | ச |
| இரண்டு | உ |
| நூறு | க00 |

**13.**
1. காடு, திரள், தொகுதி, சோலை
2. பள்ளம், விளைநிலம், குளம், நெல், இடியல்.
3. பிடரி, முதுகு, மேடு, தொல்லை
4. வயல், குளம், பாத்தி, கோபம்
5. வயல், மருதநிலம், பொய்கை
6. புறா, சிறுகாடு, முல்லைக்கொடி, பயிரிடும் நிலம்

**14.** குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல
நாள்தோறும் எதை எதையோ எண்ணி
உனது பெருமைகளை இழக்கிறாய்.
காரணம் உன் அறிவுப்பூட்டு
இன்னும் திறக்கப்படாததே!
உன் அறிவுப்பூட்டைத் திற
வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான
செயல்களில் ஈடுபடு
உன் உடலும் உள்ளமும் செழிக்கும்
வாழ்வின் உயர்விடத்தில் இருப்பாய் நீ!

**15.** நாங்கள் இன்சொல் வழியையே பின்பற்றுவோம். எங்கள் நண்பருக்கும் அவ்வழியையே காட்டி அவர்களையும் அவ்வழியின் படி நடக்கச் செய்வோம்.

**16.** 1. உயிரெழுத்து
2. மெய்யெழுத்து
3. ஒப்பெழுத்து
4. ஒரு மொழி
5. உரையாடல்
6. கலந்துரையாடல்

## இயல் : 2

### பலவுள் தெரிக.

1. ஆ) மோனை, எதுகை
2. இ) செய்தி 3 மட்டும் சரி
3. அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
4. அ) பண்புத்தொகை
5. ஆ) 3, 1, 4, 2

### பயிற்சிகள்

**1.** 1. இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வினைத்தொகை.
2. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை, இரண்டாம் வேற்றுமைத் தொகை.
3. இருபெயரொட்டுப் பண்புத்தொகை, மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
4. உவமைத்தொகை, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

**கூடுதல்**

1. தேர்ப்பாகன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை, வீசு தென்றல் - வினைத்தொகை
2. அண்ணன் தம்பி - உம்மைத்தொகை, சிவப்புச் சட்டை போட்டவருடன் - அன்மொழித்தொகை
3. மார்கழித் திங்கள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை, நன்னாள் - பண்புத்தொகை
4. முறுக்கு மீசை உடையவர் - அன்மொழித்தொகை, சிவப்புச் சட்டை அணிந்தவருடன் - அன்மொழித்தொகை

**2.** இயற்கை

பொன்னான கதிரவன் நாள்தோறும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி, இருளை மறையச் செய்யும், பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையைத் தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு புத்துணர்வான சூழ்நிலையை உருவாக்கும்.

**3.** 1. பண்புத்தொகை.
இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.
2. வினைத்தொகை.
மனித வாழ்க்கை எழுகதிர் போன்றது.
3. உம்மைத்தொகை
கலாவும் மாலாவும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் பகைமையோடு வாழ்கின்றனர்.
4. அன்மொழித்தொகை.
பூ போன்ற கூந்தலையுடைய (குழல்) பெண் வந்தாள்.
5. ஏழாம் வேற்றுமைத் தொகை.
குறிஞ்சி நில மக்கள் மலையின் கண் வாழ்வார்.
6. உவமைத்தொகை
மாலாவின் முத்துப்பல் மேலும் அவளுக்கு அழகு சேர்க்கிறது.

**கூடுதல்**

1. உம்மைத்தொகை
2. உவமைமைத் தொகை
3. இருபெயரொட்டுப் பண்புத் தொகை
4. பண்புத்தொகை
5. உம்மைத்தொகை

**4.** 1. மலருக்குப் பெயர் உண்டு.

2. அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்.

3. முருங்கைப்பூ:
இப்பூவைக் கசாயம் செய்து வாரம் இருமுறை குடிக்கவும். குடித்துவர நீரழிவு நோய், நரம்புத்தளர்ச்சி நோய் நீங்கும். நினைவு ஆற்றல் பெருகும்.

எருக்கம் பூ:
எருக்கம் பூவைக் காய வைத்து பொடி செய்து புண்களில் பூச விரைவில் குணமாகும். கால் வீக்கம் குறைய இப்பூவை எண்ணெயில் வதக்கிக் கட்ட வீக்கம் நீங்கும்.

4. குறிப்புப் பெயரெச்சம்.

5. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை, கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

**5.** 1. நறுமணம்
2. புதுமை
3. காற்று
4. விண்மீன்
5. காடு

**கூடுதல்**

1. கவிமணி
2. கோதை
3. தீபாவளி
4. கார்த்திகை

**6.** 1. காற்றின் பாடல்
2. மொட்டின் வருகை
3. மிதக்கும் வாசம்
4. உயிர்ப்பின் ஏக்கம்
5. நீரின் சிலிர்ப்பு
6. வனத்தின் நடனம்

**7.** 1. (அகல் என்பதன் திரிபு) அகல்சுடர், அகன்ற சுடர்.
2. கடல், மழை, வெள்ளம், பேரொலி, ஆரவாரம்.
3. ஓர் புலவன்
4. ஒரு மிருகம், பழிச்சொல், புலி, குறளை, வளைந்த வாய்.
5. இந்திரவில்.

**8.** ஏ! மானிடா......... ஏ! மானிடா
என்னை (மரத்தை) அழித்தாய்
எனக்கும் ஒரு காலம் வரும்
பள்ளிக்குழந்தைகள்
புத்தகப்பை சுமப்பது போல
உயிர்வளிக்காக
என்னையும் நீ சுமப்பாய்.......
உயிர்வாழ்வதற்கு.

**9.** 1. புயலின் போது வெளியே செல்ல மாட்டோம்.
2. தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.
3. மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே குடும்பத்தினரோடு தங்குவேன்.
4. காற்றடிப்பது நின்றாலும் வானொலி அறிவிப்பைக் கேட்டு அதற்கேற்ப செயல்படுவோம்.

**10.** 1. புயல்
2 சூறாவளி
3. பெருங்காற்று
4. நிலக்காற்று
5. கடற்காற்று
6. சுழல்காற்று

## இயல் - 3

**பலவுள் தெரிக.**

1. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
2. ஈ) சிற்றூர்
3. அ) வேற்றுமை உருபு
4. இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
5. ஆ) இன்மையிலும் விருந்து
6. அ) கூவிளம் தேமா மலர்

**பயிற்சிகள்**

1. இறங்கினார் முகமது - வினைமுற்றுத் தொடர்
அவர் பாடகர் - எழுவாய்த் தொடர்
பாடுவது கேட்பது - கூட்டு வினையெச்சத் தொடர்
கேட்ட பாடல்கள் - பெயரெச்சத் தொடர்
கேட்காத பாடல்கள் - எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்
அடுக்கு அடுக்காக - அடுக்குத் தொடர்

**கூடுதல்**

அண்ணாவுக்குத் - வேற்றுமைத்தொடர்
பொன்னாடை - வேற்றுமைத்தொடர்
அடுக்கடுக்காக - அடுக்குத் தொடர்
நனிச்சிறப்பாக - உரிச்சொல் தொடர்

**2.**
1. அடுக்குத்தொடர்
2 பெயரெச்சத் தொடர்
3 வினையெச்சத் தொடர்
4 வினைமுற்றுத் தொடர்
5 ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

**கூடுதல்**

1. இரட்டைக் கிளவி
2. பெயரெச்சத் தொடர்
3. வினையெச்சத் தொடர்
4. உரிச்சொல் தொடர்

**3.** மரியாதைக்குரியவர்களே!

என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் பண்பாட்டைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாயிரம் வருடத்திற்கு முன் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர்களின் பண்பாடு இந்தியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தில் வேரூன்றி உள்ளது. நம் பண்பாடு பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் மேம்படுத்தி உள்ளது. நாம் நம் பண்பாட்டைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நன்றி!

**4.**
1. பண்டம் குப்பையிலே.
2. சோற்றுக்கு, ஒரு சோறு பதம்.
3. உள்ளளவும் நினை.
4. மருந்தும் மூன்று நாட்கள்.
5. மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

**கூடுதல்**

1. குறைவற்ற செல்வம்
2. பெருவெள்ளம்
3. தூற்றிக்கொள்
4. பறப்பதற்கு ஆசைப்படாதே
5. ஒரு சோறு பதம்

**5.** திருக்குறள்

**கூடுதல் -** கனிச்சாறு

**6.**
1. சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தனர்.
2. காதைத் தொடும்போது தோடு அழகாக ஆடியது.
3. மடுவில் (குட்டையில்) மாடு நீர்க் குடித்தது.
4. மலை மீது ஏறி மாலையில் விளையாடினேன்.
5. வளியும் (காற்றும்) வாளியும் (அன்பும்) இல்லாமல் வாழ முடியாது.
6. அகந்தையை விடு, வீடுபேறு (சொர்க்கம்) கிடைக்கும்.

**கூடுதல்**

1. வடு மாங்காய் வாடியிருந்தது.
2. வயலில் பாடு படு.
3. பலம் இல்லாததால் பாலம் விழுந்தது.
4. தளவாடம் இல்லாமல் வியாபாரம் தாளம் போடுகிறது.
5. கூடத்தில் குடம் இல்லை.

**7.**
1. ஊண் - இரை, உண்டி, சோறு, உணவு, ஆன்மாவின் சுகதுக்கனுபவம்.
2. ஊன் - உடல், தசை, நிணம், மாமிசம், சரீரம்.
3. திணை - இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்.
4. தினை - ஒரு சாமை (தானியம்), சிறுமை.

5. அண்ணம் - மேல்வாய், மேல் நாக்கு.
6. அன்னம் - கவரிமான், சோறு தானியம், பிரம்ம வாகனம்.
7. வெல்லம் - கருப்பஞ்சாற்றுக்கட்டி.
8. வெள்ளம் - நீர்ப்பெருக்கு, கடல், கடலலை, நீர், ஈரம், மிகுதி, உண்மை.

**8.** "வறுமையில் வாடிய
எனக்கு
ஒருநாள் கிடைத்தது
நல்லுணவு......
உண்ணும் வேளையில்
நீ வந்தாய்......
பசியால் இணைந்தோம்
பகிர்ந்து உண்ணலாம்
வா! தோழா வா!"

**9.** பதறுகிறது என் நெஞ்சமடி
வருங்கால சமுதாயம் என்னவாகுமடி
எப்போது தீரும் தன்படம் மோகமடி
மூழ்கியவன் மூச்சு நின்னுப்போச்சு
மனிதநேயம் செத்துப்போச்சு

**10.**
1. செவ்விலக்கியம்
2. காப்பிய இலக்கியம்
3. பக்தி இலக்கியம்
4. பண்டைய இலக்கியம்
5. வட்டார இலக்கியம்
6. நாட்டுப்புற இலக்கியம்
7. நவீன இலக்கியம்

**11.** நாகரிகம் கருதியோ, நாச்சுவை கருதியோ நம் பாரம்பரிய உணவுகளைத் தவிர்த்தல் கூடாது. வெப்பமயமான நம் நாட்டிற்கு புழுங்கல் அரிசியே ஏற்றது. ஆகவே, நம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ற பாரம்பரிய உணவுகளைத் தினமும் கட்டாய உணவாக உட்கொள்ளும் போது அது நம் உடலுக்கு மிகுந்த சக்தியைக் கொடுக்கும். பாரம்பரிய உணவுகளைத் தவிர்க்கும் போது 'உணவே மருந்து' என்ற நிலை மாறி 'மருந்தே உணவு' என்ற நிலைக்குத் தள்ளப்படுவோம் என்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

## இயல் - 4

### பலவுள் தெரிக.

1. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
2. அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.
3. ஈ) வானத்தையும் பேரொலியையும்
4. இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
5. ஈ) இலா

### பயிற்சிகள்

**1.**
1. கால வழுவமைதி.
2. இட வழுவமைதி.
3. கால வழுவமைதி.
4. பால் வழுவமைதி.

**கூடுதல்**

1. கால வழுவமைதி.
2. பால் வழுவமைதி.
3. திணை வழுவமைதி.
4. மரபு வழுவமைதி

**2.**
1. தாய், "மகளே! நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்து வா" என்று சொன்னாள்.
2. அக்கா நேற்று வீட்டிற்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்(னாள்).
3. "இதோ முடித்துவிட்டேன்" என்று செயலை முடிக்கும் முன்னர் கூறினார்.
4. நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.
5. குழந்தை அழுகிறது பார்.

**கூடுதல்**

1. தந்தை, "மகனே! நாளை உன்னுடைய தோழன் கலைச்செல்வனை அழைத்து வா!" என்று சொன்னார்.
2. நண்பன் நேற்று பள்ளிக்கு வந்தான். நண்பன் வீட்டுக்குப்போது நான் கையசைத்தேன்.
3. முழுவதும் படித்துவிட்டமையால் "தேர்ச்சி பெற்றுவிடுவேன்" என்று தேர்வை எழுதும் முன்பே மாணவர் கூறினார்.
4. அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.
5. அங்கே ஆந்தை அலறுகிறது.

**3.** தேவி, நீ அறையை விட்டு வெளியே செல்லும் முன் விளக்கை அணைத்துவிடு.

ஆம், நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.

நம் நாடு தெரு விளக்குகளை எரிய வைப்பதற்கு நிறைய மின்சாரத்தைச் செலவு செய்கிறது.

யாருக்குத் தெரியும்? வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம்.

வருங்காலத்தில் நிறைய நாடுகள் இவ்வகையான செயற்கைக்கோளை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன்.

நல்ல செய்தி! நாம் செயற்கை நிலவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரண உதவிகளை செய்ய வழி செய்கிறது!

**4.** எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு, காதுக் கேட்கும் பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

**5.**
1. பாதை தெரியாத **இயற்கைக்** காடுகளில் பயணிக்கச் **செயற்கைக்** கருவிகள் பயன்படுகின்றன.
2. இராகவன் தன் நண்பன் **கொடு**த்த அளவுகோலைக் கொண்டு **கோடு** வரைந்தான்.
3. **கோள்**களின் இயக்கம் பற்றி அறிந்து **கொள்ள** வேண்டும்.
4. **சிறு** பொந்துக்குள் இருந்து பாம்பு **சீறு**வதைக் கண்டேன்.
5. இராமன், "**தான் தான்** குற்றவாளி" என்று **தாமே** ஒப்புக் கொண்டான்.
6. கண்ணனின் தலை**விதி** அவனை **வீதி**யில் நிறுத்தியது.

**கூடுதல்**

1. **கரம்** நடுங்கியதால் குளம்பில் மிளகாய்த்தூள் அதிகமர் கொண்டியதால் **காரம்** அதிகமானது.
2. **சதம்** வாங்கியதால் என் நண்பன் **சாதம்** வாங்கிக் கொடுத்தான்.
3. **மனதில்** உண்மை காத்து தன்**மானத்துடன்** வாழ வேண்டும்.
4. கத்தி என் **பாதத்தைப் பதம்** பார்த்தது.
5. யானைக்குத் தை**மாதம் மதம்** பிடித்திருந்தது.

**6.**
1. மீண்டும் மீண்டும்.
2. தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.
3. பெய்மழை.
4. பருப்பொருள்கள் சிதறுதல் (பெரு வெடிப்புக் கொள்கை).
5. நிலம், நீர், காற்று, நெருப்பு.

**7.** 1. கற்றல் 2. கரு 3. சோறு 4. எழுத்து 5. பூவில்

**கூடுதல்**

1. மழை 2. கல்வி 3. கதிரவன் 4. பாட்டு 5. அமைதி

**8.**
1. மீண்ட இன்பம்
2. கொடுக்காது சிவக்காது
3. மறைக்காது காட்டாதே
4. தொலைவில் நில்
5. சிறியவரின் இரைச்சல்
6. புயலுக்கு முன்

**கூடுதல்**

1. வேண்டாக் குப்பை
2. அன்பு காட்டு
3. பார்க்காமல் சென்றான்
4. தேவையோடு பேசு
5. உழைப்புக்கு ஊதியம் உண்டு

**9.**
1. ஒளி செய்தல், பீரல், விரிதல், பாடம் செய்தல்.
2. உட்டணம், எருக்கு, கள்ளி, கேட்டை நாள், கொடுவேலி, செவ்வாய், தீ, நரகம், வெப்பம், பொறாமை, அழுதல்.
3. அமாவாசி, இளமை, இளையோன், கடல், நிறைவு, பூரணை, யானை, வாலிபன், உகாமரம்.
4. இரவு, இருள், பரணி நாள்.
5. கொள்ளி, கொடுவேலி, கரியன், நெருப்பு, சூரியன்.

**10.** மாட்டிற்கு......
மூக்கணாங்கயிறு போடும்
மானிடப் பிறவிகளே!
இதோ......

உனக்கு
மூக்கணாங்கயிறு போட
வந்துவிட்டான்
திறன்பேசி நாயகன்''
திறன்பேசிக்கு
அடிமையானால்
இதுதான்....... நாளைய நிலைமை

**11.** 1. மீநுண் தொழில்நுட்பம்
2. உயிரித் தொழில்நுட்பம்
3. புறஊதாக் கதிர்கள
4. விண்வெளித் தொழில்நுட்பம்
5. விண்வெளிக் கதிர்கள்
6. அகச்சிவப்புக் கதிர்கள்

**12.** கபடி, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்.
கோலி, பம்பரம் போன்ற விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்,
நூலகத்திற்கு அழைத்துச் செல்வேன்.
சமூகசேவை செய்ய பழக்குவேன்.

## இயல் - 5

**பலவுள் தெரிக.**

1. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
2. அ) அருமை + துணை
3. இ) அறியாவினா, சுட்டுவிடை
4. இ) கல்வி
5. ஈ) மன்னன், இறைவன்

**பயிற்சிகள்**

1. 1. அறியாவினா, சுட்டுவிடை
2. வினா எதிர்வினாதல்

**கூடுதல்**

1. ஐய வினா, சுட்டு விடை
2. ஏவல் வினா, நேர் விடை

**2.** 1. அறியா வினா
2. நேர் விடை
3. அறியா வினா
4. நேர் விடை
5. ஐய வினா
6. வினா எதிர் வினாதல்

**கூடுதல்**

1. ஐய வினா
2. நேர் விடை
3. நேர் விடை
4. வினா எதிர் வினாதல்

**3.** 1. யாழிசை
2. கூடம்
3. எட்டிப் பார்த்தேன்
4. பேத்தி
5. நெட்டுரு
6. நீதிநூல் திரட்டு

**4.** 1. சொன்ன அம்மா
2. அம்மா நில்!
3. அரசன் தந்தார்
4. தந்ததைக் கேட்டார்
5. பார்த்தது துளிர்
6. துளிரே பார்!
7. வந்து நின்றான்
8. குழந்தையோடு வந்தான்

**கூடுதல்**

1. மீனா சென்றாள்
2. சென்ற மீனா
3. பெற்ற மணி
4. மணியே பெற்றார்
5. அரசர் உரைத்தார்
6. உரைத்ததைச் சொன்னார்
7. கண்ட செல்வி
8. செல்வியே கண்டாள்
9. போனது வந்தது.
10. பசுவோடு சென்றான்

**5.** 1. அழகிய குளிர்ந்த
2. பயன்தரும்
3. இன்பமும் துன்பமும் நிறைந்த
4. நன்னெறிக்
5. படைப்புத்திறன் மிக்க

**கூடுதல்**

1. நல்ல
2. மாபெரும்
3. செம்மையான நறுந்
4. பேரன்பு

**6.** காகம்

**கூடுதல் :** பூ

**7.** 1. புதையல் - புதைத்தல்
2. சுடுதல் - சுட்டல்
3. தொடுதல் - தொடுத்தல்
4. காட்சி - காணுதல்
5. நடித்தல் - நடிப்பு

**கூடுதல்**

1. விதைத்தல் - விளைச்சல்
2. படைத்தல் - படைப்பு
3. விடுத்தல் - விடுப்பு
4. தடுத்தல் - தடுப்பு

**8.** 1. திருமணம்
2. காலடிக்குறி
3. அகரவரிசை சொற்பொருள் நூல்
4. மழை, நீர்த்துளி
5. மயக்கம்

**9.** மரங்களை வெட்டிவிட்டு
மரம் பற்றி பாடம் நடத்தினால்
நாட்டுக்கு என்ன பலன்?
மரத்தை மறந்தான் மனிதன்
மரம் நமக்கு வரம்
மரம் நடுவோம்! மழை பெறுவோம்!!

**10.** வீட்டில் நான்:
வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன்.
அம்மாவுடன் சேர்ந்து பணிகளைச் செய்வேன்.
பாடத்தொடர்பான ஐயங்களை
எனது உடன்பிறந்தவர்களிடம் கேட்டு
தெரிந்துகொள்வேன்.
வீட்டுத் தூய்மையில் கவனம் செலுத்துவேன்.

பள்ளியில் நான்:
எனக்குத் தெரியாதவற்றை தெரிந்த
மாணவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்வேன்.
வகுப்பறைத் தூய்மையில் கவனம்
செலுத்துவேன்.

**11.** 1. சின்னம் 3. அறிவாளர்
2. ஆய்வேடு 4. குறியீட்டியல்

## இயல் - 6

**பலவுள் தெரிக.**

1. இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
2. இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
3. ஆ) தளரப் பிணைத்தால்
4. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
5. ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**பயிற்சிகள்**

**1.** கூத்து

தெருக்கூத்து அதன் பெயருக்கு ஏற்றாற்போல் தெருவில் நடக்கும் ஒரு மிகச் சிறந்த கலை. இதில் கிராமப்புற கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். இதன் கதைகள் பழங்காவியமான இராமாயணம், மகாபாரதம் மற்றும் பழைய புராணங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இதில் பழைய பாடல்களை உரையாடலுடன் கலைஞர்கள் உருவாக்குகிறார்கள். பதினைந்து முதல் இருபது கலைஞர்கள் சிறிய இசைக்குழுவாக சேர்ந்ததுதான் தெருக்கூத்து கூட்டம். இசைக்குழுவில் பல பாடல்கள் இருந்தபோதும் கலைஞர்கள் தங்கள் குரலிலேயே பாடுவார்கள். கலைஞர்கள் மிகச் சிறந்த உடையலங்காரமும் ஒப்பனையும் செய்திருப்பர். கிராமப் புறங்களில் கூத்துமிகவும் பிரபலமானது.

**2.** 1. அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.
2. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப் படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.
3. ஒயிலாட்டக் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.
4. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
5. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைபட்டது.

**கூடுதல்**

1. பாரதியார் எழுதுகோலை எடுத்தார். ஏட்டில் எழுதினார். கவிதையாக மலர்ந்தது.
2. நேற்று மழை பெய்ததால்ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது.
3. காமராசர் எளிமையாக வாழ்ந்ததார். அவர் மக்களால் போற்றப்பட்டார்

4. தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தது. கொரானோ பரவல் பெரும்பான்மை தடுக்கப்பட்டது.

**3.**

| பிறமொழிச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக்கட்டி |
| ஈக்வலாக | சமமாக |
| வெயிட் | எடை |
| எக்ஸ்பெரிமெண்ட் | பரிசோதனை |
| பட் | ஆனால் |
| ரிப்பீட் | மறுபடி |
| ஆன்சரை | விடையை |
| ஆல் தி பெஸ்ட் | எல்லாம் நன்மைக்கே! |

**4.** 1. அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கி விடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நீரூற்றுதலைத் தொடர்கிறாள்.

2. வரப்புகளுக்கு இடையே நின்று வயலில் வேலை செய்யும் விவசாயி ஒருவன் தனக்கு கல்வியறிவு இல்லாத காரணத்தினால் தான் படும் துன்பத்தை எண்ணி வருத்தத்துடன் பாடிக்கொண்டே தன் வேலையைச் செய்கிறான்.

**5.** அழகைக் கொண்டு பூ கவருகையில்
அப்பூக்களிடம் பணிவது மனிதர்களே!

**கூடுதல்**

அதில் நல்லவர் நட்பு வளர்பிறையாகும்
தீயவர் நட்பு தேய்பிறையாகும்

**6.**
1. கருக்கத்
2. சிவந்தது
3. வெள்ளை
4. பச்சை, மஞ்சள்
5. கருத்து

**கூடுதல்**
1. மிகவும்
2. மலரும்
3. மகிழும்
4. வண்ண
5. இனிப்புச் சுவையை

**7.**
1. மரம் வீடு; மரவீடு.
2. அவிழும்; கவிழும்.
3. தங்கும்; தயங்கும்.
4. தோற்பவை; தோற்பாவை
5. விருது; விருந்து

**கூடுதல்**
1. மகிழும்; நெகிழும்
2. நாடு; வீடு
3. உண்மை; பொய்மை
4. மரம்; தவம்
5. மறந்தான்; மருந்தை

**8.**
1. தாலாட்டு, தாலு, பிள்ளைக் கவியுறுப்பில் ஒன்று, நாக்கு.
2. ஒருவித மீன், புலி, தும்பிலி
3. அழைத்தல், ஆடல், கூத்தாடல்
4. மிக்க அழகு, மிகு வனப்பு
5. சமீபம், அருகு, நுட்பம், நுண்மை.

**9.** ஆடுவோம்
ஆடுவோம் மேள தாளத்தோடு
பாடுவோம் பம்பை உடுக்கையோடு
வண்ண துணியசைத்து
வட்டமாய் ஆடுவோம்
வரிசையாய் ஆடுவோம்
எண்ணக் கருத்துகளை
எல்லோருக்கும் கூறுவோம்
துன்பமில்லா சமுதாயத்தை
ஆட்டத்தால் ஆக்குவோம்

**10.** 1. பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.

2. எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.

3. திருமண விழாக்களில் பொய்க்கால் ஆட்டத்தை நடத்துவேன்.

4. விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.

5. கோவில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் முதலிய கலைநிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வேன்.

6. விடுமுறை காலங்களில் தெருக்கூத்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்வேன்.

**11.** 1. அழகியல், முருகியல்
2. கலைச்சொல்
3. கலைப் படைப்புகள்
4. தொன்மம்

## இயல் - 7

### பலவுள் தெரிக.

1. இ) உழவு, ஏர், மண், மாடு
2. அ) திருப்பதியும் திருத்தணியும்
3. ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
4. இ) வலிமையை நிலைநாட்டல்
5. ஈ) சிலப்பதிகாரம்

### பயிற்சிகள்

1. பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

**2.** மருத நிலம்

பண்டைய சங்க இலக்கிய காலத்தில், பூகோள அடிப்படையில் (நில அமைப்புப்படி) தமிழ்நாடு ஐந்து வகையாக இருந்தது. அவற்றுள் மருத நிலப்பகுதியே உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் இருந்தது. அந்த நிலப்பகுதியில் விவசாயிகள் (உழவர்கள்) பயன்பெறும் வகையான தேவையான பருவ காலங்கள் சிறந்திருந்தது. தேவையான சூரிய வெப்பம், வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் விவசாயம் செழித்தது. மருத நிலத்தின் இயற்கைக் கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருதநிலத்தில் உழவுத்தொழில் சிறந்திருந்தது.

**3.** 1. என் நண்பன் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன் என்றான்.
2. எங்கள் நாடு பஞ்சம் இல்லாமல் இருக்கிறது.
3. சங்ககாலத்தில் மன்னர்களுக்கு காதலும் வீரமும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.
4. முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது நன்றன்று.
5. எனக்கு பிடிக்காத நிகழ்வுகளை மறக்க நினைக்கிறேன்.

**கூடுதல்**

1. நண்பனை நாளை விளையாட வரச் சொல்கிறேன்.
2. ஏழையாக இருந்தும் தான் தன்னம்பிக்கை கொள்கிறேன்.
3. பேச்சுப் போட்டியில் வெற்றி வாகை சூடினேன்.
4. ஏழையாகவே என் வாழ்க்கை கழிந்தது.
5. துன்பம் ஒருநாள் கடந்து போகும்.

**4.**

| தொகைச் சொற்கள் | எண்ணுரு |
|---|---|
| மூவேந்தர்: மூன்று + வேந்தர் | (மூன்று - ௩) |
| நாற்றிசை: நான்கு + திசை | (நான்கு - ௪) |
| முத்தமிழ்: மூன்று + தமிழ் | (மூன்று - ௩) |
| இருதிணை: இரண்டு+திணை | (இரண்டு - ௨) |
| முப்பால்: மூன்று + பால் | (மூன்று - ௩) |
| ஐந்திணை: ஐந்து + திணை | (ஐந்து - ௫) |
| அறுசுவை: அறு + சுவை | (ஆறு - ௬) |

**கூடுதல்**

| | |
|---|---|
| முத்தமிழ்: மூன்று + தமிழ் | (மூன்று - ௩) |
| முப்பால்: மூன்று + பால் | (மூன்று - ௩) |
| இருவினை: இரண்டு+வினை | (இரண்டு - ௨) |
| ஐந்திணை: ஐந்து + திணை | (ஐந்து - ௫) |
| நாற்றிசை: நான்கு + திசை | (நான்கு - ௪) |
| ஐம்பொறி: ஐந்து + பொறி | (ஐந்து - ௫) |

**5.**

| |
|---|
| அம்மா! என் காதுக்கு ஒரு தோடு வாங்கித் தாங்கம்மா! தோடு இல்லாமல் வெறுங்காதோடு என்னால் இருக்க முடியாது... சொல்லிட்டேன். |
| காதிற்குத் தங்கக் கம்மல் மட்டும் அழகு கிடையாது. நான் சொல்வதைக் கவனித்து பணிவான சொற்களையும் நல்ல கருத்துகளையும் உன் காதுகளுக்கு அணியாக அணிந்து கொள். |
| கைக்கு இரண்டு வளையல்கள் கடன் வாங்கியாவது எனக்கு வாங்கித்தா அம்மா பக்கி வளையல் இல்லையா- என்று பள்ளியில் என்னைக் கேலி செய்கிறார்கள். |
| மகளே..... நம்மைத் தேடி வரும் விருந்தினரை மகிழ்ச்சியுடன் உபசரித்தலே வளையல் .... அறிவார்ந்த மகளே கேள்... அவர்கள் சொல்லும் வளையல்... உனக்கு கை விலங்கு. |

| |
|---|
| அணிகலன்கள் இல்லாமல் தெருவில் போனால் என்னை யார் தான் மதிப்பார்? இதைச் சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது. என் குறையை நீக்க மாட்டாய்... |
| கல்விதான் பெண்களுக்கு உண்மையான அணிகலன்; மாணிக்கக்கல் வைத்த அணிகலன் தீராத ரணத்தையே தரும் மகளே; கல்வி என்னும் அணிகலன் அணிந்த பெண்களை இந்நாடு கண்ணுக்குள் வைத்துப் போற்றும் என்பதை உணர்ந்துகொள். |

**6.** தஞ்சை, புதுகை, திருச்சி, உதகை, கோவை, நாகை, புதுவை, குடந்தை, நெல்லை, மன்னை, மயிலை, சைதை.

**7.** பகை கொண்ட வேற்று நாட்டு மன்னனை எதிர்த்துப் போரிட வஞ்சிப்பூ சூடி வென்றே தீருவோம் என குதிரைப்படை, காலாட்படை, யானைப்படையோடு முன்னேறிச் செல்லும் 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம் ஆகும்.

**8.**
1. மிளகு
2. பிழைப்பு, தொழில், பெருகுதல், மானிய உரிமை, சம்பளம்.
3. சணல்
4. வெளவால் வகை, சீக்கரி மரம்.

**9.**
கிழக்கு வெளுத்தது
பொழுது புலர்ந்தது
அரைகுறை உறக்கத்திலும்
எழுந்தான் ஆர்வத்தோடு
தோளிலே ஏற்றினான் ஏரினை.....
சந்ததிகள் செழித்து வளர
பசித்தவனுக்குப் பசியாற்ற.....
பகலவனை வணங்கி
உணவைப் படைக்க
புறப்பட்டு விட்டான்.
அரை நிர்வாணத்தோடு.....

**10.**
1. துணைத்தூதரகம்
2. வணிகக்குழு
3. காப்புரிமை
4. பாசனம்
5. ஆவணம்
6. நிலப்பகுதி

**11.** கல்வெட்டு மன்னர்களைப் பின்பற்றி நாட்டுப்பற்றை வளர்க்கலாம் என்பதை உணர்த்துவேன்.
வரலாற்று சாசனம் என்பதை உணரச் செய்வேன்.
கல்வெட்டு கூறும் இலக்கிய, கலை வரலாற்றை மக்கள் அறியச் செய்வேன்.

## இயல் - 8

### பலவுள் தெரிக.

1. அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
2. ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
3. இ) இடையறாது அறப்பணி செய்தலை
4. அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது
5. அ) அகவற்பா

### பயிற்சிகள்

**1.**

முன்பொருநாள் ரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் கடவுள் எப்படியாவது யார் மூலமாவது எனக்கு உதவுவார் என்று கண்ணீர் விட்டான். இரண்டாம் பிச்சைக்காரன் மன்னனைப் புகழ்ந்து பாடினால் மன்னன் காப்பான் என்றான். தினமும் இருவரும் இப்படியே சொல்லிக்கொண்டு இருந்தார்கள்.

ரோம் அரசர் தன்னைப் பற்றிப் பேசிப் புகழ்ந்து எப்படியாவது தான் பாதுகாப்பேன் என்று நம்புகிற பிச்சைக்காரனுக்கு உதவ விரும்பினார்.

நீளமான ரொட்டிப் பொட்டலத்தில், ரொட்டித் துண்டுகள் நடுவே சில பொற்காசுகளை வைத்துக் கொடுத்தான்.

இரண்டாம் பிச்சைக்காரன் ரொட்டித் துண்டு பொட்டலம் கனமாக இருக்கிறது; விற்றால் பணம் சம்பாதிக்கலாம் என்று முதல் பிச்சைக்காரனான நண்பனிடம் விற்றுவிடுகிறான்.

இப்படியே ரொட்டித் துண்டை தினமும் விற்கிறான். அதனை வாங்கும் முதலாம் பிச்சைக்காரன் ரொட்டித்துண்டை வெட்டிப்பார்த்தால் தினமும் பொற்காசுகள் மின்னின.

தினமும் கடவுளுக்கு நன்றி சொல்லி பொற்காசுகளை எடுத்து வைத்து சேர்த்து வைத்தான். பிச்சை எடுப்பதை நிறுத்தி விடுகிறான்.

இரண்டாம் பிச்சைக்காரன் தொடர்ந்து வீதிகளில் பிச்சை எடுத்துக்கொண்டே இருக்கிறான். மன்னன்

அவனை அழைத்து நான் கொடுத்த ரொட்டிப் பொட்டலங்களை என்ன செய்தாய் என்று கேட்டார்.

அது எடுத்துச்செல்ல கனமாக இருந்தபடியால் என் பிச்சைக்கார நண்பனிடம் அதனை விற்றுவிட்டேன் என்றான்.

மன்னர் தனக்குள் நினைத்துக்கொண்டார். "கடவுள் தன்னைத் தேடுபவர்களுக்கு உண்மையிலே யார் மூலமாவது உதவுகிறார்" இரண்டாம் பிச்சைக்காரனிடம் திரும்பி, 'சரி நீ போகலாம்' என்று அரண்மனையில் இருந்து வெளியேறச் சொன்னார்.

**2.**

1. படிக்காமலே தேர்வில் வெற்றி பெற்றுவிடலாம் என்று சில மாணவர்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள்.
2. கண்ணும் கருத்தாய் கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.
3. பணத்தைக் கணக்குப் பார்க்காமல் அள்ளி இறைத்தால் விரைவில் வறுமைநிலை அடைவாய்.
4. பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாது ஆறப்போடுதல் அநேக தீயவிளைவுகளைத் தடுக்கும்.

**கூடுதல்**

1. செல்வத்தை மட்டுமே அள்ளிக் குவிக்க அனைவரும் விரும்புகின்றனர்.
2. ஆடையில்லா மனிதன் அரைமனிதன்.
3. படிக்காதவன் தேர்ச்சி பெறுவேன் என்று ஆகாயக் கோட்டை கட்டக்கூடாது.
4. புதையலைத் தேடி அலைவது இலவு காத்த கிளி போலத் தான்.
5. பள்ளி விடுமுறை என்று காது குத்தாதே!

**3.** "தம்பி எங்கே நிற்கிறாய்?"

"நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறது."

"அங்கேயே தேநீர் சாப்பிட்டுவிட்டு, செய்தித்தாள் படித்துக்கொண்டிரு. நான் விரைவாக வந்து விடுகிறேன்."

"அண்ணா! சண்முகத்தையும் கூட்டிக்கொண்டு வாருங்கள் அண்ணா! அவனைப் பார்த்து அதிக நாட்களாகிவிட்டன."

"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்."

"நிறைய நாளுக்கு முன்னால் சின்ன வயதில் பார்த்தது அண்ணா. அப்போது அவனுக்கு மூன்று வயது இருக்கும்."

"இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான். உனக்கு அடையாளமே தெரியாது. ஊருக்கு என்னுடன் வருவான். பார்த்துக்கொள். சரி. தொலைபேசியை வைத்துவிடு. நான் புறப்படுகிறேன்."

"சரி அண்ணா!"

**4.** **ஒன்று:**

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

**இரண்டு:**

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்.

**மூன்று:**

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

**நான்கு:**

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்காறு இயன்றது அறம்.

**ஐந்து:**

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

**ஆறு:**

படைகுடி கூழ்அமைச்சு நட்பரன் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

**ஏழு:**

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

**எட்டு:**

கோயில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை.

**ஒன்பது:**

ஒன்பது என்ற எண்ணை திருவள்ளுவர் தம் நூலில் எங்கும் பயன்படுத்தவில்லை.

**பத்து:**

நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

5. 1. கான் அடை - காட்டைச் சேர்
கான் நடை - காட்டுக்கு நடத்தல்
கால் நடை - காலால் நடத்தல்
2. வரும் தாமரை - தாமரை மலர்
வரும் தா மரை - தாவும் மான் வருகிறது.
வருந்தா மரை - துன்புறாத மான்
3. பிண்ணாக்கு - எள், கடலை ஆட்டும்போது கிடைப்பது.
பிள் நாக்கு - பிளவுபட்ட நாக்கு
4. பலகை ஒலி - பலகையால் ஏற்படும் ஒலி
பல கை ஒலி - பல கைகள் தட்டும் ஒலி.

**கூடுதல்**

1. வெங்காயம் - வெம்மை காயம் - வெறுமையான காயம்
வெங் காயம் - வெறுமையான உடம்பு
2. சீரகம் - சீர் அகம் - சீரான உடம்பு
சீ ரகம் - வீடுபேறு
3. பெருங்காயம் - பெரு காயம் - பெரிய புண்
பெருமை காயம் - பெரிய உடல்
பெரு மை காயம் - பெரிய கருமையான உடல்

6. 1. கொடுத்தப் பொருளை உடனே பாடும் பாட்டு.
அப்பாடலைப் பாடும் புலவன்.
2. இனிமை பெருகப் பாடும் கவி.
சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய பாட்டு.
3. சித்திரத்தில் அமைத்ததற்கு ஏற்ப பாடும் இறைக்கவி, 21 நயங்களில் கவிதை இயற்றுபவர்
4. விரித்துப் பாடப் பெறும் பாட்டு.
விரிவாகப் பாடும் நூல்.

7. 1. நம்பிக்கை
2. மறுமலர்ச்சி
3. மெய்யியலாளர்
4. மீட்டுருவாக்கம்

8. "மனம் நொந்து மறுகி
கேட்கவும் நா எழாது
வாழவும் வகை யறியாது
இரத்தலே வழி என்பதை
இறுதி முடிவு ஆக்கி
"ஈயென" இரத்தல் கொடிது
இரக்கத்துடன் ஈவாரைத்
தடுத்தல் அதனினும் கொடிதன்றோ"

9. தேவையற்ற சண்டையைப் பகையை தவிர்த்து, அனைவருடனும் அன்பாய் வாழலாம்.
மன அமைதி பெறலாம். நண்பரிடத்தும், உறவினரிடத்தும் நற்பெயர் பெறலாம்.
உண்மை நம் வாழ்வை உயர்த்தும் அச்சமின்றி வாழலாம்.

## இயல் - 9

**பலவுள் தெரிக.**

1. ஈ) தலையில் கல் சுமப்பது
2. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
3. அ) கருணையன், எலிசபெத்துக்காக
4. இ) உருவகம்
5. ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

**பயிற்சிகள்**

1. 1. ஒரு பள்ளியில் கற்றுக்கொண்டதை மறந்து விட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்னே!
2. இவ்வாரத்தில் நாளை ஒருநாள் மட்டுமே அதிக வேலைப்பளு உள்ளது.
3. நம் இருண்ட தருணங்களிலும் ஒளியைப் பார்ப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.
4. வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பதும் விதியல்ல. இரண்டுக்காகவும் தொடர்ந்து முயற்சியுடனும் ஊக்கத்துடனும் செயல்படுவதே எண்ணப்படும்.

2. 1. என் நண்பன் தாமரை இலைநீர் போலப் பட்டும் படாமலும் பழகுவான்.
2. தாயை இழந்த கருணையன் மழை முகம் காணாப் பயிர்போல வாடினான்.
3. இறைவன் அனுதினமும் நம்மைக் கண்ணினைக் காக்கும் இமைபோலக் காத்துக் கொண்டு இருக்கிறார்.
4. சிறுவயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலைமேல் எழுத்து போல் மனதிலே நிலைத்து நின்று நம் வாழ்வை வழி நடத்தும்.

**கூடுதல்**

1. ஆலை அகப்பட்ட கரும்பு போல தொழிலாளிகள் உழைக்கின்றனர்.
2. மழையும் மரமும் உயிரும் உடம்பும் போன்றது.
3. சட்டம் காக்க வேண்டிய காவலர்கள் சட்டைத்தை மீறுவது வேலியே பயிரை மேய்ந்து போலத் தான்.
4. கோவலன் இறந்த செய்தி கேட்ட கண்ணகி இடியோசை கேட்ட நாகம் போல அதிர்ந்தாள்.

**3.** சேரனின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலை'யை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**4.** கம்பன், உமறுப்புலவர், ஜவ்வாதுப் புலவர், அபுல் காசிம், குணங்குடி மஸ்தான், சேக்கிழார், செய்கு முதலியார்.

**5.** **''சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு'' விழா**

ஜனவரி 18, நெல்லை.

நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு விழா கொண்டாடப்பட்டது. போக்குவரத்துக் காவல்துறை ஆய்வாளர் தலைமையேற்றார். சாலைக் குறியீடுகளை விளக்கி, குறியீடுகள் உணர்த்துவதை மனதில் கொண்டு கட்டுப்பாட்டுடன் கூடிய வேகத்தில் வாகனத்தை ஓட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார். குழந்தைகள் மாணவர்கள் மனதில் சாலைவிதிகளைப் பதித்து விழிப்புணர்வுடன் வளர்க்க அறிவுறுத்தினார். தலைக்கவசம், நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது இருக்கை பட்டை கட்டாயமாக போட்டுக்கொள்ள வேண்டும் என்றார். சாலை விபத்தினால் ஏற்படும் மரணங்களை நம் விழிப்புணர்வால் தடுத்து விடலாம் என்றார். நிறைவாக வருகை தந்திருந்த பெரியோர், குழந்தைகள், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இணைந்து "சாலை விழிப்புணர்வை வலியுறுத்தி'' மாரத்தான் தொடர் ஓட்டம் நிகழ்த்தினர்.

**6.**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | ௧ | ௨ | ௩ | ௪ |
| ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ | ௧௧ |
| ௧௨ | ௧௩ | ௧௪ | ௧௫ | ௧௬ | ௧௭ | ௧௮ |
| ௧௯ | ௨௰ | ௨௧ | ௨௨ | ௨௩ | ௨௪ | ௨௫ |
| ௨௬ | ௨௭ | ௨௮ | ௨௯ | ௩௰ | | |

**7.**
1. முனிவன், நற்குணமுள்ளவன்.
2. நேர்மை, மிகுதி, வழி செப்பம், சரியான நிலை.
3. சிரிக்கை, மகிழ்ச்சி, நட்பு, படி, ஏளனம்.
4. கொள்கை, வலிமை, மனஉறுதி, சிங்கம், யானை.

**8.**
அறம் என்பது
வலக்கைக் கொடுப்பது
இடக்கைக்குத் தெரியக்கூடாது - இது
தர்மத்தின் வேர்
அறமும் நியதியும்
அக்காலமும் இக்காலமும் உண்டு
தர்மம் செய்வது விளம்பரமல்ல
தாழ்ந்தோர் உயர்வு பெற
சுயப்படம் எடுத்து
வலைதளம் அனுப்பும்
வழக்கமே இன்று அறமா?

**9.** **உதவி**

பேருந்தில் பயணம் செய்தபோது உடன் பயணம் செய்த முதியோருக்குப் பயணச் சீட்டு எடுத்துக்கொடுத்து உதவியபோது.

ஒருவேளை உணவு வழங்கிய போது.

**மனநிலை**

மனநிறைவும், அவரது முகத்தின் அமைதியும், மகிழ்ச்சியும் என்னையும் மகிழச் செய்தது.

பசிப்பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

**10.**
1. மனித நேயம்
2. பண்பாட்டு எல்லை
3. அமைச்சரவை
4. பண்பாட்டு விழுமியங்கள்

★★★★★

## குறிப்புகள்

★★★★★